விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை (11.11.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 328

# நல்லிணக்க செயற்பாடுகளை

# விரைந்து அமுல்படுத்துங்கள்



## இலங்கை அரசிற்கு பான் கீ மூன் அறிவுறுத்தல்

(நியூயோர்க்)

இலங்கை அரசாங்கம் காலதாமதமின்றி நல்லிணக்க செயற்பாடுகளை மேற்கொண்டு அங்குள்ள தமிழ் மக்களின் மனித உரிமைகள் மற்றும் பாதுகாப்பை விரைந்து உறுதிப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## புதிய தூதுவர்கள் உயர் ஸ்தானிகர் நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்கான மூன்று புதிய வெளிநாட்டுத்தூதுவர்களும், உயர்ஸ்தானிகர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரஷ்யா, பனாமா ராஜ்ஜியம், இந்தோனேசியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து புதிய ராஜதந்திரிகள் (23ஆம் பக்கம் பார்க்க)

## உதுல் பிரேமரட்ண நேற்றுக் கைது

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான உதுல் பிரேமரட்ண நேற்று மாலை பொறலஸ்கமுவ பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தனியார் பேருந்து பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கான தனியார் பேருந்துகளின் உரிமையாளர் களினால் முன்னெடுக்கப்பட்ட பணிப் புறக்கணிப்பு நேற்று மாலை 2 மணியுடன் கைவிடப்பட்டதாக யாழ். மாவட்ட வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் பொன்னுத்துரை கங்காதரன் தெரிவித்தார்.

தீபாவளிப்பண்டிகையை முன்னிட்டு பொதுமக்களின் நன்மை கருதியும் (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை–தெ.கொரியா விமானசேவை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கும் தென்கொரியாவுக்கும் இடையேயான விமான சேவை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கும் தென் கொரியா தலைநகர் சியோலிக்கும் இடையிலான விமான சேவையினை அடுத்த மாதம் ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கைக்கான (23ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை மோதலில் உயிரிழந்தோர் 27ஆக உயர்வு!

### 11 சடலங்கள் நேற்று மீட்பு

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலைக்குள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற துப்பாக்கி மோதல் காரணமாக மேலும் 11 சடலங்கள் நேற்று சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளதுடன் உயிரிழந்துள்ளவர்களின்எண்ணிக்கை27ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை 70 இற்கும் மேற்பட்ட ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் (24ஆம் பக்கம் பார்க்க)

## சர்வாதிகார திசையில் இலங்கை அரசு பயணம்

### கருணாநிதி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் ராஜபக்ஷ அரசாங்கம் தொடர்ந்து சர்வாதிகாரம் என்னும் திசையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது என்று தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருணாநிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ராஜபக்ஷ அரசு ஈழத் தமிழர்களின் கோரிக்கைகளை நசுக்குவதற்காக (23ஆம் பக்கம் பார்க்க)

## 13 குறித்து ரணிலும் விமலும் கலந்துரையாடல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அரசாங்க அமைச்சருமான விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினரும் நேற்று விசேட சந்திப்பு ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதன் (23ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தை வைத்தே எங்கும் அடக்குமுறை!

### முன்னிலை சோஷலிசக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

இலங்கைஅரசாங்கம்அனைத்து துறைகளையும்தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இராணுவவாத முறையை கடைப்பிடிப்பதாக முன்னணி சோஷலிசக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெலிக் (23ஆம் பக்கம் பார்க்க)

## துவிச்சக்கர வண்டி-பஸ் விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் பலி

(பளை)

வீதியை கடக்க முற்பட்ட வேளை துவிச்சக்கர வண்டி – பஸ் விபத்துக்குள்ளானதில் குடும்பப்பெண் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் ஏ9 வீதியில் பளைக்கும் புதுக்காட்டுக்குமிடையில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த மூன்று பெண் பிள்ளைகளின் தாயாரான ரவீந்திரன் நகுலேஸ்வரி (வயது 36) என்பவரே பலியானவராவார்.

இதுதொடர்பில்மேலும்தெரியவருவதாவது, பளை தர்மக்கேணி சின்னத் தாளையடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான இவர் பளையில் (23ஆம் பக்கம் பார்க்க)

## ‘கொமாண்டோ’ நடவடிக்கையே சிறைச்சாலையை கட்டுப்படுத்தியது

### வெலிக்கடை மோதல் குறித்து பொலிஸ் தரப்பு விளக்கம்

(கொழும்பு)

கொமாண்டோ படைப்பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட சுமார் ஒரு மணித்தியால விசேட இராணுவ நடவடிக்கையின் மூலம் வெலிக்கடைச் சிறைச்சாலையின் கலவரம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்றுசிரேஷ்டபிரதிப்பொலிஸ்மாஅதிபர் அநுர சேனநாயக்கா தெரிவித்தார்.

இந்த இராணுவ முன்னெடுப்பில் ஈடுபட்ட இராணுவவிசேடகொமாண்டோ படைப்பிரிவைச் சேர்ந்த 6 வீரர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மேற்படி கலவரத்தைத் தூண்டிஅதற்கு தலைமை வகித்துடன் படையினருடன் நேருக்குநேர் மோதிய (24ஆம் பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல் வாழ்த்துக்கள்
SINGER
சிங்கர்
யாழ் மண்ணின் பாரம்பரைத் தோழன்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389
கொடிகாமம் 0776433888.
சங்கானை 077 2208232
சுன்னாகம். 021 224 0555
நெல்லியடி. 021 226 4937
பருத்தித்துறை 021 226 3411
கிளிநொச்சி 077 4685771
மானிப்பாய். 021 225 5343
சாவகச்சேரி 021 227 0197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பரிதி படுகொலை செய்யப்பட்டது கொடுந்துயர் சம்பவம்-வைகோ

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பரிதி பிரான்சில் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்து வைகோ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் கடந்த நவம்பர் 8ம் திகதி இரவு தமிழ் ஈழ மக்களுக்கு மேலும் ஓர் துன்ப இரவாக ஆகிவிட்டது. ஆம் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளுள் ஒருவரும் பிரான்ஸ் நாட்டின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளருமான கேணல் பரிதி எனப்படும் நடராஜா மதிதரன் பாரிஸ் நகரத்தில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அலுவகத்தை விட்டு வெளியே வந்தபோது மர்ம நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி என் இதயத்தில் ஈட்டியாக பாய்ந்தது.

நான் உயிராக நேசித்த விடுதலைப்புலிகளின் தளபதிகளுள் பரிதியும் ஒருவர். 1989ஆம் ஆண்டு தொடக்கத்தில் வன்னிக் காடுகளில் இடைவிடாத இந்திய-சிங்கள இராணுவத் தாக்குதல்களுக்கு நடுவே வான்வெளிக் குண்டு வீச்சுக்கும் பீரங்கித் தாக்குதல்களுக்கும் ஊடே பிரபாகரனோடு நான் இருந்த நாட்களில் நடைபெற்ற நிகழ்வுகளை எல்லாம் கடந்த ஆண்டு மே 30ஆம் திகதி பாரிஸ் நகரத்தில் நூற்றுக் கணக்கான ஈழத் தமிழர்களை நான் சந்திக்க ஏற்பாடு செய்துதந்த நிகழ்ச்சியின்போது உணர்வுபூர்வமாக நினைவு கூர்ந்ததை எண்ணும் போது மனம் பாறையாய்க் கனக்கிறது.

பெல்ஜியம் தலைநகர் பிரஸெல்ஸில் கடந்த ஆண்டு யூன் முதலாம் திகதி நடைபெற்ற ஈழத்தமிழர் கருத்தரங்கில் பங்கேற்கச் சென்றபோது, மே 30ஆம் திகதி பாரிஸ் நகரத்திற்குச் சென்றேன். அங்குதான் ஈழத் தமிழர்களை நான் சந்திக்க சகோதரர் பரிதி ஏற்பாடு செய்திருந்தார்.

1990ஆம் ஆண்டு யுத்தத்தில் காயமுற்று கால்நடக்கமுடியாத நிலையில் சென்னைக்கு வந்து சிகிச்சை பெற்றார். பின்னர் பிரான்ஸ் நாட்டின் புலிகளின் பொறுப்பாளர் ஆக்கப்பட்டார்.

பிரான்ஸ் நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்ட பின் பரிதி கைது செய்யப்பட்டு நீண்ட நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இயக்கத்தின் பல முயற்சிகளால் அவர் விடுதலையானார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை இனவாத அரசின் உளவுத்துறையின் பின்னணியில் கொடியோரால் ஆயுதங்களால் தாக்கப்பட்டு படுகாயமுற்று உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று மீண்டார்.

இவ்வாண்டு மாவீரர் நாள் நிகழ்ச்சிகளை முனைப்பாக ஏற்பாடு செய்துவந்த நிலை யில் கேணல் பரிதி நிராயுதபாணியாக அலுவலகத்தை விட்டு வெளியே வந்தபோது சுட்டுக் கொல்லப் பட்டார்.

இலங்கை அரசின் புலனாய்வுத் துறையினரின் கொடுஞ்செயலால் ஒரு வீரச் சகோதரனை தமிழீழம் இழந்துவிட்டது.

பரிதியின் துணைவியாரையும் அவரது பிள்ளைகளையும் எண்ணுகையில் தாங்க முடியாத துக்கம் மேலெழுகிறது.

அந்த வீரத் திருமகனுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கண்ணீர் அஞ்சலியையும் வீர வணக்கத்தையும் சமர்ப்பிக்கிறேன்.

தலைமைக்கும் இயக்கத்திற்கும் தமிழீழ விடுதலை இலட்சியத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட மாவீரர் பரிதி, எந்தக் குறிக்கோளுக்காக இறுதி மூச்சு அடங்கும்வரை போராடினாரோ அந்த சுதந்திர தமிழீழ இலட்சியத்தை வென்றெடுக்க துயர்சூழ்ந்த இந்த நேரத்தில் சபதம் ஏற்போம் என்று அவர் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

(ரு-11)


## செல்லா சினிமா- யாழ்ப்பாணம்



சமுத்திரக்கனி, யுவன், மகிமா மற்றும் பலர் நடிப்பில்

10.30 2.30 6.30

A/C D.T.S

13ம் திகதி முதல் விஜயின் துப்பாக்கி

ஆசன முற்பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும்

## அழகுக்கலை பயிற்சி வகுப்புக்கள்



அனைத்து வகையான அழகுக்கலை வகுப்புக்களும் இலவசமாக விரிவான செய்முறை விளக்கங்களுடன் கற்பிக்கப்பட்டு சர்வதேச தர சான்றிதழ்கள் வழங்கப்படும்.

* இச் சான்றிதழ் வெளிநாடு செல்பவர்களுக்கு மிகச் சிறந்தது
* பயிற்சி நெறிகள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நடாத்தப்படுகின்றன.

(932)

தொடர்புகளுக்கு : 077 420 5426

## பகுதிநேர வேலை வாய்ப்பு



ஒறிபிறேம் சுவீடன் நாட்டு நிறுவனத்தில் பகுதிநேர தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள தரப்பட்டுள்ள இலக்கத்திற்கு உங்கள் பெயர், முகவரியை அனுப்பி / தொடர்புகொண்டு உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்.

* அழகுசாதன துறையிலுள்ள பெண்கள்
* இல்லத்தரசிகள்

வீட்டிலிருந்தவாறே அதிக வருமான மீட்டலாம்.

(932)

தொடர்புகளுக்கு : 077 420 5426

## - தபால் மூலம் - ஆறு மாத கால டிப்ளோமா

Course Length - Six Month

24 வருட அனுபவம்

Nov 2012-Apr 2013

தமிழ் மொழி மூலம்

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.11.2012

(C-1467)

## LL.B (UK) கற்கை நெறி

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது



* உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
* இலங்கை மற்றும் Uk பாட விதானங்களை உள்ளடக்கியது.
* யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
* இலகு தவணை கொடுப்பனவு முறை.
* இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்.

(C-1475)

Prince City Campus

இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 0775949272

ஆசிரியர் முத்துலிங்கத்தின் EASY ENGLISH
விபரங்கள் + பெயர்பதிவு : 773212711 மூலம்

## Diploma in English

ஆங்கிலம் இனிமேல் தடையில்லை



* இந்தக் கற்கை நெறியானது மிகக் குறுகிய காலத்துக்குள் சரளமாக ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க உங்களை தயார்ப்படுத்துகிறது.
* அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்.
* குறைந்த கட்டணம் மற்றும் இலகு தவணை கொடுப்பனவு வசதி.
* நவீன வகுப்பறைகள்
* உலகத் தரம் வாய்ந்த சான்றிதழ்

பதிவுகள் ஆரம்பம்
உங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

(C-1474)

PRINCE CITY CAMPUS
No. 275, Clock Tower Road, Jaffna.
Tel: 021-492 3855, Hotline: 0775 949 272
Find us on Facebook www.facebook.com/pcclanka

## UK-USA-Australia-New Zealand-Malaysia-Etc...

வெளிநாட்டு உயர்கல்வி



விரும்பிய நாட்டில் விரும்பியதுறையில், கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி தொடர வேண்டுமா?

Admission முதல் VISA பெற்றுக்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கின்றது 13 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த PAC ASIA மற்றும் BCAS CAMPUS.

எதிர்வரும் 16ம்17ம் திகதிகளில் இந்நிறுவனங்களின் சிரேஷ்ட மாணவ ஆலோசகர்களை தனிப்பட்ட முறையில் சந்தித்து புதிய VISA நடைமுறைகள் மற்றும் தொழில் கல்வி வழிகாட்டல்களை பெற்றுக்கொள்ளுங்கள். இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.

(C-1482)

எமது சேவை முற்றிலும் இலவசம்

முதல் 20 பேருக்கு விமானச் சீட்டு இலவசம்

இடம் : IISEES NALLUR CAMPUS
762, Point Pedro Road, Nallur.

MIGRATION, VISIT னை பெற்றுக்கொள்வதற்கான விசேட ஏற்பாடுகளும் உண்டு.

PAC ASIA STUDY ABROAD — BCAS STUDY ABROAD

(C1482)

தகவல்களுக்கு : 0777444225, 0774446626, 021 222 4728

## குழந்தையின்மையா? கவலை வேண்டாம்

உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு- முழுமையாக குணமடைய
உலகிலேயே NO:1 வைத்தியம்



பல தடைகள் போராட்டங்களிற்கு மத்தியில் தடைப்பட்டிருந்த எனது சேவை மீண்டும் தமிழ் மக்களிற்காக தொடரும்...

**குழந்தையின்மை:** குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

செல்: 0091 9842457673
இலங்கைச் செல்: 0754154364

(C-1483)

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை
இராமபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி தாக்கப்பட்ட சம்பவம் கண்டிக்கத்தக்கது – ஐ.ம.முன்னணி

(கொழும்பு)

கொழும்பு- யாழ். செல்லும் தனியார் பேருந்து ஒன்றின் சாரதி மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமானது மிகவும் மனவருத்தத்திற்குரிய கண்டிக்கத்தக்க விடயம் என ஜனநாயக மக்கள் முன்னணியின் உதவிப் பொதுச் செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினருமான சண்.குகவரதன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு முறையிடச் சென்ற பேருந்து உரிமையாளரை வாசலில் வைத்து கீழ்த்தரமான முறையில் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

தமிழ் பேருந்து உரிமையாளர்கள் மட்டுமே ஏன் இவ்வாறு நடத்தப்படுகின்றார்கள். ஏன் நாம் தமிழர்கள் என்றபடியாலா? என சண்.குகவரதன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டிலே நிம்மதியாக தமது உறவுகளை சந்திக்க பயணிக்கும் மக்கள் தமது அன்றாட வேலைகளுக்கு வர்த்தக ரீதியாக தமது சொந்த மண்ணிற்கு பயணிப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளால் பெரும் சிரமத்துக்குள்ளாகிறார்கள். இது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயமாகும்.

போக்குவரத்து பரிசோதகர்களால் பஸ் வண்டி சாரதி தாக்கப்பட்டமை ஒரு காட்டுமிராண்டித்தனமான செயலை மீண்டும் நிரூபித்துள்ளது. அரசாங்கம் சகல தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும். யாழ்.பேருந்து பயணிகள் தாக்கப்பட்ட சம்பவத்தை உடனடியாக ஆராய்ந்து அவரை தண்டிக்க வேண்டும்.

சாதாரணமான அப்பாவி மக்களின் அசௌகரியங்களை தவிர்க்கும் முகமாக இதற்கு நல்ல தீர்வு அரசாங்கம் எடுத்து உடனடியாக உரியவரைத் தண்டிப்பதன் மூலம் யாழ்ப்பாணத்திற்கான தனியார் பேருந்து போக்குவரத்தினை வழமைக்கு கொண்டு வருமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-2)

# அரசு பேருந்தில் ஏற முண்டியடித்த மக்கள்

## பகிஷ்கரிப்பை அடுத்து பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களுக்கு போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகளின் பணிப்புறக்கணிப்பினால் வெளி மாவட்ட பயணிகள் தமது வீடுகளிற்கு செல்ல முடியாமல் அவதிப்பட்டமையை நேற்று அவதானிக்க முடிந்தது.

மேலும் வெளிமாவட்ட பயணிகள் அரச போக்குவரத்து பேருந்துகளினை நாடிச் சென்றதோடு முண்டியடித்தும் பேருந்துகளில் ஏறினர்.

இதனால் அரச பேருந்துகளிற்கு நேற்று மவுசு அதிகரித்து காணப்பட்டதாக அங்கு நின்ற பயணிகளால் தெரிவிக்கப்பட்டது.

வெளிமாவட்ட போக்குவரத்துச்சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் நேற்று இடம்பெற்ற பகிஷ்கரிப்பினால் தீபாவளி கொண்டாட்டத்தினை முன்னிட்டு யாழ் வந்தவர்களும் வீடு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

முன்னறிவித்தலின்றி இடம்பெற்ற பணிப்புறக்கணிப்பினால் பயணிகள் தனியார் பேருந்துகளில் ஏறி அமர்ந்திருந்து பின்னர் ஏமாற்றத்துடன் இறங்கிச்சென்றதனையும் அவதானிக்க முடிந்தது.

அரச பேருந்தில் சன நெரிசல் காணப்பட்ட போதிலும் விசேட போக்குவரத்துச் சேவை எதுவுமே வழங்கப்படவில்லை என வெளிமாவட்டங்களிற்கு போக்குவரத்தில் ஈடுபடும் அரச போக்குவரத்து பேருந்துகளின் சாரதிகள் சிலர் தெரிவித்தனர்.

தமக்கு மேல் உள்ள அதிகாரிகள் உத்தரவிடாமல் தாம் எதுவும் செய்யமுடியாது என யாழ். நகரிலுள்ள அரச போக்குவரத்து அலுவலகத்தினர் தெரிவித்தனர். (அ-4)

# சடலங்களை அடையாளம் காண நடவடிக்கை

வெலிக்கடை சிறைச்சாலைக் கலவரத்தில் உயிரிழந்த சிறைக் கைதிகளின் சடலங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக கைதிகளின் உறவினர்கள் வைத்தியசாலை வளாகத்தில் அணி திரண்டுள்ளதாகவும் உயிரிழந்த கைதிகளில் சுமார் 16 சடலங்கள் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருப்பதாகவும் அத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சடலங்கள் தொடர்பான நீதவான் விசாரணைகள் நடத்தப்பட்டதன் பின்னர் அவற்றை பிரேத பரிசோதனைகளுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-9)

# வாரம் ஒரு தகவல்

## மகிழ்ச்சிக்கு வழி...

"நான் துன்பச் சிறையில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றேன்" என்று ஒருவன் கூறினான்.

"என்ன காரணம்?" என்று கேட்டார் ஒரு பெரியவர்.

"மற்றவர்கள் எனக்குத் துன்பம் கொடுக்கிறார்கள்!"

"உனக்குத் துன்பம் கொடுப்பது உன்னுடைய மனம் தான்!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்!"

"அப்படியானால் துன்பத்திலிருந்து விடுபட என்ன வழி?"

"மனதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதுபோதும்"

"எப்படிப் புரிந்து கொள்வது?" என்றான்.

"நான் கூறப்போகும் கதையைக் கேள்!" என்றார்.

"ஒருவர் ஆசையாக ஒரு பூனையை வளர்த்தார்... அந்தப் பூனை ஒருநாள் ஒரு எலியைப் பிடித்துக் கௌவிக் கொண்டு வந்தது. அவருக்கு அது மகிழ்ச்சியாக இருந்தது. மறுநாள் அந்தப் பூனை அவர் ஆசையாக வளர்த்த ஒரு கிளியைக் கௌவிக் கொண்டு வந்தது. அவருக்கு அது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இன்னொரு நாள் அந்தப்பூனை எங்கேயோ சென்று ஒரு குருவியை கௌவிக் கொண்டு வந்தது. இப்போது அவர் மகிழவுமில்லை. வருத்தப்படவுமில்லை. எதையாவது பிடிப்பது, உண்பது பூனையின் சுபாவம் என்பதைப் புரிந்து கொள்ள அவருக்கு சிறிது காலம் எடுத்தது. தனக்குப் பிடிக்காத எலியைப் பிடிக்கின்ற போது இன்பம்.

தனக்குப் பிடித்தமான கிளியைப் பிடிக்கின்றபோது துன்பம். தனக்கு சம்பந்தமே இல்லாத குருவியைப் பிடிக்கின்றபோது இன்பமுமில்லை... துன்பமுமில்லை"

அவர் கதையை முடித்தார்.

இவன் சிந்திக்கத் தொடங்கினான். சிறையின் கதவுகள் திறக்கப்படுகிற ஓசை செவிகளில் விழுந்தது.

"மனதைப் புரிந்து கொள்கின்றவர்களே மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

11.11.2012
(ஐப்பசி 26, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.06 மணிக்கு
துவாதசி முற்பகல் 10.43 மணிவரை
அத்தம் மாலை 6.46 மணிவரை
இராகுகாலம் 4.36-6.06 மணிவரை
சுபநேரம் 9.06-10.36 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்** கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் வழிவிடுவர்.

**இடபம்** பிள்ளைகளின் வளர்ச்சியைக் கண்டு பெருமை படுவீர்கள். சொத்துக்களால் நன்மையுண்டு. எதிர்கால நலன்கருதி முக்கிய முடிபு எடுப்பீர்கள். போசன சுகமுண்டு.

**மிதுனம்** தொலைபேசி வழித்தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும். வாகனப்பராமரிப்பு செலவுகள் குறையும். மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும். நண்பர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**சிங்கம்** வாக்கு மேன்மை உண்டு. உடன்பிறப்புகள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். பயணங்களால் நன்மை உண்டு. பொருள் சேர்க்கைக்கு அடித்தளம் இடுவீர்கள்.

**கன்னி** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும். உடல்நலனில் கவனம் தேவை. குடும்பத்தினர் மனங்கோணாமல் நடந்து கொள்வது நல்லது. கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** வழக்கமாக செய்யும் பணியை இன்று மாற்றி அமைப்பீர்கள். உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்** வியக்கும் செய்திகள் வீடுவந்து சேரும் நாள். பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் குடும்பத்தினர் உங்களை புரிந்து கொண்டு நடப்பர்.

**தனுசு** சொல்லை செயலில் காட்டுவீர்கள். உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள். பெயரும் புகழும் கூடும்.

**மகரம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள். செய்யும் காரியங்களில் உரிய திறமை வெளிப்படும். பகை ஒன்று நட்பாகலாம். பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும்.

**கும்பம்** வரவும் செலவும் சமமாகும். வேலைச்சுமை கூடும். பயணத்தால் மன உளைச்சல் ஏற்படலாம். குடும்பத்தில் கோபமாக பேசிவிட்டு மனம் வருந்த நேரிடலாம்.

**மீனம்** புத்தி சாதுரியமாக செயல்பட்டு காரியம் சாதிப்பீர்கள். ஆன்மீக சிந்தனை மேலோங்கும் குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும். போசன சுகமுண்டு.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 130 | 140 |
| உருளைக்கிழங்கு | 90 | 100-120 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 110 | 100 | 100 | 100 |
| தக்காளி | 70 | 100 | 60 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 25-30 | 30 | 30 | 40 |
| கோவா | 80-100 | 120 | 70 | 120 |
| கரட் | 70-80 | 110 | 80 | 200 |
| பூசணி | 50 | 60 | 40 | 60 |
| புடோல் | 90-100 | 100 | 60 | 120 |
| வாழைக்காய் | 50-60 | 80 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 50-85 | 60 | 60 | 80 |
| பெரிய வெங்காயம் | 75 | 40 | 70 | 80 |
| பாகற்காய் | 200 | 250 | 180 | 160 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 50 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120 | 140 | 100 | 140 |
| லீக்ஸ் | 80 | 110 | 80 | 100 |
| பீற்றூட் | 45 | 40 | 40 | 90 |
| கறிமிளகாய் | 120 | 150 | 90 | 200 |
| முருங்கைக்காய் | 70-80 | 120 | 60 | 80 |
| போஞ்சி | 120 | 250 | 80 | 240 |
| கத்தரிதம்புள்ள | 160 | 180 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 15-20 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 200 | 200 | 220 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 25-45 | 40 | 30 | 30-35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே சமுர்த்தித்திட்டம்

## யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதே சமுர்த்தி வாழ்வின் எழுச்சி திட்டமாகும் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.


யாழ்.மாவட்ட சமுர்த்தி செயலகத்தினால் நடத்தப்படும் **வாழ்வின் எழுச்சிக்கு சமுர்த்தி சக்தி** எனும் தொனிப்பொருளிலான வர்த்தகக் கண்காட்சி நேற்று யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

சமுர்த்தி வாழ்வாதாரத் திட்டத்தினூடாக பெறப்பட்ட உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கதொன்றாகும்.

யாழ்.மாவட்டத்தின் வாழ்வாதாரத்தினையும் பொருளாதாரத்தையும் உயர்த்துவதற்கு இது சிறந்ததொரு களமாகும். எங்களுடைய மாவட்டத்தில் தொழில் முயற்சிக்கான அனைத்து வளங்களும் காணப்படுகின்ற நிலையில் எந்தவொரு மனிதனையும் சுய தொழிலில் ஈடுபடுத்த முடிகிறது.

இதற்கு அரசினால் பல மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டும் உள்ளதோடு அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எந்த நோக்கதிற்காக இக்கண்காட்சி நடைபெற்றதோ அந்த நோக்கம் விரைவில் அடையப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-4)




நன்றி:- தினமலர்

# கந்தசஷ்டி பெருவிழா

(நீர்வேலி)

நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி திருக்கோவில் கந்தசஷ்டிப் பெருவிழா எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பித்து 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெறும். விரத நாட்களில் தினமும் பகலில் விசேட திருமஞ்சனம், தீபாராதனை, அர்ச்சனை, வசந்த மண்டப பூஜை, பஜனை, புராண படனம் என்பன இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் சூரசம்ஹாரமும் நடைபெறுமென ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

******

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் கந்தசஷ்டி விரத காலங்களில் தினமும் காலை 8 மணி தொடக்கம் முருகப் பெருமானுக்கு அபிஷேகம், விசேட பூசைகள், அர்ச்சனைகள் என்பன நடைபெறும்.

தொடர்ந்து பிற்பகல் 4.30 மணிக்கு கந்தசஷ்டி உற்சவமும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

# உயர்தர முதலுதவி பயிற்சிக்கு ஏற்பாடு

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர்தர முதலுதவி பரீட்சை நாடளாவிய ரீதியில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி யாழ்.கிளையில் நடைபெறவுள்ளது.

அதையொட்டி எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை கிளையில் நடைபெறும் உயர்தர முதலுதவி பயிற்சிகளில் பங்கு கொள்ள வேண்டும்.

ஏற்கனவே அடிப்படை முதலுதவி பரீட்சையில் சித்தியடைந்து அதிகூடிய புள்ளிகளை பெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்க தொண்டர்களே இவ் உயர்தர முதலுதவி பயிற்சிப் பரீட்சையில் பங்கு கொள்ள முடியும்.

இதனை உறுதிப்படுத்துவதற்கு தமது விபரங்களை இலங்கை செஞ்சிலுவை சங்க பிரிவு காரியாலங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-134)

# தனியார் போக்குவரத்து பேருந்துகள் பகிஷ்கரிப்பு

## வெளி மாவட்ட பயணிகள் அந்தரிப்பு




(யாழ்ப்பாணம்)

**வவுனியா பேருந்து சாரதி தாக்கப்பட்டதைக் கண்டித்தும் யாழ்.நகர பொலிஸார் யாழ்.- வவுனியா பேருந்தினை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றமை மற்றும் சாரதி நடத்துநர் என்பவர்களின் கைதுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வெளி மாவட்டங்களுக்கு போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் நேற்றைய தினம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.**

யாழ்ப்பாணம்- வவுனியா போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பேருந்தின் உரிமையாளர்களை யாழ்ப்பாணம்- திருகோணமலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்தினைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் தாக்கியுள்ளனர். இத்தாக்குதலிற்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் அவர்கள் தமது பணிப்புறக்கணிப்பிற்கான காரணத்தைத் தெரிவிக்கையில்,

நேற்று முன்தினம் இரவு எமது பேருந்து சாரதி தாக்கப்பட்டுள்ளார். இத் தாக்குதலில் எமது பேருந்து சாரதியே காயமடைந்துள்ள போதும் எதிர்த்தரப்பிற்கு பொலிஸாரின் செல்வாக்கினை பயன்படுத்தி தாம் நினைத்த விதத்தில் செயற்படுகின்றனர்.

இத்தாக்குதலை நாம் பெரிதுபடுத்தாமல் சேவையில் நேற்றுக் காலை ஈடுபட்ட போதிலும் யாழ்.பொலிஸார் எமது பேருந்தினை ஆஸ்பத்திரி வீதியில் வைத்து மறித்து பயணிகளினை இறக்கி விட்டு பேருந்தை பொலிஸ் நிலையம் கொண்டு சென்றதோடு சாரதி மற்றும் நடத்துநர்களையும் கைது செய்துள்ளனர்.

இதனைவிட தென்பகுதி போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகள் உரிய கட்டண முறையினை மேற்கொள்ளாமல் இடையிலுள்ள இடங்களிலும் பயணிகளை ஏற்றிச் செல்வதனால் எமது தொழில் பாதிப்படைகின்றது.

தென்பகுதி போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்து சாரதிகள் தாம் இராணுவத்தை சேர்ந்தவர்கள் என்று கூறி இராணுவ சாரதி அனுமதிப்பத்திரத்தினை காட்டி எம்மை மிரட்டுகின்றனர். இதனைவிட தென்பகுதிச் சேவையில் ஈடுபடும் பேருந்திற்கு ஒரு போக்குவரத்து வழிப்பாதையையும் எமக்கு வேறு போக்குவரத்து வழிப்பாதையையும் யாழ்.பொலிஸாரினால் யாழ்.நகரில் ஒழுங்குபடுத்தப்படுகின்றது. சட்டம் அனைவருக்கும் சமன் என்ற ரீதியில் பொலிஸார் செயற்படல் வேண்டும்.

எமது இவ் அனைத்து பிரச்சினைகள் தொடர்பிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாவட்ட அரச அதிபர், பஸ் கம்பனிகளின் இணையம் போக்குவரத்து ஆணைக்குழு உட்பட பலருக்கு கடிதங்கள், அறிக்கைகள் மூலம் பல முறை தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

எமது இப்பிரச்சினைகள் உரியவர்களினால் தீர்க்கப்படல் வேண்டும், யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட பேருந்து சாரதி எவ்வித சட்ட நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படாமல் விடுவிக்கப்படல் வேண்டும் என வலியுறுத்தியே மேற்படி பகிஷ்கரிப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகிஷ்கரிப்பு போராட்டத்தினால் யாழ்.போக்குவரத்து பொலிஸார் காவல் கடமையில் ஈடுபட்டு இருந்தனர். (அ-4-85)




# கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீட்டுத்திட்ட செயற்பாடுகள்

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இந்திய அரசினால் வழங்கப்படும் வீட்டுத்திட்டம் தொடர்பான நடைமுறைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என கோப்பாய் பிரதேச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள எட்டுக் கிராம சேவையாளர் பிரிவில் முதற் கட்டமாக ஆயிரத்து 525 விண்ணப்பங்கள் நடைமுறைப்படுத்த அனுமதி கிடைத்துள்ளன.

இத்திட்டம் அச்செழு, ஊரெழு, புத்தூர் மேற்கு, புத்தூர் கிழக்கு, வளலாய், சிறுப்பிட்டி மேற்கு, கோப்பாய் மத்தி, அச்சுவேலி தெற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளிலேயே நடைமுறைப்படுத்த வீடுவீடாக சென்று தகவல் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான தகவல் சேகரிக்கும் பணியில் கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள், இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு தொண்டர்கள் ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர்.

தகவல் சேகரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட குழுவினரால் பரிசீலிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டு பயனாளிகளின் பெயர்ப் பட்டியல்கள் பொது இடத்தில் பார்வைக்காக வைக்கப்படும்.

தெரிவு செய்யப்படும் பெயர்கள் நியாயமற்ற முறையில் விலக்கப்பட்டிருப்பதாகவோ அல்லது தகுதியற்ற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாகவோ கருதினால் மனக் குறைகளை தெரிவிப்பதற்கு போதிய அவகாசம் வழங்கப்படும். மனக்குறைகளை அமுலாக்கல் முகவரின் பிரதிநிதிகளுக்கு அல்லது உங்கள் பிரதேச செயலருக்கு எழுத்து மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-3-134)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1984 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மிருகசீரிடம் 4<br>உயரம்:-5'8"<br>கி.பா:-17<br>தகைமை/ தொழில்:-Bsc (Hons) Engineer<br>B/276 | பிறப்பு:- 1986 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம்<br>உயரம்: 5'4"<br>கி.பா:-58.5<br>தகைமை:- முகாமைத்துவ பட்டதாரி<br>G/275 |
| பிறப்பு:- 1988 R.C<br>நட்சத்திரம்:-உத்தராடம்<br>உயரம்:-5'6"<br>எ.பா.:- பொருத்தம் பார்ப்பதும் இல்லை, சமயம் மாறியும் செய்யப் படும்.<br>B/253 | பிறப்பு:- 1983 இந்து<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 2<br>உயரம்: 5'4"<br>கி.பா.29.75, 12 இல் செவ்<br>தகைமை: BA பட்டதாரி ஆசிரியை<br>G/339 |
| பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம்<br>உயரம்:-6'3"<br>கி.பா:-8.5<br>தொழில்/தகைமை:- Bsc (நில அளவையாளர்)<br>B/254 | பிறப்பு:- 1975 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>உயரம்: 5'<br>கி.பா: 37.5<br>தகைமை:-பட்டதாரி (BA) வெளிவாரி<br>G/345 |
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-அத்தம்<br>உயரம்:-5'8"<br>தகைமை:- பொறியியலாளர் (சிங்கப்பூர் அரச தொலைத்தொடர்பு)<br>B/244 | பிறப்பு:- 1976 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>உயரம்:- 5'5"<br>கி.பா: 82,7 இல் செவ்.<br>தகைமை:- AAT (uk.PR)<br>G/360 |


சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல.144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E.mail:-kalyanamalai.jaffna@gmail.com

ஊடக அனுசரணை வலம்புரி


## ஸ்ரீ அம்மா பகவானுக்கு நன்றி நவிலல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ அம்மா பகவானின் நன்றிகள் நவிலல் நாள் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுழிபுரம் அம்மா பகவான் ஆன்மீக பிரார்த்தனை மையத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வருடமும் ஸ்ரீ அம்மா பகவானின் அருட்கடாட்சத்தினால் அற்புதங்களைப் பெற்றுக் கொண்ட பக்தர்கள் அனைவரும் கலந்து கொண்டு தாம் பெற்றுக் கொண்ட அற்புதங்களை தெரிவித்து நன்றிகளை தெரிவிக்குமாறு பிரார்த்தனை மையத்தினர் கேட்டுள்ளனர். அத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதி தனலக்சுமி பூஜையும் நடைபெறவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (அ-9)


**YARL Taxi**

யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் முச்சக்கர வண்டி, கார், வான் சேவைகளுக்கு அழைக்க வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்

021 2221919/0759751919

(முச்சக்கரவண்டிகளுக்கு மட்டும் முதல் Km-60/= அடுத்து ஒவ்வொரு Km-40/=)

இங்கு முச்சக்கரம் மற்றும் கார்களுக்கு Win Win Lanka வினால் கட்டண மீற்றர் பொருத்திக் கொடுக்கப்படும்

36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்.
E-Mail - Yarltaxi@gmail.com


# தேசிய வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகரசபையின் நல்லூர் கிளை நூலகம் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்திய போட்டி முடிவுகளை நூலகர் அறிவித்துள்ளார். இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

**வர்ணம் தீட்டுதல்**

முதலாம் இடம் செ.பார்கவி, இரண்டாம் இடம் அ.சர்பியா, மூன்றாம் இடம் சி.அபிநயா.

**முன்பள்ளி**

முதலாம் இடம் அ. கேசவி, இரண்டாம் இடம் நா. தேனுஜன, மூன்றாம் இடம் அ.அபிசானி.

**சித்திரம் வரைதல்**

முதலாம் இடம் அஞ்சலா அருந்தவராஜா, (இரண்டாம் இடம்) பா. ரிசிகேசர், ஸ்ரீ மோகணன் சஞ்சுதன்

**கட்டுரைப் போட்டி (கீழ்ப் பிரிவு)**

முதலாம் இடம் கு.ரேவதி, இரண்டாம் இடம் ந.நிறோசன், மூன்றாம் இடம் மு.பர்மிலன்

**மேற்பிரிவு**

முதலாம் இடம் தே.சுவேத்தா, இரண்டாம் இடம் இ. தர்சிகா, மூன்றாம் இடம் சி.தாரகா

**திருக்குறள் போட்டி**

முதலாம் இடம் சிவயோகராசா சிவமதுலன், இரண்டாம் இடம் சோமாஸ்கந்தசர்மா ஸ்ரீசந்தோஸ், மூன்றாம் இடம் சசிகரன் திருமாறன்

**பொது அறிவு போட்டி**

முதலாம் இடம் அருந்தவராஜா அபிமன் இரண்டாம் இடம் சி.சிவமதுரன், மூன்றாம் இடம் ப.தமிழ்பிரியன் .

மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி மாலை 3.30 மணியளவில் நல்லூர் கிளை நூலகத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது. (அ-51)




இல.199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1477) No. 199, Power House Road, Jaffna. Tel : 021-2225571


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிராணியை விசாரிக்க கட்சி உறுப்பினர்களுக்கு தகுதியில்லை

## சட்டத்தரணிகள் ஆதங்கம்

**இலங்கையில் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணை தொடர்பில் அமைக்கப்படுகின்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் அரசாங்க கட்சியின் உறுப்பினர்களுக்கு குற்றச்சாட்டுக்களை விசாரிக்கின்ற தகுதி இல்லை என்று சட்டத்தரணிகளின் அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.**

கொழும்பு உச்ச நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் சட்டத்தரணிகளின் நடாத்திய எதிர்ப்புக் கூட்டமொன்றில் இந்தக் கருத்து முன்வைக்கப்பட்டது.

இதன்போது அரசாங்க கட்சியினால் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு தலைமை நீதியரசர் மீதான விசாரணைகளை மேற்கொள்ளத் தகுதி இல்லையென்று ஜனநாயக சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவர் சந்திரபால குமாரகே இந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

தெரிவுக்குழுவுக்கு ஆளுங்கட்சி நியமித்துள்ள விமல் வீரவன்ச, ராஜித சேனாரத்ன ஆகிய உறுப்பினர்களுக்கு எதிராக தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க கடந்த காலங்களில் தீர்ப்புக்களை அளித்துள்ளதை சுட்டிக்காட்டிய சட்டத்தரணி சந்திரபால, இந்த அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் தெரிவுக் குழு மூலம் நீதியான விசாரணைகள் நடக்குமா என்பது சந்தேகத்துக்கு உரியது என்றும் கூறினார்.

இந்த ஆளுங்கட்சி தெரிவுக்குழு உறுப்பினர்களால் தலைமை நீதியரசர் பழிவாங்கப்படும் அபாயம் இருப்பதாகவும் சட்டத்தரணி சந்திரபால குமாரகே தெரிவித்தார்.

அவ்வாறே தலைமை நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஒரு குற்றவாளி என்று நாடாளுமன்றத் தெரிவிக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் ஏற்கனவே அரச ஊடகங்களில் கருத்து வெளியிட்டுள்ளதாக ஜனநாயகத்தை காப்பதற்கான சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் கே.எஸ்.ரத்னவேல் தெரிவித்தார்.

இவ்வாறான அமைச்சர்கள் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு தலைமை நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பது என்பது கேலிக்கூத்தானது என்றும் சட்டத்தரணி ரத்னவேல் கூறினார். (அ-2)




அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் 111 ஆவது பிறந்த தினம் கடந்த 8 ஆம் திகதி குருநகர் பிரதான வீதியிலுள்ள அவரது சிலைக்கு அருகில் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபையின் உறுப்பினர் திருமதி.மேரியம்மா அவரது உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம். (படம் :- எஸ்.ஆர்.கரன்)

# உலக அமைதி வேண்டி சிவவேள்வி பெருவிழா

(வவுனியா)

உலக அமைதி வேண்டியும் தமிழ் மக்களாகிய எமக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டியும் 66ஆவது பன்னிரு திருமுறை, திருப்புகழ் முற்றோதலும் சிவமூலமந்திரம் உச்சரித்தலும் 2ஆவது வருட சிவவேள்விப் பெருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா குருமன்காடு ஆறுமுக நாவலர் திருமுறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் அதிகாலை 5.55 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு பகலாக இடைவிடாது ஓதப்பட்டு எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை அகண்ட நாம கூட்டுப் பிரார்த்தனையும் திருமுறை போற்றி அர்ச்சனையுடன் (1008) நிறைவுறும். (அ-9)

# விளையாட்டு உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டு மைதானத்தில் கோல் கம்பங்கள் உட்பட விளையாட்டு மைதானத்தினை சுற்றி அடிக்கப்பட்ட நெற் உட்பட ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பெறுமதியுடைய இரும்பு பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டு கழகத்தினருக்கு கல்லுண்டாய் பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்று வழங்கப்பட்டு இருந்தது.

குறித்த மைதானத்தினை சுற்றி இரும்பாலான வலை, கோல் கம்பங்கள் என்பன விளையாட்டு கழகத்தினால் அமைக்கப்பட்டிருந்தன.

இவை போடப்பட்டு ஒரு சில நாட்களிற்குள் திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வயல் பகுதியில் உள்ள குப்பைகளில் இரும்பு சேகரிப்பவர்களின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதனால் இத்திருட்டு இவர்களினது கைவரிசையாக இருக்கலாம் எனவும் கழகத்தினரால் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை திருட்டு இடம்பெற்று சிலநாட்கள் கடந்துள்ள நிலையில் திருட்டு பிடிபடவில்லை எனவும் குறிப்பிடப்படுகின்றது. (அ-4)

# மாகாணசபை மாற்றம் பற்றி எதிர்வு கூறமுடியாது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண சபை முறையில் மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்று ஜனாதிபதி தனது வரவு செலவு திட்ட உரையில் குறிப்பிட்டது முன்னேற்றகரமான ஒரு மாற்றாகவும் இருக்கலாம் என்றாலும் அதற்கு முன்னர். அது பற்றி எதிர்மறையான முடிவுகளுக்கு வருவது தவறு என்று ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டு முதலாம் நாள் விவாதம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பி. எஸ்.சுமந்திரன் உரையாற்றும் போது, ஜனாதிபதியின் வரவு-செலவு திட்ட உரையை மேற்கோள்காட்டி பேசிய போதே அமைச்சர் கெஹலிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை என அமைச்சர் கெஹலிய ஊடங்களுக்கு தெரிவித்ததாக சுமந்திரன் எம்.பி.தனது உரையின் போது குறிப்பிட்டார்.

இதன் போது குறுக்கிட்ட அமைச்சர் கெஹலிய, நான் அப்படிக் கூறவில்லை.13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்கும் அவசியம் இதுவரை எழவில்லை என்றே கூறினேன் என்றார்.

அத்துடன் இந்தியா உட்பட நாடுகளில் கூட அரசியலைமைப்பு பல தடவைகள் திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் கெஹலிய சுட்டிக்காட்டினார். (அ-2)

# தப்பிச்சென்ற கைதிகள் 11பேர் மீண்டும் கைது

## அமைச்சர் கஜதீர தெரிவிப்பு

வெலிக்கடை சிறைச்சாலை கலவரத்தின் போது தப்பிச்சென்ற கைதிகளில் நான்கு பேர் மீண்டும் சிறைச்சாலைக்கு திரும்பியிருப்பதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

மேலும் இருவர் தலைமறைவாகியிருந்த சமயம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் சந்திரசிறி கஜதீர குறிப்பிட்டுள்ளார்.

எனினும் துப்பாக்கிகளை கைப்பற்றிய எந்தவொரு கைதியும் தப்பிச் செல்லவில்லை.

அத்துடன் சிறைக்கைதிகளால் கைப்பற்றப்பட்ட 82 துப்பாக்கிகளில் 5ஐ தேடும் பணிகள் இன்னமும் இடம்பெற்று வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை இடைநிறுத்தப்பட்டிருந்த சிறைக்கைதிகளுக்கான உணவு வழங்கல் நடவடிக்கை நேற்று நிலைமை சுமுகமடைந்த பின்னரே மீண்டும் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மோதலின் போது தப்பிச் சென்ற ஏழு கைதிகள் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது தப்பிச் சென்ற கைதிகளின் எண்ணிக்கை இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ.கொடிப்பிலி கூறியுள்ளார்.

இந்த நிலையில் வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகளை கணக்கெடுக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தப்பிச் சென்றுள்ள கைதிகளை மீண்டும் கைது செய்வதற்கான தேடுதல் நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பி.டபிள்யூ.கொடிப்பிலி மேலும் கூறியுள்ளார். (அ-9)

# வாக்குறுதிகளை மீறினால் விளைவு மோசமாக அமையும்

## பேராசிரியர் ஒன்றியம் தெரிவிப்பு

வாக்குறுதிகள் தகுந்த முறையில் நிறைவேற்றப்படாவிட்டால் விளைவுகள் மோசமாக அமையும் என பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் சில இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன. இந்த இணக்கப்பாடுகளின் அடிப்படையிலேயே கடந்த ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி தொழிற்சங்கப் போராட்டம் கைவிடப்பட்டதாக ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

எனவே அரசாங்கம் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறினால் மீளவும் பாரியளவில் போராட்டங்களை நடத்த நேரிடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இணக்கப்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைககள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வீதியோரத்தில் பூங்கன்றுகளை நடவே வரவு செலவுத் திட்டம் உதவும்

## முன்னிலை சோஷலிசக்கட்சி தெரிவிப்பு

(கொழும்பு)

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் உற்பத்தித் துறையை மேம்படுத்துவதற்கு மாறாக வீதி ஓரங்களில் பூங்கன்றுகளை நாட்டுவதற்கு பயன்படும் என முன்னிலை சோஷலிசக்கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய அக்கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜாகொட இவ்வாறு தெரிவித்தார்.

வரவு-செலவு திட்டத்தில் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு 290 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலும் அதிகமாக நகர அலங்காரத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மகனுக்கு பந்தயக்கார் இறக்குமதி செய்ய தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் என ஐக்கிய தேசியக் கட்சி கூறியது. அதற்கும் அப்பால் பாரிய பிரச்சினை இருக்கிறது என புபுது ஜாகொட குறிப்பிட்டார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

சங்குநாதம்

## இமயம் தொட...

உணர்வுகளை நியாயப்படுத்து
ஊனம் என்பது
உடற்குறைகள் அல்ல
இழிவுகளை எதிர்கொள்
எதிரியைக்கூட நம்பு
இழிவுபடுத்துபவனை நம்பாதே!
உன் உணர்வுகள் வழி நட
ஊனம் தடையாய் இராது

மாவை நா.கஜேந்திரன்

## ஏமாற்றத்தின் பரிசு

உன் வருகைக்கான
எதிர்பார்ப்புக்கள்
ஏமாற்றப்பட்டதனால்
இப்போதும்
இயங்கமறுக்கின்றது
இதயம்
வருவாயென
வாசலில் காத்திருப்பது
புதிதானது
இல்லையெனினும்
புரிய மறுக்கின்றது மனசு
சின்னதாகச் சிதறிய
உன்னுடனான தொடர்புகள்
மெல்ல மெல்லவாய்
நீண்டு கொண்டிருக்க
அருகிலும் தூரவுமாய்
வந்து வந்து
போய்க்கொண்டிருக்கிறாய்
நீ...

ஆஷா
யாழ்ப்பாணம்

## அவரவர் பார்வையில்

### கவிதை

தவழும் குழந்தை
சொல்லும் மழலை
உலகத்து கவிஞர்கள் சொல்லாத
புதுக்கவிதை

### ஏக்கம்

கண்ணால் மலர்ந்த காதல்
கண்ணீரால் கரைகிறது கல்லறையில்

க.செல்வமலர்
சிறுவர் இல்லம்

### சொர்க்கம்

கல்வியே கண்
காதலே வாழ்க்கை
திருமணமே உயிர் மூச்சு
மரணமே சொர்க்கம்

### பாசம்

உறவுகளை பிரிந்த
எனக்கு நீயே!
உடன் பிறப்பானாய்
உன் பாசம்- என்
தாய்ப்பாசத்தை விட-ஒரு
படிமேலானது...

த.கனோஜன்
நாவற்குழி வடக்கு

## வாயுமோதிச் சரியும் மேகமலை

நட்சத்திரங்களை நகைத்தபடி
ஒளி பாய்ச்சி நிற்கிறது நிலா
ஒளிபூசி மினுமினுத்து
விரிகிறது வான்
வானை மறைக்க
எத்தனிக்கிறது மேகமலை
திரண்டெழுந்த பெண்மார்பாய்...
தெரியும் அம்மலை காமமேறி
நிலவைத் தன்னுள்ளே
புதைத்திற்று
இருள் நிறைந்த பொழுதில்
தன் கல்வி முடித்து
அகலுகையில்...
வாயுமோதிச் சரிகிறது
மேகமலை


கவிஞர். சு.க.சிந்துதாசன்

## முன்வினைப்பயன்

பனையால் விழுந்த எங்களை
எத்தனை மாடுகள் ஏறி மிதிக்கின்றன
எங்களின் முன்வினையோ
மாடுகளின் பின்வினையோ
யாரறிவார்?
மாடிவீட்டு பூச்செண்டை
தூவானத்தில் இருந்து
பாதுகாக்க எங்கள்
குடிசைத்தறப்பாள்கள்
கேட்கப்படுகின்றது- எமக்காக
யார் கேட்கப்போகிறீர்கள்?

நிலவன்
அச்சுவேலி

# மௌனத்தின் தேடல் - 129



## யார் காப்பார்

கட்டி அணைத்துக் கருணையோடு
புட்டிப்பால் கொடுத்துப்
புலிக்குட்டியை வளர்க்கும் மந்தியின்
நட்பின் சிறந்த பண்பைப்பார் மனிதா!
கொட்டும் மழையில்
நடுக்காட்டில் குடியேற்றிக்
குடிக்கச் சொட்டுத் தண்ணீருமின்றிக்
கண்ணீர்விட்டுத் துடிக்கும்
மக்களைக் காப்பது யார்?

துரை
தென்மட்டுவில்

## அன்பு

வேற்று இனமாயினும்
பசித்தபோது உணவூட்டி
ஒன்றாய் வாழும்
அந்த ஐந்தறிவு
ஜீவன்களின்
அன்புக்கு
இவ்வுலகில்
ஈடு இணை
எதுவுமில்லை

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## எப்படி

மரம் தாவும் குரங்கே
உன்கரம் சிரமம்பாராது
எதிரிக்கு இரங்கி
புட்டிப்பால் கொடுத்து
வளர்ப்பது எப்படி
பயிற்றப்பட்டதாலா?
பாசப்பட்டதாலா?

சு.அபர்ணா

## போலிபாசமதை

குரங்காரே... நீ
புட்டிப்பால் கொடுத்து
புலிக்குட்டியை...
ஊட்டி வளர்த்தாலும்
உன் வஞ்சகத்தனத்தால்
நீ காட்டுகின்ற...
போலிப்பாசமதனை
புலிக்குட்டி சிலநாளில்
புரியாமலா விடப்போகின்றது

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

## திருந்தட்டும் எம் இனம்

ஏய் மனிதா?
ஆறறிவு படைத்த
மனிதர்கள் ஒற்றுமையாக
வாழத் தெரியாத
காலத்தில்....
ஐந்தறிவு படைத்த
வேறு இனங்கள்
ஒன்றிணைந்து
கூடிக்குழாவி
பசியாற உணவூட்டி
மகிழ்வோடு இருக்கும்
காலம்- இந்தக்காலம்...
அதைப்பார்த்தாவது?
திருந்தட்டும் எம்இனம்...

த.அனோஜா
மு/மல்லாவி ம.க.

## நட்பு

அநாதியாய்
நின்ற எனக்கு
நீயே! தாயானாய்
உன் நட்பே- என்
உயிர்மூச்சு
மானிடனே!
விழித்துப்பார்
விதியின் விந்தையை

த.கயூதரன்
நாவற்குழி

## மந்தியின் புத்தி

மந்தியே புலிக்கு பாலூட்டி
பாதுகாப்புத்தேடும்- உன்புத்தி
அன்று எமக்கு இல்லை
அதனால் நாம் இன்று
உரிமையற்ற இனத்தவராய்!

சு.கயூரன்
கிளி/அக்கராயன் ம.வி.

## மரணிக்கும் மனிதம்

ஐந்தறிவுள்ள
பிராணிகளிடமிருந்து
கற்கப் பல பண்புகள்
ஆனால்
ஆறறிவுடைய ஜீவனிடமிருந்து
அவை கற்க???

சு.அ.சுலக்ஷன்
மண்டைதீவு

## ஏக்கம்

பகைவருக்கும் உணவூட்டும்
பைந்தமிழ் பண்பாட்டை
பாதுகாக்க புறப்பட்டிருக்கும்
வானரத்தின் படையினிலே
தமிழர் நாம் பங்கெடுக்கும்
காலம் வரும்போது

த.தேனுஜா
புளியங்கூடல்

## பாசத்தின் வெளிப்பாடு

மனிதசக்தியை மிஞ்சி விட்டது
விலங்கினங்களின் அன்பின் அரவணைப்பு
புட்டிப்பால் கொடுப்பது
மக்களே நீங்கள் மட்டுமா?
நாங்களும்தான் என்று
எடுத்துக்காட்டுகின்றன

க.கமலா, திருநெல்வேலி

## உன்னதமானது

பெற்றவள் மகவை
இரக்கமின்றி தூக்கி வீசும்
இவ் உலகில்
இனப்பகை மறந்து
அரவணைத்துப் பாலூட்டும்
வானரமே
உனது இனம் உன்னதமானது

மா.செழியன், வேலணை-03

## பிறவிக்குணம்

பாலூட்டுகிறாய் நீ இன்று
நாளை உனக்கே பால்வார்க்கும்
என்பதை மறந்து

வி.சாலினி, யா/வல்வை ம.ம.வி

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -130



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு 16.11.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் மாபெரும் கண்காட்சி

## 7 துறைகளின் அடைவுகள் காட்சிக்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் வழிகாட்டலின் கீழ் மகிந்த சிந்தனை திட்டத்திற்கமைவாக 2009ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் இன்றுவரை வடமாகாணம் அடைந்துள்ள முன்னேற்றங்களைக் கண்காட்சிகளாகச் சித்தரிக்கும் முகமாக யாழ்.மாநகர சபை மைதானத்தில் 14 ,15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இக்காண்காட்சி 11 ஆயிரத்து 400 சதுர அடி நிலப்பரப்பில் 7 பெரும் துறைகளை முன்னிறுத்தி **வடமாகாண கண்காட்சி -2012 ஒன்றிணைந்து முன்னேற்றத்தை நோக்கி** எனும் தொனிப்பொருளில் வடமாகாண செயற்பாடுகளின் அடைவுகள் காட்சிபடுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இக் கண்காட்சியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்குகொள்ளக்கூடிய வகையில் வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இக்கண்காட்சியானது மிகவும் வினைத்திறனான முறையில் 7 பெரும் துறைகளான உணவு, சுகாதாரம், உட்கட்டமைப்பு வீடமைப்பு போக்குவரத்து, கல்வி மனிதவளம், பொதுச் சேவை, சமூக சேவைகள், நலன்புரி விடயங்கள், கைத்தொழில் ஆகிய துறைகளை உள்ளடக்கி நடத்தப்படவுள்ளது. அத்துடன் பிரதான 7 துறைகளும் நீர்ப்பாசனம், மின்ரம், தொலைத்தொடர்புகள், வீதிப்புனரமைப்புக்கள், தொடர்பாடல் சேவைகள் மற்றும் கண்ணிவெடி அகற்றல் தொடர்பிலான அடைவுகளும் பல்வேறு வகைகளாக வகையீடு செய்யப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அதேசமயம் மாகாண அளவில் உள்ளூர் ஆளுகை தொடர்பான மூன்று நாள் தொழில்நுட்ப அமர்வுகளும் இடம்பெறும். இவையாவும் உள்ளூராட்சி துறைகளை மையப்படுத்தியதான அபிவிருத்தி தேடலாக அமையும். இதில் இலங்கையின் உள்ளூராட்சியில் நல்லாட்சித் தத்துவங்கள், உள்ளூராட்சிக் கட்டமைப்பின் அதிகாரங்களும் கடமைகளும், உள்ளூராட்சி சபைகளின் சிறந்த செயலாற்றுகைகள், உள்ளூராட்சியின் ஒருங்கிணைந்த குடிமக்கள் பட்டயம் உள்ளிட்ட 14 துறைகளின் அமர்வுகள் பிரத்தியேகமான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட மக்களுடன் தென்பகுதி வாழ் மக்களும் இந்தக் கண்காட்சியில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதற்கான வடமாகாண அரச திணைக்களங்கள் யாவும் முழு உத்வேகத்துடன் தமது சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தி பிரதேச அபிவிருத்திக்கு உதவ முன்வந்துள்ளன.

வடக்கு மாகாணத்தில் 34 உள்ளூராட்சி சபைகளும் 34 சிறந்த தலைப்பின் கீழ் தமது செயலாற்றுகையை வெளிப்படுத்தவுள்ளன. (அ-9)

## யானையை கொல்ல முயன்ற ஒருவர் கைது

சேருநுவர, சிறிமங்களபுர பகுதியில் மின்சார வேலி அமைத்து யானையொன்றை கொலை செய்ய முயன்ற பிரதேசவாசி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்தின் போது யானை உயிர்த் தப்பியுள்ள போதிலும் கூரிய ஆயுதத்தினால் தாக்குதலுக்கு உள்ளான நிலையில் அது கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளது என வனஜீவி அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மேற்படி யானையின் வால் வெட்டி எடுத்துச்செல்லப்பட்டுள்ளதாகவும் யானைக்கான சிகிச்சைகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (அ-9)

## ஆணின் சடலம் மீட்பு

சாய்ந்த மருது கடற்கரையில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்றைய தினம் காலை சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா பாடசாலைக்கு முன்னாள் உள்ள கடற்கரைப் பகுதியிலேயே மீட்கப்பட்டது.

குறித்த சடலம் மனநோயினால் பாதிக்கப்பட்டவரது என அடையாளம் காணப்பட்டுள்ளது.இது தொடர்பில் கல்முனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

## பிரிட்டனில் வதிவிட உரிமை

# இல்லாதவர்களுக்கு பொது மன்னிப்பு

### பிரிட்டன் எம்.பிக்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பிரிட்டனில் இறுதி முடிவு வராமல் தேங்கியிருக்கின்ற ஏராளமான தஞ்சக்கோரிக்கை விண்ணப்பங்களுக்கு ஒரு தீர்வு காண இந் நாட்டின் குடிவரவு அதிகாரிகள் செய்து வரும் முயற்சிகள் வதிவிடஉரிமை எதுவும் இல்லாமல் தங்கியிருப்பவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கிவிடுவதாகப் போய்விடும் என உள்துறை அமைச்சகத்தின் பணிகளை ஆராயும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு விமர்சித்துள்ளது.

பிரிட்டனில் தேங்கியுள்ள தஞ்சக் கோரிக்கை விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை மூன்று இலட்சத்தை தாண்டி விட்டதாக உள்துறை அமைச்சக விவகாரங்களுக்கான நாடாளுமன்ற குழுவின் தலைவர் கீத் வாஸ் கூறினார்.

மொத்த எண்ணிக்கையில் சுமார் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் வழக்குகள் குடியேற்ற அனுமதி மறுக்கப்பட்டவர்கள் என்ற பிரிவைச் சேர்ந்தவர்கள்.

ஆனால் இவர்கள் அனுமதி இல்லாமல் நாட்டில் தங்கியிருக்கிறார்களா அல்லது நாட்டை விட்டு வெளியேறி விட்டார்களா அல்லது வேறு விண்ணப்பம் செய்து நாட்டில் தங்க அனுமதிபெற்று விட்டார்களா என்பது தெரியாத நிலை இருக்கிறது.

தஞ்சக் கோரிக்கை விண்ணப்பம் செய்துவிட்டு அதிகாரிகளுடன் எவ்விதத்திலும் தொடர்பு இல்லாமல் சென்றவர்கள், போனவர்கள் இவர்களுடன் விண்ணப்பமும் இறுதி முடிவு வராமல் இருக்கிறது என்ற நிலையில் மொத்தம் 95 ஆயிரம் பேர் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுடைய வழக்குகளை இந்த வருடக் கடைசிக்குள் மூடிவிட வேண்டும் என்ற ஒரு இலக்கை குடிவரவுத்துறை அதிகாரிகள் தங்களுக்குத் தாமே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த 95 ஆயிரம் பேர் பற்றி இறுதி விசாரணைகளை செய்யக்கூடிய அதிகாரிகள் மொத்தத்தில் 149 பேர் தான் இருக்கிறார்கள் என்ற நிலையில் உரிய விசாரணைகளை நடத்தி இந்த வழக்குகள் மூடப்படுமா என்ற சந்தேகம் தமக்கு இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தங்களது செயற்பாடுகளால் பொது மன்னிப்பு வழங்குவது போல யாருக்கும் வதிவிட உரிமை கிடைக்காது என பிரிட்டிஸ் குடிவரவு அமைச்சர் மார்க் ஹாப்பர் வாதிட்டுள்ளார்.

வழக்கு மூடப்பட்டாலும் எங்கிருக்கிறார்கள் என்று தெரியவந்தால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

ஐக்கிய இராச்சியத்தில் ஒருவர் சட்ட விரோதமாகத் தங்கியிருப்பதென்பது மென்மேலும் சிரமமாகி வரத்தான் செய்கிறது என்று அவர் குறிப்பிட்டார். (அ-2)

# இலங்கைக்கு சென்றால் கொல்லப்படுவேன்

### பிரட்ரிக்கா ஜேன்ஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரிய போதும் அது நிராகரிக்கப்பட்ட நிலையில் வேறு ஒரு மேற்கத்தைய நாட்டில் தஞ்சம் அடைந்துள்ள சண்டே லீடரின் முன்னாள் பிரதம ஆசிரியை பிரட்ரிக்கா ஜேன்ஸ் தாம் இலங்கைக்கு ஒரு போதும் திரும்ப போவதில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

தாம் நாட்டுக்கு திரும்பிச் சென்றால் கொல்லப்படும் அச்சம் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.அவுஸ்திரேலியாவில் இருந்து வெளியாகும் தெ.மோனிங் ஹெரால்ட் செய்தித்தாள் இந்த செய்தியை பிரசுரித்துள்ளது.

இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் ராஜபக்ஷ குடும்பத்தினரின் அராஜகங்களுக்கு எதிராக செய்திகளை வெளியிட்டமை காரணமாக தமக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

அத்துடன் தமது கடவுச் சீட்டும் பறிமுதல் செய்யப்பட்டது. எனினும் மாற்று வழியில் தாமும் தமது இரண்டு மகள்மாரும் நாட்டில் இருந்து வெளியேறி மேற்கத்தைய நாடு ஒன்றில் தஞ்சம் அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# வாகனங்கள் குறித்து விசாரணை நடத்த அதிகாரிகள் விரைவர்

### மோட்டார் வாகன திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

வடபகுதி மக்களுக்கு சொந்தமான சுமார் 4 ஆயிரம் வாகனங்கள் கிளிநொச்சி- முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களின் இரு புறமும் உள்ள காடுகளில் துருப்பிடித்து வருகின்றன. இந்த வாகனங்கள் குறித்து விசாரணை நடத்த மோட்டார் வாகன திணைக்கள ஆணையாளர் அதிகாரிகளை அனுப்பி வைக்க தீர்மானித்துள்ளார்.

வாகனங்களின் இலக்கங்களை பரி சோதித்து அவற்றின் உரிமையாளர்களை அடையாளம் காண்பதற்காக அங்கு செல்ல பாதுகாப்பு தரப்பினரின் பாதுகாப்பை கேட்டுள்ளதாக ஆணையாளர் எச். எஸ்.ஹரிச்சந்திர கூறியுள்ளார்.

அந்த பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதா என்பதை ஆராய்ந்து அதிகாரிகள் அங்கு அனுப்பி வைக்கப்பட வுள்ளனர்.

இதற்கு முன்னர் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் வாகனங்களை பரிசோதித்து சுமார் 2 ஆயிரம் வாகனங்களை அதன் உரிமையாளர்களுக்கு வழங்கியுள்ளது. மேலும் ஆயிரம் வாகனங்கள் அவற்றின் உரிமையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (அ)


**கந்தஷஷ்டியில் கந்தன் நாமங்களில் உருக**



நாம அர்ச்சனைகளே நம்மை உய்விக்க வைப்பன. உங்கள் ஆலயங்களில் கந்தன் கழலிணைகளில் அனைவரையும் சேர்த்து ஒரு மணிநேரம் இருத்தி ஆனந்திக்க வைக்கும் தனித்துவமான முற்றிலும் வித்தியாசமான இன்னிசை


**முருகநாம அர்ச்சனை**

(நாமங்கள் மட்டும்)

பக்க வாத்தியங்களுடன் அமைத்து விழாக்களை சகல நாம அர்ச்சனைகளுடன் தெய்வீகமாக்க தொடர்புகொள்க. கவிமணி அன்னைதாஸன் உதித்தனன் உலகமுய்ய என்ற இசைச்சொற்பொழிவு சீடியும் உண்டு.

(940) ஸ்ரீரங்கம் தொ.பே: 0770333396 ஊரெழு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சங்கானை மீன் சந்தை வியாபாரிகளாகிய எமக்கு மட்டும் இந்த வரி ஏன்?

வலிகாமம் மேற்கு சங்கானை எனும் விலாசத்தில் மீன் வியாபாரம் செய்யும் மீன் வியாபாரிகள் ஆகிய நாம் அறியத் தருவது யாதெனில், எமது மீன் சந்தையில் சுமார் 43 வியாபாரிகள் வரை மீன் வியாபாரம் செய்து வருகின்றோம். 01.01.2012 இல் இருந்து ஒரு மேல் கல்லுக்கு நாம் 40 ரூபா இட வாடகையையும் கீழ் கல்லுக்கு 30 ரூபா இட வாடகையும் ஒரு கிலோ நல் மீனுக்கு 5 ரூபா வீதமும் தரம் குறைந்த மீனுக்கு 3 ரூபா வீதமும் கொடுத்து வருகிறோம். ஆனால், தற்போது மீனின் விலை வீழ்ச்சியடைந்து விட்டது. 01.01.2013 இல் இருந்து எம்மால் அந்த வரி கட்ட முடியாது.

ஒருகணம் யாழ்ப்பாணத்தில் கல்வியங்காடு மீன் சந்தையை சிந்தித்துப் பார்ப்போம். அது எவ்வளவோ பெரிய மீன் சந்தை. அங்கே எவ்வளவு மீன் கொள்வனவு செயது விற்றாலும் 100 ரூபா தான் வரி. அதற்கு மேலே இல்லை.

கொக்குவில் சந்தையில் எவ்வளவோ மீன் விற்றாலும் 70 ரூபா தான் வரி. அதற்கு மேல் இல்லை. இவை இப்படியிருக்கும் போது சங்கானை சந்தையில் மட்டும் 1Kg இற்கு 5 ரூபா ஏன் அறவிட வேண்டும்? கல்வியங்காடு, கொக்குவில் சந்தையில் நடப்பது போல்த்தான் நாம் எமது சந்தையில் கொடுப்போம். அதற்கு மேல் எம்மால் கொடுக்க முடியாது என்பது நியாயமல்லவா?

இப்படிக்கு,
மீன் வியாபாரிகள்.

குறிப்பு:- இக் கடிதத்தில் 42 மீன் வியாபாரிகள் ஒப்பமிட்டுள்ளனர்.

## ஷிராணி ஊடகங்களுக்கு விளக்கமளித்தது தவறு

### சட்ட நிபுணர்கள் கண்டிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து பிரதம நீதியரசர் தான் நிரபராதி என்பதை பாராளுமன்ற தெரிவுக் குழுவிலேயே ஆதாரங்களை முன்வைத்து நிரூபிக்க வேண்டும்.

அதற்கு மாறாக பிரதம நீதியரசர் ஊடகங்களுக்கு தன்னுடைய வங்கி வைப்புகள் பற்றி விளக்கமளித்து அறிக்கையை தனது சட்டத்தரணிகள் மூலம் வெளியிட்டிருப்பது பாராளுமன்றத்திற்கும், பிரதம நீதியரசர் என்ற உயர் பதவிக்கும் அவமதிப்பை ஏற்படுத்தும் செயல் என்று இலங்கையின் முன்னணி சட்ட நிபுணர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

இவ்விதம் ஒரு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் ஒருவர் எத்தகைய உயர் பதவி வகித்திருந்தாலும் அதுபற்றி தான் நிரபராதி என்பதை பாராளுமன்ற தெரிவிக்குழுவுக்கு சமுகமளித்து நிரூபிக்க வேண்டுமே தவிர வெளியில் ஊடங்களுக்கும் தனது நிலைப்பாட்டை அறிவிப்பது சட்ட விரோதமான செயல் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்

பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு ஒரு குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்பட்ட பின்னர் அதுபற்றி குற்றம் சாட்டப்பட்டவரோ, சம்பந்தப்பட்டவர் மீது குற்றம் சுமத்தியவர்களோ வெளியில் எவ்வித கருத்தையும் தெரிவிப்பது பாராளுமன்ற நலவுரிமைகளை அவமதிக்கும் ஒரு செயலாக கருதப்படும்.

எனவே, இது விடயத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் மௌனமாக இருந்து தெரிவுக்குழுவின் விசாரணையை சீராக நடத்துவதற்கு ஒத்துழைப்பு அளிப்பது அவசியம்

ஆயினும், இப்போது இந்த சம்பிரதாயத்தை மீறி, பிரதம நீதியரசர் கலாநிதி திருமதி ஷிராணி பண்டாரநாயக்க அந்த நிபந்தனையை மீறி தனது நிலைப்பாட்டை ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்தியிருப்பதனால் அவர் மீது குற்றம் சுமத்தியவர்களும் இந்தக் குற்றப்பத்திரிகை குறித்து வெளியில் பகிரங்கமாககருத்துதெரிவிக்க ஆரம்பித்தால் அதனை தவறு என்று அறிவிப்பது தர்மசங்கடமாக இருக்கும் என்றும் இந்த சட்டத்தரணிகள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இதேவேளை, பாராளுமன்றத்தில் பிரதம நீதியரசர் கலாநிதி திருமதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணை தாக்கல் செய்திருப்பது குறித்து நாட்டில் பல தரப்பட்ட கருத்துக்களை சட்ட நிபுணர்கள் இப்போது வெளியிட்டு வருகிறார்கள்.

பிரதம நீதியரசருக்கு எதிராக பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப் பிரேரணை இப்போது பாராளுமன்றத்தின் பரிசீலனைக்கு விடுக்கப்பட்டிருப்பதனால் இந்தக் குற்றப் பிரேரணை பற்றி கலந்துரையாடுவது சட்டவிரோதமான செயல் என்றும் இதனால் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்திற்கு அவப் பெயர் ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கும் இந்த சங்கம் இந்தக் குற்றப்பத்திரிகை குறித்து முடிவெடுக்கும் பூரண அதிகாரம் பாராளுமன்ற தெரிவுக் குழுவுக்கே இருக்கிறதென்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

## கந்தசஷ்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும் மாலை 4.30 மணிக்கு கந்தசஷ்டி உற்சவம் நடைபெறவுள்ளது.

அத்துடன் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு சதுர்த்தி உற்சவமும் நடைபெறும். (அ-2)

## யானை தாக்குதலில் இருந்து மக்கள் காப்பாற்றப்படுவர்

### கமநல சேவைகள் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

காட்டு யானைகளிடம் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக துரித திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக வனஜீவராசிகள் கமநலசேவைகள் பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

காட்டு யானைகளால் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகள் தொடர்பாக உடன் தலையிட்டு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி தமக்கு உத்தரவிட்டதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

ஆயிரத்து 500 கிலோமீற்றர் நீளமான மின்வேலியின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும். இதனைப் பாதுகாக்க 40 ஆயிரம் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளின் ஒத்துழைப்பும் பெறப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மரங்களை வளர்த்து வேலிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். காட்டு யானைகளால் ஏற்படுத்தப்படும் உயிர் ஆபத்துக்களுக்கு நட்ட ஈடும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி அமைச்சர் தெரிவித்தார். (அ-2)

## தேசிய பனை நடுகை வாரம் அனுஷ்டிப்பு

(வவுனியா)

பனை வளத்தை பெருக்குவதற்கும் பனை உற்பத்தி பொருட்களின் மூலமான சுய தொழிலை மேம்படுத்தவும் தேசிய பனை நடுகை வாரம் வவுனியாவில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

பனை அபிவிருத்தி சபை இலங்கை வங்கியின் வவுனியா நகர கிளையுடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முதல்நாள் நிகழ்வுகள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மற்றும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் என்.பத்மநாதன், இலங்கை வங்கியின் நகர கிளை முகாமையாளர் றோய் ஜெயக்குமார் உட்பட பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர். இதன்போது நூறு பனை மரங்கள் முதற் கட்டமாக நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## அரசாங்கத்தின் தவறுகளுக்கு வர்ணம் பூசும் அமைச்சர்கள்

### பெயர் குறிப்பிடுகிறார் லால்காந்த

அரசாங்கத்தில் இருக்கும் வர்ணம் பூசும் மேஸ்திரிகளாக விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க, கெஹலிய ரம்பக்வெல, லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோர் இருப்பதாக ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் கருத்துரைக்கையில்,

அரசாங்கத்தில் இருக்கும் மேஸ்திரிகள் தெளிவாக கூறுவதனால் கட்டடங்களுக்கு சுண்ணாம்பு மற்றும் வர்ணம் பூசுபவர்களாக இந்த அமைச்சர்கள் இருக்கின்றனர். இவர்கள் எப்போதும் அரசாங்கத்தின் தவறுகளை மறைக்க வெள்ளைச் சுண்ணாம்பை பூசுகின்றனர்.

வாழ்க்கைச் செலவை எடுத்துக் கொண்டாலும் அதுதான் நடைபெறுகிறது. பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. பிரதம நீதியரசருக்கு அந்த பதவியை வழங்கியது யார்? மஹிந்த ராஜபக்ஷ. அவர் அந்த பதவியை வழங்கிய பின்னர் நடந்தவைதான் இந்த 14 குற்றச்சாட்டுகளும். பிரதம நீதியரசர் தவறானவர் என்றால், மஹிந்த ராஜபக்ஷவும் தவறானவராக இருக்க வேண்டும். காரணம் அவர் தான் அவரை அந்த பதவியில் நியமித்தார்.

இந்த அரசாங்கம் பதவியேற்ற போது நகரத்தில் வாழும் குடும்பம் ஒன்றின் மாத வாழ்க்கை செலவு 25 ஆயிரத்து 344 ரூபாவாக இருந்தது. தற்போது அந்த தொகை 46 ஆயிரத்து 396 ரூபாவாக அதிகரித்துள்ளது.

21 ஆயிரத்து 52 ரூபா அதிகரித்துள்ளது. மஹிந்த பதவிக்கு வந்த பின்னர் குடும்பம் ஒன்றின் செலவு 21 ஆயிரத்து 52 ரூபாவாக அதிகரித்துள்ளது. அரசாங்கம் இது குறித்து என்ன கூறுகிறது. வாழ்க்கை செலவை குறைக்க முடியாது எனக் கூறுகிறது என்றார். (அ-2)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### கந்தையா மனோகரன்

(பஞ்சவர்ணக்கிளி)

கடந்த 13.10.2012 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கந்தையா மனோகரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் (12.11.2012) நாளை திங்கட் கிழமை காலை 6 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திக்கான சபிண்டீகரண நிகழ்விலும் மதியபோசனத்திலும் தாங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்

தோற்றம்: 25.04.1930
மறைவு: 13.10.2012

பிள்ளையார் கோயிலடி,
பிரதான வீதி, தொண்டைமானாறு

(நி-1469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷிராணி மீதான குற்ற பிரேரணைக்கு சட்டத்தரணிகள் குழு கண்டனம்



(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநயாக்காவுக்கு எதிராக குற்றப்பிரேரணையொன்றை கொண்டு வரும் அரசாங்கத்தின் முயற்சியை சிரேஷ்ட சட்டத்தரணிகள் குழுவொன்று கண்டித்துள்ளது.

உயர்நீதிமன்ற வளாகத்தின் முன் கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் சிரேஷ்ட சட்டவரைஞர்களின் அரங்கம், பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள 14 குற்றச்சாட்டுக்களினதும் உண்மைத் தன்மையை கேள்விக்கு உள்ளாக்கியது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நிதி ஒழுங்கீன குற்றச்சாட்டுக்கள் முதலில் ஒரு சுதந்திரமான நீதிமன்றில் விசாரிக்கப்பட்டிருக்க வேண்டுமென ஜனாதிபதி சட்டவுரைஞர் ஸ்ரீநாத் கூறினார்.

தற்போதைய நீதி முறைமையை மாற்றுவதற்காகவே அரசாங்கம், பிரதம நீதியரசருக்கு எதிராக 14 குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது. நீதியமைப்பு அரசாங்கத்துக்கு சாதகமாக தீர்ப்பு'வழங்கவில்லை. இதனால் தான் இந்த குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்டன.

பிரதம நீதியரசர் தனது தங்கையின் பணத்தைக்கொண்டு சொத்தொன்றைக் கொள்வனவு செய்தார். இதற்கான அற்றோனி தத்துவமும் வழங்கப்பட்டிருந்தது. எனவே, இந்த பணத்தைப் பற்றிய பிரச்சினைக்கும் பிரதம நீதியரசருக்கும் தொடர்பில்லை என அவர் கூறினார்.

நீதிமன்ற கட்டளையின்றி பிரதம நீதியரசரின் வங்கிக் கணக்கு விபரங்களை அரசாங்கம் எப்படி பெற்றது. இந்த வகையில் அரசாங்கம் இந்த நாட்டின் சட்டத்தை மீறியுள்ளது என ஜனாதிபதி சட்டவுரைஞர் ஸ்ரீநாத் குறிப்பிட்டார்.

அரசாங்கமானது பிரசார பொறிமுறையின் மூலம் பிரதம நீதியரசரின் நற்பெயரை களங்கப்படுத்த முயல்கின்றது. ஒருவரின் குற்றம் நிரூபிக்கப்பட முன் அவர் நிரபராதி என கருதப்பட வேண்டும் என்பது சட்டம். இந்த உரிமை பிரதம நீதியரசருக்கு கிடைக்கவில்லை என அவர் கூறினார். (அ-2)

## ஒழுக்கத்தை கட்டியெழுப்ப பிக்குகள் உதவ வேண்டும்

(கொழும்பு)

நாட்டில் ஒழுக்கமான சமூகத்தை கட்டியெழுப்ப பௌத்த பிக்குகளின் பங்களிப்பு மிகவும் அவசியமானது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பெரகம லுனுகம்வெஹர பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டபோது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் எதிர்கால சந்ததியினரை நல்வழிப்படுத்த பௌத்த பிக்குகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். நல்ஒழுக்கம் மிக்க சமூகமொன்றை கட்டியெழுப்பாவிட்டால் அபிவிருத்தியில் எவ்வித பயனும் கிடையாது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (அ-2)

## சா/த மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் இயங்கி வரும் E-Transition (pvt) ltd. Software development company நிறுவனத்தினர் வியாபாரங்களுக்கு தேவையான மென்பொருள் வடிவமைப்பு, இணையத்தள வடிவமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளினை நடத்தி வருகின்ற னர்.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி, துணுக்காய் மற்றும் முல்லைத்தீவு வலயங்களில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் நலன் கருதி எதிர்வரும் 14, 15, 16, 17 ஆம் திகதிகளில் மாபெரும் இலவசக் கருத்தரங்கினை நடத்தவுள்ளனர்.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து நடத்தும் இந்த கருத்தரங்கில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் பாடங்கள் முன்னணி விரிவுரையாளர்களால் செய்முறை விளக்கத்துடன் கலந்துரையாடப்படும். இந்த இலவச கருத்தரங்கில் அனைத்து மாணவர்களையும் பங்குபற்றி பயன்பெறுமாறு கேட்டுள்ளனர்.

இந்நிறுவனத்தின் இலவசக் கருத்தரங்குகள் ஏற்கனவே யாழ்.வலயத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-9)

## வவு.தெற்கு பி.செ.பிரிவுக்கு 200 துவிச்சக்கரவண்டிகள்

வவுனியா தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மக்களுக்கு இந்திய அரசின் நிதியுதவியுடன் ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் 200 துவிச்சக்கர வண்டிகளை வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தில் வைத்து கையளித்தது.

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 200 குடும்பங்களுக்கு கடந்த 8 ஆம் திகதி இத்துவிச்சக்கரவண்டிகளை வழங்கியதாக நிகழ்விற்கு தலைமை வகித்த வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலய பிரதிநிதிகள், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வவுனியா அமைப்பாளர் சுமதிபால உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

## சகல எம்.பிக்களுக்கும் கணனிப் பயிற்சியாம்

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கணனிப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் கணனிப் பயிற்சி வழங்கப்பட வேண்டியது அவசியமானது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தகவல் தொழிநுட்பத்தை பயன்படுத்தி நாடாளுமன்ற செயற்பாடுகளை செயற்றிறனாக மேற்கொள்ள முடியும். கணனிப் பயிற்சிகளுக்கு தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

பயிற்சி தேவைப்படுவோருக்கு நாடாளுமன்ற செயலகத்தின் ஊடாக தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார். (அ-2)

## நெளுக்குளம் பொது மயானம் இரண்டாக பிரிக்கப்பட்டது

(வவுனியா)

வவுனியா, நெளுக்குளம் பொது மயானம் கிறிஸ்தவர்களுக்கும் இந்துக்களுக்கும் என இரண்டாக பிரித்து வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர் கே.சுபாகரன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெளுக்குளம் பொது மயானத்தில் நிலவிய இடப்பிரச்சினை தொடர்பில் பிரதேச சபை உறுப்பினர் என்ற வகையில் என்னிடம் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சபை தீர்க்கமான முடிவை மேற்கொண்டு கிறிஸ்தவர்களுக்கு ஒரு பகுதியையும் இந்துக்களுக்கு ஒரு பகுதியையும் வழங்கியது. அத்துடன் மயானத்தின் பின் பகுதி விளையாட்டு மைதானத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை சபையின் தலைவர் க.சிவலிங்கமும் நானும் நேரடியாக சென்று பார்வையிட்டு வழங்கியிருந்தோம்.

இதேவேளை, இந்த மயானத்தில் இனி வரும் காலங்களில் சமாதி அமைப்பதற்கு தடை விதித்துள்ளதுடன் ஞாபகார்த்தமாக சுற்று மதில் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் கூறினார். (அ-9)

## அக்கராயன் ஆஸ்பத்திரியில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(சிவநகர்)

அக்கராயன் வைத்தியசாலை வைத்தியர்களின் அசமந்த போக்கினால் இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் மிகவும் சிரமப்படுவதாக நோயாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். நிரந்தரமாக கடமை புரியும் வைத்தியர் கடமைக்கு சமுகம் அளிக்காத சந்தர்ப்பங்களில் பதில் கடமைக்கு வரும் வைத்தியர்கள் உரிய நேரத்திற்கு சமுகமளிப்பதில்லை.

இங்கு இரவு நேரத்தில் கடமை புரிவதற்கு வைத்தியர்கள் எவரும் இருப்பதில்லை. அத்துடன் நோயாளர் காவு வண்டி ஒன்று மாத்திரமே இங்கு உள்ளது.

இதனால் இரவு நேரத்திற்கு இவ் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் ஒருவர் நோயாளர் காவு வண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவார். அதேவேளை இன்னொரு நோயாளி அங்கு வரும் போது நோயாளர் காவு வண்டியும் இல்லாது வைத்தியர்களும் இல்லாது மிகவும் அவலப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

இவ் வைத்தியசாலையில் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வைத்திய தேவையை எதிர்நோக்கி இருப்பதாலும் கிளிநொச்சி வைத்தியசாலை மிகவும் தூரத்தில் இருப்பதாலும் நோயாளர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களை கருத்திற் கொண்டு உரிய தரப்பினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நோயாளர்களும் பொதுமக்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-254)

## புலமைப்பரிசில் தின விழா இன்று

காந்தி சிலை மீள் புனரமைப்பும் இவ்வாண்டுக்கான காந்தி புலமைப்பரிசில் தின விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு அரியாலை காந்தி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

காந்தி சனசமூக நிலைய தலைவர் சுஜெய ராஜசிங்கம் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான இந்தியத் துணைத்தூதுவர் எஸ். மகாலிங்கம் கலந்து கொள்வார். கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வெஸ்திரி அலென்ரின், ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9)


**பழந்தமிழர் இயக்கம்**

பழந்தமிழர் இயக்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்படும்

**பேராளர் மாநாடு**

காலம்: 11.11.2012 அன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப.5.30 மணி
இடம்: சொர்ணாம்பிகை மண்டபம் (TCT), நாவலர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (நாவலர் கலாசார மண்டபத்திற்கு முன்பாக)

**தலைவர்**
திரு.ம.வித்தியானந்தநேசன்
(மாவட்டப் புள்ளிவிபரவியலாளர், மாவட்ட செயலகம், மன்னார்.)
நிறுவுனர், பழந்தமிழர் இயக்கம்.

**பிரதம அதிதி**
பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
(முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

**கௌரவ விருந்தினர்**
பேராசிரியர் செ. இளங்குமரன்
(தலைவர், பொருளியல் துறை, யாழ்.பல்கலைக்கழகம்)

**பேராளர்கள்**
- பேராசிரியர் V.K.கணேசலிங்கம் (தலைவர், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.மாவட்டம்)
- பேராசிரியர் S. சிவலிங்கராசா (தமிழ்த்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- பேராசிரியர் A.N.கிருஷ்ணவேணி (தலைவர், நுண்கலைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)
- திருமதி மீரா அருள்நேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர் -தமிழ்ப் பிரிவு, யாழ்.கல்வி வலயம்)

**வரவேற்புரை**
திருமதி இராமலிங்கம் இராகினி
(கிராம உத்தியோகத்தர்-நல்லூர் தெற்கு)

**நன்றியுரை**
அருட்திரு V.P.தனேந்திரா
(ஆசிரியர், பரியோவான் கல்லூரி)

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

(930) **பழந்தமிழர் இயக்கம்**


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


# இலங்கை வரலாறு

௧௮

# ஒல்லாந்தர் காலம்

### இரண்டாம் இராஜசிங்கன்

1642 ஆம் ஆண்டு தொட்டு 1653 ஆம் ஆண்டுவரை போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையில்




இலங்கையில் ஒல்லாந்தர் காலத்து அரச சின்னம்

பத்தாண்டுச் சமாதானம் நிலவியது. அதன்பின்னர் போர்த்துக்கேயர் வசமிருந்த கோட்டைகளான களுத்துறை, அங்குறுவாத் தோட்டை என்பனவும், 1656 இல் கொழும்புக் கோட்டையும், 1658 இல் மன்னார், யாழ்ப்பாணம் ஆகியவிடங்களிலிருந்த கோட்டைகளும் கைப்பற்றப்பட்டன. ஆனால், ஒப்பந்தப்படி கண்டி மன்னனிடம் அவை ஒப்படைக்கப்படாது தாமே தம்பொறுப்பில் வைத்துக்கொண்டனர். இராஜசிங்கன், காரணத்தை வினவியபோது ஒப்பந்தப்படி ஒப்படைக்கத் தேவையில்லையென முதலில் மறுத்தனர். பின்னர் யுத்தச் செலவினங்களை தருவதாகக் கூறினர். செலவு விபரம் கேட்டபோது பன்மடங்காகச் செலவுப்பட்டியல் தரப்பட்டது. இப்பெருந்தொகைப் பணத்தை மன்னனால் தர முடியவில்லை. அதனால் அதுவரை கோட்டைகள் தம்வசம் இருக்குமெனத் தெரிவித்தனர். இவ்வாறு கண்டி மன்னனைக் கடனாளியாக்கினர். கண்டி மன்னனைச் சந்தித்துப் பேசிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த ஒல்லாந்தத் தளபதி கோஸ்ரர் என்பவன் வழியில் மறித்துக் கொலை செய்யப்பட்டான்.

1658 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து அகற்றிவிட்டு தம் ஆதிக்கத்தை இலங்கையின் கரையோரங்களில் ஒல்லாந்தர் நிலைநிறுத்திக் கொண்டனர். ஒல்லாந்தர் தாம் கைப்பற்றிய கோட்டைகளில் முக்கியமானவற்றை கண்டி மன்னனிடம் ஒப்படைக்காது அவற்றில் தம் படைப்பலத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர். கறுவா முதலான வாசனைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரதேசங்களிலிருந்த கோட்டைகளை கண்டி மன்னனிடம் ஒப்படைக்க ஒல்லாந்தர் விரும்பவில்லை. நீர்கொழும்புக் கோட்டையைத் தரைமட்டமாக்கிவிடும்படி இராஜசிங்கன் பணித்தான். ஆனால், ஒல்லாந்தர் அதனைத் திருத்தித் தம்படை தங்குமிடமாக ஆக்கிக் கொண்டனர். இரண்டாம் இராஜசிங்கனின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை.

நீர்கொழும்பு கறுவா உற்பத்தியாகும் மாவட்டமாகும். ஒப்பந்தம் மீறப்பட்டதால் கண்டி மன்னன் ஒல்லாந்தருக்கெதிராகப் பல நடவடிக்கைகளை எடுத்தான். ஒல்லாந்தப் பிரதேசங்களிலிருந்த கறுவாகக் காடுகளைத் தீக்கிரையாக்கினான். அப்பிரதேசங்களிலிருந்த கறுவா உரிப்போரைக் கட்டாயமாக மலை நாட்டில் குடியேறவைத்தான். தன் ஒல்லாந்தருக்கு விற்பனை செய்யக்கூடாதெனக் கட்டளை பிறப்பித்தான். ஒல்லாந்தருக்கு எதிராகத் தாழ்நில மக்களைத் தூண்டிவிட்டான். எல்லைப் புறங்களில் தன் படை முகாம்களை நி[illegible]வினான். [illegible] ஒல்லாந்தரின் பிரதேசங்களைத் தாக்கிக் கணிசமானளவு பிரதேசங்களைத் தன் பிரதேசத்துடன் சேர்த்துக் கொண்டான். 1675 இல் ஒல்லாந்தரின் ஆட்சிப் பிரதேசங்களாக தென்மேல் ஒடுங்கிய தாழ்நிலக் கரையோரமும், யாழ்ப்பாணமும் வன்னியும் அடங்கின.




ஒல்லாந்தரின் யாழ்ப்பாணக்கோட்டை ஐங்கோணம்

### ஒல்லாந்தரும் யாழ்ப்பாணமும்


ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் கொழும்பு அடங்கியதன் பின்னரும் இரண்டாண்டுகள் வரை வடபிரதேசம் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் விளங்கியது. மன்னார்க் கோட்டையின் துணைவலியோடு போர்த்துக்கேயர் மன்னார் முத்துச் சலாபத்தில் முத்துக் குளித்தனர். ஊர்காவற்றுறைக் கோட்டையின் நீர்வழித் தடுப்பு முகாமின் பலம்கொண்டு வலிமையான யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேலதிக பலம் சேர்த்து, யானை வர்த்தகத்தில் தொடர்ந்து ஈடுபட்டனர். 1658 ஆம் ஆண்டு மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றுவதற்காக அட்மிறல் றைக்கிளோப்வன் ஹூன்ஸ் என்ற ஒல்லாந்தத் தளபதி 1500 வீரர்களுடனும் 19 மரக்கலங்களுடனும், நார்டென் என்ற கடற்படைக்கலம் முன் செல்லப் புறப்பட்டான். மன்னார்க் கோட்டையை முற்றுகையிட்ட ஒல்லாந்தப் படை நான்கு நாட்களின் பின்னர் கோட்டையைக் கைப்பற்றியதும் தனது படை வீரர்களை இரு பிரிவுகளாகப் பிரித்து, ஒன்றைக் கடல் மார்க்கமாகவும், மற்றையதைத் தரைமார்க்கமாகப் பூநகரியூடாகவும் வழிநடாத்தி வந்தான். கடல் மார்க்கமாக வந்த படை ஊர்காவற்றைக் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தப் படை வீரர்களால் முற்றுகையிடப்பட்டது. போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் நுழைந்து தஞ்சம் எடுத்துக் கொண்டனர். ஒல்லாந்தப் படையினரின் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகை 107 நாட்கள் தொடர்ந்தது. கோட்டைக்குள் அடைக்கலம் புகுந்த போர்த்துக்கேயரைப் பட்டினியால் பான் கூன்ஸ் பணியவைத்தான். போர்த்துக்கேயர் 3000 பேருடன் சரணடைந்து, கோட்டையைக் கையளித்தனர். யாழ்ப்பாணக் கோட்டையில் போர்த்துக்கேயரின் கொடி இறக்கப்பட்டு ஒல்லாந்தரின் கொடி ஏற்றப்பட்டது. கோட்டையிலிருந்து வெளியேறுவோர் சோதனை இடப்பட்டனர். ஒரு சிறு பொருட்களைக்கூடத் தம்முடன் எடுத்துச் செல்ல ஒல்லாந்தர் அனுமதிக்கவில்லை. யாழ்ப்பாணக் கோட்டையின் வீழ்ச்சியோடு போர்த்துக்கேரின் சாம்ராஜ்ஜியம் இலங்கையில் அஸ்தமித்தது. போர்த்துக்கேயரின் சதுர வடிவான கோட்டை, திருத்தும் போது ஐங்கோணக்கோட்டையாகக் கட்டப்பட்டது. (தொடரும்)

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழிருந்த காலிக்கோட்டை




இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழிருந்த யாழ்ப்பாணக்கோட்டை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா கதைகள்

# வியாபாரத் தந்திரம்



சிவநேசனும் பிரபுவும் நல்ல நண்பர்கள்! தவிர இருவருமே நல்லவியாபாரிகள்! இருவரும் அவ்வப்போது சந்தித்து உரையாடுவதுண்டு. ஒருநாள் சிவநேசன் பிரபு வீட்டுக்கு வந்தார். இருவரும் பேசிக் கொண்டிருக்கையில் ஒரு பிச்சைக்கார இளைஞன் வாயிலில் தோன்றினான். ஐயா மிகவும் பசியா இருக்குது! சிறிது சோறு போடுங்க ஐயா! என்று அவன் பிச்சை கேட்டதும் சிவ நேசனுக்குக் கோபம் வந்தது. ஏண்டா! உன் கை, கால்கள் திடமாக இருக்கிறதே! ஏதாவது வேலை வெட்டி செய்து பிழைக்கக் கூடாதா? என்று அதட்டினார்.

அதற்கு அவன் ஐயா! நான் ஒரு அநாதை. எனக்கு வீடு, வாசல், உற்றார், உறவினர் யாருமில்லை. நான் வலியச் சென்று வேலை கேட்டாலும் யாரும் என்னை நம்பி வேலை கொடுப்பதில்லை. அதுதான் பிச்சையெடுக்கிறேன் என்றான்.

உண்மைபேசிய அவன் மீது இரக்கப்பட்ட பிரபு, உன் பெயர் என்னப்பா? என்று கேட்க, அவன் வாசு என்றான். உடனே, அவர் தன் சமையற்காரனை அழைத்து வாசுவுக்குச் சாப்பாடு போடச் சொன்னார். சாப்பிட்ட பின் அவர் வாசுவிடம் தம்பி, வாசு! பிச்சை எடுப்பது மிகவும் ஈனமான செயல்! உன்னைப் போன்ற இளைஞன் பிச்சையெடுப்பது பெருந் தவறு. நீ கடினமாக முயற்சி செய்தால் உனக்கு யாராவது வேலை தராமலா போவார்கள் என்றார்.

ஐயா! அந்த ஒருவர் நீங்களாக இருங்களேன்! நீங்கள் என்னை நம்பிவேலை கொடுங்கள் ஐயா! எதுவானாலும் நான் முயற்சியுடன் செய்வேன் என்று கூறினான் வாசு.


சபாஷ்! நானே உனக்கு வேலை தருகிறேன். ஒரு கூடை நிறைய மல்கோவா மாம்பழம் தருவேன். நீ போய் அவற்றை வீடுவீடாகப் விற்றுப் பணத்தைக் கொண்டு வா! நீ நேர்மையாகவும் சாமர்த்தியமாகவும் நடக்கிறாயா என்று பார்க்கிறேன் என்றார் பிரபு.

உடனே அவர் தன்னுடைய வேலையாட்களிடம் சொல்ல அவர்களில் ஒருவன் கூடை நிறைய மல்கோவா மாம்பழம் கொண்டு வந்தான். மற்றவன் நல்லவேட்டி சட்டையும் கொண்டு வந்தான். இரண்டையும் வாசுவிடம் தந்த பிரபு, நீ இப்போது உடுத்தியுள்ள கந்தலுடன் சென்று பழம் விற்றால் யாரும் உன்னிடம் வாங்கமாட்டார்கள். அதனால் புதிய துணிமணிகள் அணிந்து போய் விற்பனைசெய் என்றார்.

பிரபுவுக்கு ஒரு பெரிய கும்பிடு போட்ட வாசு ஐயா இந்தப் பழங்களின் தற்போதைய விலை என்ன என்று எனக்குத் தெரியாது. தயவுசெய்து அதைக் குறிப்பிட்டால்... என்பதற்குள் சபாஷ் புத்திசாலியாக இருக்கிறாயே! சந்தையில் இதன் விலை இருபது ரூபாய். ஆனால் நீ வீடு வீடாகச் சென்று விற்பதால் கூடுதல் விலைக்கு விற்கலாம். சரிபோய் இவற்றை விற்றுவிட்டுப்பணம் கொண்டுவா என்று சொல்லி அவனை அனுப்பினார்.

உடனே சிவநேசன் பிரபு என்ன காரியம் செய்தாய்? யாரோ முன்பின் தெரியாத ஆள் மேல் இரக்கப்பட்டு சாப்பாடு போட்டாய். அது பரவாயில்லை. ஆனால் அவன் மீது நம்பிக்கை வைத்து இரண்டாயிரம் ரூபாய் மதிப்புள்ள மாம்பழங்களைத் தரலாமா! அவன் அப்படியே அதை விற்றுக்காசாக்கி தன் பையில் போட்டுக்கொண்டு ஓடிவிடுவான். அவன் திரும்பி வருவான் என்றா நினைக்கிறாய்? கண்டிப்பாக வரமாட்டான் என்றார்.

போனால் போகிறது சிவா! நாமிருவரும் அன்று ராகவன் செய்த உதவியினால்தான் இன்று நம் வாழ்க்கைச் சக்கரம் ஓடுகிறது. அதுபோல் எனக்கும் தம்



மால் முடிந்த உதவியை யாராவது ஒருவனுக்குச் செய்து அவனுக்கு வழிகாட்டவேண்டும் எனத் தோன்றியது. அவன் திரும்பி வரவில்லையென்றால் கவலைப் படமாட்டேன் என்றான் பிரபு.


அன்று மாலை வரை இருவரும் பேசிக்கொண்டிருந்தனர். பின்னர் பிரபுவும் சிவநேசனும் வீட்டை வீட்டுப் புறப்பட்டனர். பிரபு உன் ஆள் திரும்பி வரவேயில்லை. பார்த்தாயா? நன்றாக உன்னை ஏமாற்றிவிட்டான் என்று சிவநேசன் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே வாசு அங்கு வந்துவிட்டான்.

வந்தவன் பிரபுவை மீண்டும் வணங்கிவிட்டு ஐயா எல்லாம் உங்கள் கைராசி! நீங்கள் கொடுத்த மாம்பழங் கள் எல்லாம் விற்றுவிட்டன என்றான்.

அப்படியா மிகவும் சந்தோஷம்! என்ன விலைக்கு விற்றாய்? என்று பிரபு கேட்டார்.

ஐயா! சந்தை விலை இருபது ரூபாய் என்றீர்கள். நான் ஐந்து பழம் வாங்கினால் ஒரு பழம் இலவசம் என்று சொல்லி ஒரு பழம் முப்பது ரூபாய் என்று விற்றேன். கூடையில் 126 பழங்கள் இருந்தன. சந்தை விலையான இருபது ரூபாய்க்கு விற்றிருந்தால் 2 ஆயிரத்து 520 ரூபாய் கிடைத்திருக்கும். ஆனால் என்னுடைய யோசனையின்படி ஐந்துக்கு ஒன்று இலவசம் என்ற கணக்குப்படி 26 பழங்கள் இலவசமாகக் கொடுத்தும் எனக்கு 30 ரூபாய் ஒரு பழம் என்ற விலையில் மொத்தம் 3ஆயிரத்து 150 ரூபாய், அதாவது 630 ரூபாய் கூடுதலாகக் கிடைத்தது. இந்தாருங்கள் மொத்தப்பணமும் என்று பணத்தைக் கொடுத்தான்.

சபாஷ் வாசு சபாஷ்! உன்னைப் பார்த்து பெருமைப்படுகிறேன். நான் கற்றுத்தராமலே உனக்கு வியாபார தந்திரம் நன்றாகத் தெரிந்திருக்கிறது. இன்று கிடைத்த இலாபம் அத்தனையும் நீயே எடுத்துக்கொள்! நாளை முதல் தினமும் வீட்டுக்கு வா! இரண்டு கூடை மாம்பழம் எடுத்து விற்பனை செய்து இலாபம் சம்பாதி! இப்படியே தொடர்ந்து



வியாபாரம் செய்தால் விரைவில் நீ சொந்தத்திலேயே வியாபாரம் தொடங்கிவிடுவாய். அதற்குத் தேவையான சாமர்த்தியமும் உழைப்பும் உன்னிடம் உள்ளது என்று அவனைப் பாராட்டி அனுப்பினார் பிரபு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள

# இந்து ஆலயங்களுக்கு செல்ல எந்தத் தடையும் விதிக்கவில்லை

## புத்தசாசன மதவிவகார பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள்ளிருக்கும் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. பாதுகாப்பு வரம்புகளுக்கு உட்பட்ட விதத்தில் மக்கள் இப்பகுதிகளுக்குச் சென்று வழிபாடு செய்யலாம் என புத்தசாசன மத விவகார பிரதி அமைச்சர் எம். கே.டி.எஸ். குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச கேட்ட வாய்மொழி மூல விடைக்கான கேள்வியொன்றுக்கு நேற்று முன்தினம் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்கம் இந்து கோயில்களின் புனரமைப்பு மற்றும் திருப்பணி வேலைகளுக்கென வருடாந்தம் பெருந்தொகை நிதியை ஒதுக்கியுள்ளது.

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை 24 கோடியே 49 ஆயிரத்து 250 ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதில் 21 கோடியே 9 இலட்சத்து 61 ஆயிரத்து 487 ரூபா 75 சதம் இந்து ஆலயங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கில் அழிவடைந்த இந்து ஆலயங்கள் மட்டுமல்ல அனைத்து வணக்கஸ்தலங்களும் புனரமைக்கும் பணி தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இந்து சமய இந்து கலாசார திணைக்களத்தில் இதுவரை 5 ஆயிரத்து 600 கோயில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்து ஆலயங்களிலிருந்து கிடைக்கும் கோரிக்கைகளுக்கு அமைய அவற்றுக்கான நிதி வழங்கப்படும் என்றும் பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்த்தன தெரிவித்தார். (அ-2)

# மொஹான் பீரிஸை நீதியரசராக நியமிக்கக் கூடாது-வாசுதேவ

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவியில் இருந்து நீக்கினாலும் அந்தப் பதவியில் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸை நியமிக்கக் கூடாது என அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நீதியரசராக நியமிக்கப்படுபவர் குறித்து வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாகவும் மொஹான் பீரிஸ் போன்ற நீதிமன்றத்திற்கு வெளியில் இருப்பவரை அந்த பதவியில் நியமிப்பதை தான் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். அவ்வாறு நடந்தால் அரசாங்கம் மீதுள்ள மக்களின் நம்பிக்கை வீழ்ச்சியடையும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதற்கும் நீதிமன்றத்திற்கு வெளியில் இருப்பவரை பிரதம நீதியரசராக நியமிப்பதையும் தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

# வீரகத்தியப்பா மதகு புனரமைப்பு

## 13 இலட்சம் செலவு

(வெற்றிலைக்கேணி)

வடமராட்சி கிழக்கின் கரை யோர வீதியின் மதகு புனரமைப்புச் செய்யப்பட்டு வருகிறது. வெற்றிலைக்கேணிக்கும் கட்டைக்காட்டிற்கும் இடைப்பட்ட மதகு இவ்வாறு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதியிலிருந்து புனரமைப்பு செய்யப்படுகிறது. புனரமைக்கும் பணிகள் யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

தாளையடி முதல் சுண்டிக்குளம் வரையான கரையோர வீதி, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினுடையது. சமீபத்தில் இடம்பெற்ற மருதங்கேணி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இலங்கை போக்குவரத்து சபை உயர் அதிகாரிகளால் இம்மதகினூடாக பேருந்த சேவையை நடத்த முடியாமல் உள்ளது எனச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

ஒருங்கிணைப்பு குழுத்தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்து அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 13 இலட்சம் நிதி ஒதுக்கீட்டினூடாக வெற்றிலைக்கேணிக்கும் கட்டைக்காட்டிற்கும் இடைப்பட்ட (வீரகத்தியப்பா தொடு வாய்) இம்மதகு புனரமைக்கப்படுகிறது.

இன்னும் சில நாட்களில் இம் மதகு மக்கள் பாவனைக்கு திறந்து விடப்படவுள்ளது. (அ-2)

# விலக்கப்பட்டவர்களை இணைத்துக் கொள்ளுங்கள்

## பிக்குகள் ரணிலிடம் கோரிக்கை

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்களை மீண்டும் இணைத்துக் கொள்ளுமாறு பிக்குகள், கட்சித் தலைவர் ரணிலிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி கொழும்பு ஹயிட் திடலில் இடம்பெற்ற ஐக்கிய பிக்குகள் முன்னணியின் கூட்டத்தில் பங்கேற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 11 பிரதேச சபை உறுப்பினர்களின் உறுப்புரிமை இரத்து செய்யப்பட்ட கடிதங்கள் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டன.

இதனிடையே ஐக்கிய பிக்குகள் முன்னணி எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்கவிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

கட்சி உறுப்புரிமை நீக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித ரங்கே பண்டார மற்றும் அசோக அபேசிங்க உள்ளிட்டவர்களதும் பிரதேச சபை உறுப்பினர்களதும் உறுப்புரிமைகளை மீள வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர்.

சரத் பொன்சேகா அந்த கூட்டத்தில் பங்கு கொண்டமையை காரணம் காட்டியே ஐக்கிய தேசியக்கட்சி வன்மையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

நாரஹேன்பிட்டி தர்மாராம விகாரையிலிருந்து நேற்று முன் தினம் பாதயாத்திரையாக சென்ற பிக்குகள் முன்னணியின் உறுப்பினர்கள் சிலர் எதிர்க்கட்சி தலைவர் காரியாலயத்தில் வைத்து ரணில் விக்ரமசிங்கவிடம் தமது கோரிக்கை மகஜரை கையளித்துள்ளனர். (அ-2)




★1500-பிரான்சின் பன்னிரண்டாம் லூயி மன்னனுக்கும் அராகனின் இரண்டாம் பேர்டினண்ட் மன்னனுக்கும் இடையில் நேபில்ஸ் பேரரசைத் தமக்கிடையே பிரிக்க உடன்பாடு எட்டப்பட்டது.

★1673-உக்ரேனின் கோட்டின் என்ற இடத்தில் போலந்து- லித்து வேனியப் படைகள் ஒட்டோமான் இராணுவத்தைத் தோற்கடித்தன.

★1675-குரு கோவிந்த் சிங் சீக்கியர்களின் 10 ஆவது குருவானார்.

★1675-லெய்ப்னிட்ஸ் (Gottfried Leibniz) என்பவர் (y=f(x) என்ற செயலி ஒன்றின் வரைபின் பரப்பைக் காணுவதற்கு முதன் முறையாக தொகையீட்டு நுண்கணிதத்தைப் பாவித்தார்.

★1778-மத்திய நியூயோர்க்கில் செனெக்கா இந்தியர்கள் 40 பேரைக் கொன்றனர்.

★1831-அடிமைப் புரட்சியில் ஈடுபட்டமைக்காக கைது செய்யப்பட்ட நாட்டர்னர் வேர்ஜீனியாவில் தூக்கிலிடப்பட்டான்.

★1865-டீஸ்ட்டா ஆற்றின் கிழக்குப் பகுதிகளை பூட்டான் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்குக் கொடுத்தது.

★1880-அவுஸ்திரேலியாவின் புஸ்ராஸ்கர் நெட் கெல்லி மெல்பேர்னில் தூக்கிலிடப்பட்டான்.

★1887-ஐக்கிய அமெரிக்காவின் சிக்காகோ நகரில் தொழிலாளர் தலைவர்கள் ஆகஸ்ட் ஸ்பைஸ், ஆல்பேர்ட் பார்சன்ஸ், அடொல் ஃப்ஃபிஷர், ஜோர்ஜ் ஏங்கல் ஆகியோர் தூக்கிலிடப்பட்டனர்.

★1889-வோஷிங்டன் ஐக்கிய அமெரிக்காவின் 42 ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.

★1909-ஹவாயில் பேர்ள் துறைமுகத்தில் அமெரிக்கக் கடற்படைத் தளம் அமைக்கப்பட்டது.

★1918-பிரான்சில் கொம்பியேன் காடு என்ற இடத்தில் தொடரூந்துப் பெட்டி ஒன்றில் ஜேர்மனிக்கும் கூட்டுப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. முதலாம் உலகப் போர் 11 மணிக்கு முடிவுக்கு வந்தது.

★1918-ஜோசப் பித்சூத்ஸ்கி வார்சாவுக்குத் திரும்பி போலந்தின் உயர் இராணுவப் பதவியைப் பெற்றான். போலந்து விடுதலை பெற்றது.

★1919-இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது.

★1930-அல்பேர்ட் ஐன்ஸ்டைன், லியோ சிலார்ட் ஆகியோர் தமது கண்டுபிடிப்பான ஐன்ஸ்டைன் குளிர் சாதனப் பெட்டிக்கான காப்புரிமத்தைப் பெற்றனர்.

★1933-யாழ். பொதுநூல்நிலையம் அமைக்கப்பட்டது.

★1940-ஐக்கிய அமெரிக்காவின் மிட்வெஸ்ட் நகரில் எதிர்பாராத சூறாவளியினால் 144 பேர் உயிரிழந்தனர்.

★1942-இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனி, பிரான்ஸ் மீதான தனது முற்றுகையை முடித்தது.

★1960-தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நியோடின் டியெம் மீதான இராணுவப் புரட்சி தோல்வியில் முடிந்தது.

★1965-ரொடீசியாவில் இயன் ஸ்மித் தலைமையிலான வெள்ளை இன சிறுபான்மை அரசு விடுதலையை அறிவித்தது.

★1966-நாசா ஜெமினி 12 கப்பலை விண்ணுக்கு அனுப்பியது.

★1968-மாலைதீவுகளில் இரண்டாவது குடியரசு அறிவிக்கப்பட்டது.

★1975-அவுஸ்திரேலியப் பிரதமர் கஃப் விட்லம் தலைமையிலான அரசை அதன் ஆளுநர் கலைத்தார்.

★1992-இங்கிலாந்து திருச்சபை பெண்களையும் சமய குருக்களாக சேர்ப்பதற்கு முடிவெடுத்தது.

★2004-யாசர் அரபாத் உயிரிழந்து விட்டதாக பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவித்தது. மஹ்மூத் அப்பாஸ் தலைவரானார்.

**பிறப்புக்கள்**

★1821-பியோதர் தஸ்தயெவ்ஸ்கி, ரஷ்ய எழுத்தாளர் (இ.1881)

★1937-ப.ஆப்டீன், ஈழத்து எழுத்தாளர்

★1945-டானியல் ஒர்ட்டேகா, நிக்கராகுவாவின் குடியரசுத் தலைவர்

**இறப்புக்கள்**


★2004-யாசர் அரபாத்,பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் , நோபல் பரிசாளர் (பி.1929)

★2005-பீட்டர் டிரக்கர், ஆஸ்திரிய மேலாண்மை அறிவியலாளர் (பி.1909)

**சிறப்பு நாள்**

பொதுநலவாய நாடுகள் - நினைவுறுத்தும் தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமெரிக்க அதிபர் தேர்தலில் பராக் ஒபாமா மீண்டும் பெரும் வெற்றி பெற்றுள்ளார். இது குறித்து அவர் டிவிட்டரில் எழுதியுள்ள செய்தியில் மேலும் 4 ஆண்டுகள்... நன்றி... இந்த வெற்றி ஒரு விபத்தல்ல. அமெரிக்க மக்கள் மற்றும் என் ஆதரவாளர்களின் வெற்றியாகும். இதற்காக மீண்டும் உங்களுக்கு நன்றி என்று கூறியுள்ளார். கடந்த 6 ஆம் திகதி தேர்தல் முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் அதிபர் ஒபாமாவும் குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரம்னியும் மாறி மாறி மாநிலங்களைக் கைப்பற்றினார். போட்டி கொஞ்சம் கடுமையாக இருந்தாலும், பெரும்பாலும் ஒபாமாவின் கையே ஓங்கி இருந்தது.

அதிபர் ஒபாமா, இலனாய், கனக்டிகட், மெய்ன், கொலம்பியா, டெலவரே, ரோட் ஐலன்ட், மேரிலான்ட் ஆகியவற்றை வென்றுள்ளார். ராம்னி தற்போது ஆளுநராக உள்ள மாசசூசட்ஸையும் ஒபாமாவே வென்றார். ஜார்ஜியா, டென்னஸி, ஓக்லஹாமா ஆகிய மாநிலங்களில் ராம்னி வெற்றி பெற்றார். தெற்கு பட்ட ப்ளோடா மற்றும் ஒஹோவை ஒபாமா வென்றதால் வெற்றியை தழுவிக்கொண்டார்.

கறுப்பினத்தைச் சேர்ந்த ஒருவர் தொடர்ந்து இருமுறை அதிபரானது அமெரிக்க வரலாற்றில் இதுவே முதல்முறை. அந்த வகையில் மார்ட்டின் லூதர் கிங்குக்கு இணையான புகழை ஒபாமா பெற்றுவிட்டதாக அமெரிக்க மீடியா வர்ணித்துள்ளது.

அமெரிக்க தேர்தல் முறை வித்தியாசமானது. பரந்துபட்ட நிலப்பரப்பு என்பதால், அங்கு நேர வித்தியாசம் உண்டு. அமெரிக்காவின் வட முனையான அலாஸ்காவுக்கும் கிழக்கு முனையான ஹவாயிக்கும் 6 மணி நேர வித்தியாசம் உண்டு.

கிழக்கில் வாக்குகள் எண்ண ஆரம்பிக்கும்போது மேற்கு மற்றும் வடக்கில் வாக்குப் பதிவு நடந்து கொண்டிருந்தது.

கிழக்கு மாகாணங்களில் ராம்னி ஆரம்ப வெற்றியைப் பெற்று வந்தார். ஆனால், நேரம் செல்லச் செல்ல, ஒபாமா வெற்றிப் பாதைக்கு வந்துவிட்டார்.

மேற்குப் பகுதியில் வாக்குப் பதிவு முடிந்த கையோடு எண்ணிக்கையை

தால் ஒபாமாவுக்கு 300 வாக்குகள் வரை கிடைக்கலாம் என சேனல்கள் அறிவித்திருந்தன. ஆனால், ஒபாமாவின் வெற்றி உறுதி செய்யப்பட்டு விட்டதால் அவர் வெள்ளை மாளிகையில் அடுத்த நான்காண்டுகள் அமர்வதை அனைத்து தரப்பும் அதிகாரப் பூர்வமாக அறிவித்துவிட்டன.

**அதிபர் ஒபாமாவும், இன்னும் நான்காண்டுகள் வெள்ளை மாளிகை வாசம்...**

அவர் வெற்றி பெற்றார் என்பதை அறிவித்ததும் சிகாகோ உள்ளிட்ட நகரங்களில் மக்கள் உற்சாகத்தில் மிதந்தனர். தெருக்களில் இனிப்பு வழங்கியும், பட்டாசு வெடித்தும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர். அமெரிக்காவின் முதல் கறுப்பு இன அதிபரான ஒபாமா, தான் மீண்டும் அதிபராகத்தேர்ந்தெடுக்கப்படுவதற்குத் தேவையான 270 வாக்குகளைவிட கூடுதலான வாக்குகளைப் பெற்று, தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரோம்னியைத் தோற்கடித்திருக்கிறார். சிகாகோவில் தனது ஆதரவாளர்களிடையே பேசிய ஒபாமா, மிட் ரோம்னியுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாகத்




வாழ்த்துக்களைத் தெரிவித்த ராம்னி, இத்துடன் அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார். இந்தத் தேர்தலில் ஒபாமாவுக்கு 284 வாக்குகள் கிடைத்துவிட்டன. அறுதிப் பெரும்பான்மையுடன் அவர் மீண்டும் அதிபராகத் தொடர்கிறார். மேலும் பாப்புலர் வாக்குகள் என்ற பிரிவில் ஒரு சதவீதம் பின்தங்கியிருந்த ஒபாமா, இப்போதும் அதிலும் வென்றுவிட்



ரயன், மனைவி ஆன் ராம்னி மற்றும் ஆதரவாளர்களுக்கு நன்றி தெரிவித்தார். கட்சி அடிப்படையில் பிளவுபடாமல் அமெரிக்கர்களாக ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இது போன்ற நெருக்கடியான நேரத்தில், அரசியல் மோதல்களுக்கு இடம் கொடுக்காமல், மக்கள் நலனை முன்னிறுத்தி செயற்பட வேண்டியது அவசியம் என்று மிட் ரோம்னி தெரிவித்தார். நான் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் நாட்டை வேறு திசையில் கொண்டு சென்றிருப்பேன். ஆனால், மக்கள் வேறு தலைவரைத் தேர்தெடுத்திருப்பதால் நானும் அவர்களுடன் சேர்ந்து அவருக்காவும் இந்த நாட்டுக்காகவும் பிரார்த்தனை செய்கிறேன் என்றார் மிட் ரோம்னி. அமெரிக்கா நன்றாக இருக்க வேண்டும் என்றுதான் நான் போட்டியிட்டேன். கடவுள் அமெரிக்காவை காப்பாற்றட்டும் என்றார் இறுதியாக.

# வரலாறு படைத்தார் பராக் ஒபாமா...!

கரோலினாவில் ராம்னி வென்றுள்ளார். இங்கு ஒபாமா அதிபராக இருந்தபோது ஒருமுறைகூட சென்ற



தில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோல் மேற்கு வர்ஜீனியாவிலும் ராம்னியே வென்றுள்ளார். மறுபக்கம் வெர்மான்ட்டில் ஒபாமா வெற்றி பெற்றுள்ளார். கென்டகியை ராம்னி வென்றுள்ளார். இன்டியானாவையும் அவர் பெற்றுள்ளார். கடைசி நேரத்தில் ராம்னி பிரச்சாரம் செய்த பென்சில்வேனியாவை ஒபாமா வென்றுள்ளார். இரு வேட்பாளர்களும் மாறி மாறி மாகாணங்களைக் கைப்பற்றி வந்தனர். கிட்டத்தட்ட இருவருக்கும் சமமான வாக்குகள் கிடைக்கும் நிலைதான் இருந்தது. ஆனால், முடிவை நிர்ணயிக்கும் மாநிலங்கள் எனப்

ஆரம்பித்துவிட்டனர். கலிபோர்னியாவில் வாக்குப் பதிவு முடிந்து எண்ணிக்கை நிலவரம் தெரிந்ததுமே ஒபாமா வெற்றி என சிபிஎஸ், என்பிசி சேனல்கள் அறிவித்துவிட்டன. ராம்னி ஆதரவு சேனல் எனப்பட்ட ஃபாக்ஸ் ஆதிகாரப்பூர்வமாகவே அறிவித்துவிட்டது ஒபாமாதான் அதிபர் என்று. பாப்புலர் வாக்குகள் எனும் பிரிவில் ஒபாமாவுக்கும் ராம்னிக்கும் இடையில் ஒரு சதவீத வித்தியாசம் இருந்தது. ஆனால், அதிபராகத் தேவையான வாக்குகள் 270 இதில் ஒபாமா இதுவரை 280 வாக்குகள் வரை பெற்றுவிட்டார். எதிர்த்துப்போட்டியிட்ட ராம்னிக்கு 203 வாக்குகள் மட்டுமே கிடைத்திருந்தன. இன்னும் சில மாகாண வாக்குகள் வரவேண்டியுள்ளன. அவற்றையும் சேர்த்

தெரிவித்தார். அமெரிக்கப் பொருளாதாரம் கடுமையான நெருக்கடியைச் சந்தித்து வந்தபோதிலும், மிட் ரோம்னி கடுமையான போட்டியை ஏற்படுத்திய நேரத்திலும் ஒபாமா வெற்றி பெற்றிருக்கிறார்.

ஃபுளோரிடா மாகாண வாக்குகள் இன்னும் முடிவாகாத நிலையில் ஒபாமா 303 வாக்குகளைப் பெற்றிருக்கிறார். மிட் ரோம்னி 206 வாக்குகளைப் பெற்றிருக்கிறார். இந்த வெற்றியை அடுத்து ஒபாமா மேலும் நான்கு ஆண்டுகளுக்கு அதிபர் பதவியில் நீடிப்பார். அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று நடைபெற்றது. வாக்குப்பதிவு நிறைவடைந்த பிறகு வாக்குகள் எண்ணும் பணிகள் தொடங்கின. அமெரிக்க செனட் சபையில் ஒபாமாவின் ஜனநாயகக் கட்சி பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது. அதேநேரத்தில் குடியரசுக் கட்சி அமெரிக்க காங்கிரஸ் சபையில் பெரும்பான்மையைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

**தோல்வியை ஏற்றுக் கொண்டு ஒபாமாவை வாழ்த்தினார் ராம்னி!– அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார்.**

அதிபர் தேர்தலில் தனது தோல்வியை ஒப்புக் கொண்டார் குடியரசுக்கட்சி வேட்பாளர் மிட் ராம்னி. அதிபர் ஒபாமாவுக்கு போனில் தன்

டார். இந்த நிலையில் தோல்வியை ஒப்புக் கொண்டார் ராம்னி. இதனை தனது ஆதரவாளர்களுக்கும் தெரிவித்து, தனக்காக வேலைபார்த்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். தொலைபேசியில் அதிபர் ஒபாமாவை அழைத்து வாழ்த்து தெரிவித்தார் ராம்னி. முதல் பெண் மணி மிஷல் மற்றும் ஒபாமாவின் குழந்தைகளுக்கும் அவர் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். அதிபர் ஒபாமா அடுத்த நான்கு ஆண்டுகள் அமெரிக்காவை சிறந்த வழியில் அழைத்து செல்வார் என நம்புவதாக அவர் தனது பேச்சின்போது



குறிப்பிட்டார். அவருடன் துணை அதிபர் பதவிக்கு போட்டியிட்ட பால்

கவர்னராகவோ, செனட் உறுப்பினராகவோ இல்லாததால் இந்தத் தோல்வியுடன் அரசியலிலிருந்து ஓய்வு பெறுகிறார் ராம்னி.

மீண்டும் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒபாமாவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி, பிரதமர் மன்மோகன் சிங், பிரிட்டன் பிரதமர் டேவிட் கேமரூன்,

*தொகுப்பு: துளசி*

தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி, தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, உட்பட பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற இறைமையை தூக்கிச் செல்ல இடமளியோம்

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு



(கொழும்பு)

**பாராளுமன்றத்திற்குள்ள அதிகாரத்தை வேறு இடத்துக்கு மாற்ற மேற்கொள்ளும் முயற்சிக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. மக்களின் இறைமை பாராளுமன்றத்திற்கே உள்ளது என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான முதலாம் நாள் விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

மக்களின் இறைமை பாராளுமன்றத்திற்கே உள்ளது. நிதி தொடர்பான அதிகாரம் பாராளுமன்றத்திற்கே இருக்கிறது. அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதிக்கு நிதி அமைச்சராக பதவி வகிக்க முடியாது என சுமந்திரன் எம்.பி. தெரிவித்தார்.

ஆனால், ரீ.பி. விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் ஜனாதிபதி பதவியை வகித்தவாறு நிதி அமைச்சு பதவி வகித்தனர்.

மக்கள் இறைமையினூடாக கிடைத்துள்ள பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை வேறு இடத்துக்கு கொண்டு செல்ல முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பாராளுமன்றத்திற்குள்ள இறைமையை மாற்றுவதை எம்.பிக்கள் விரும்புகின்றனரா?

நீதிமன்றத்தை விட பாராளுமன்றமே அதி உயர்வானது என முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க தீர்ப்பு வழங்கினார்.

உயர்தர மாணவர்களின் இசட் புள்ளி கணிப்பீடு தவறானது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. வேறு முறைமையொன்றை கொண்டு வருமாறு உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பாதிப்பை இன்றும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பினால் மேலதிகமாக 5 ஆயிரம் மாணவர்களை சேர்க்க நேரிட்டுள்ளது. எனவே, பாராளுமன்றத்திற்குள்ள இறைமையை அலகுகளினால் தூக்கிச் செல்ல இடமளிக்க முடியாது.

அரசாங்கத்தின் மொத்த வருமானம் 2013 இல் ஆயிரத்து 200 பில்லியன்களாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் அரச ஊழியர்களின் சம்பளத்திற்காக 414 பில்லியன் செலவிடப்படுகிறது.

வேறு பொருட்கள் சேவைகளுக்கு 140 பில்லியனும் பெற்ற கடன்களுக்கு வட்டி செலுத்த 44.8 பில்லியன் ரூபாவும் நிவாரணங்களுக்காக 267 பில்லியன் ரூபாவும் செலவிடப்படுகிறது. இந்த நிலையில் கூட துண்டு விழும் தொகை தனி இலக்கமாக குறைக்கப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# புதிய வீடுகள் கையளிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்ட பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான புதிய வீட்டுத்திட்டம் கையளிக்கும் நிகழ்வு நேற்றையதினம் மன்னார் எழுத்தூர் தரகன்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்திற்கு அருகில் நடைபெற்றது.

பனம்பொருள் அபிவிருத்திச் சங்கத்தால் ஒவ்வொரு வருடமும் 2 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு புதிய வீடு அமைத்துக் கொடுப்பது வழமையான நடவடிக்கையாகும்.

இந்த வருடமும் 2 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் ஒவ்வொரு வீடும் தலா 7 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மீள்குடியமர்வுத் திட்டம் குறித்து கலந்துரையாடல்

நீண்ட காலமாக உள்ள இடம்பெயர்விற்குள்ளான மக்களை மீளக்குடியமர்த்தும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் கொழும்பு பத்தரமுல்லவிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் நடைபெற்றது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிசாத் பதியுதீன், வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் இணைத்தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.


இதன்போது நீண்ட காலமாகவுள்ள இடம்பெயர்விற்குள்ளான மக்களின் நலன் பேணும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. விசேடமாக வீதி அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுகாதாரம், கல்வி வசதிகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன் போது மக்களை மீளக்குடியேற்ற முன் மேற்கூறிய வசதிகளை ஏற்படுத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

பெரும்பாலான மக்கள் 1991 ஆம் ஆண்டு இடம்பெயர்விற்குள்ளானார்கள். இவர்கள் மே மாதம் 2009 ஆம் ஆண்டு நாட்டில் இயல்பு நிலை ஏற்பட்டபின் தமது சொந்த இடங்களில் வசிக்க விருப்பம் தெரிவித்துள்ளார்கள். ஆனால், அவர்களது சொந்த இருப்பிடங்கள் முற்றிலுமாக அழிவடைந்த நிலையிலுள்ளது. அத்துடன் கல்வி, நீர்ப்பாசனம், வீதி வசதிகளும் போதியதாககாணப்படவில்லை.

மீளக்குடியமரவுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் செயற்றிட்டங்களை முன்னெடுக்குமாறு ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹால்டீன், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் ஆகியோர் இக்கலந்துரையாடலிற்கு சமுகமளித்திருந்தார்கள். (அ-2)

# தேசிய போக்குவரத்து ஆ.குழுவுடன் வடக்கு ஆளுநர் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறிக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும்பு பத்தரமுல்லவிலுள்ள ஆளுநர் உபஅலுவலகத்தில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் றொசான் குணவர்த்தன தலைமையிலான குழுவினர் ஆளுநருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார்கள். இதன்போது யாழ்ப்பாணம்-கொழும்பு பயணத்தில் ஈடுபடும் பேருந்துகள் தொடர்பாக ஆராயப்பட்டது. இதன்போது உரிய பாதை அனுமதிப்பத்திரமில்லாத பல பேருந்துகள் சேவையில் ஈடுபடுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. அவ்வாறான பேருந்து சேவைகளை தவிர்ப்பதற்கான வழிமுறைகளும் கலந்துரையாடப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகால போரில் யாழ்.குடாநாட்டு மக்கள் பல வருடங்களாக கொழும்பு உட்பட நாட்டின் ஏனைய பகுதிகளுக்கான போக்குவரத்து வசதிகளை பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கியிருந்தார்கள். கடினமான செலவுமிக்க பயணங்களை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்பட்டது.

தற்சமயம் போருக்கு பின்னரான இயல்பு நிலையினால் குடாநாட்டு மக்கள் இலகுவாக கொழும்பிற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பயணங்களை மேற்கொள்கின்றார்கள். பல முதலீட்டாளர்கள் வட மாகாணத்திற்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்த முன்வந்துள்ளார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9)

# மஹிந்த சிந்தனை பிரதிகள் பாக்.மாநாட்டில் கையளிப்பு

## அஸ்வர் எம்.பி. தெரிவிப்பு

இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற சார்க் சபாநாயகர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாநாட்டில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர் மஹிந்த சிந்தனையின் ஆங்கிலப் பிரதிகளை மாநாட்டில் பங்கு பற்றிய பேராளர்களுக்கு வழங்கியுள்ளார்.

மஹிந்த சிந்தனையின் முக்கிய அம்சங்கள் பலவற்றை பற்றி மாநாட்டின் இறுதி அமர்வில் அஸ்வர் உரையாற்றினார்.

குறிப்பாக பயங்கரவாத ஒழிப்பு, கிராமிய மீள்எழுச்சி திட்டங்கள் போன்றவை தொடர்பாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன் பின்னர் மாநாட்டுப் பேராளர்கள் மஹிந்த சிந்தனை பிரதிகளை பெற்றுக் கொள்வதில் மிகுந்த ஆர்வம் செலுத்தினர்.

இம்மாநாட்டில் சிங்கள மொழியில் உரை இடம்பெற்றதும் முக்கிய பதிவாகும். மாலினி பொன்சேகா எம்.பி. மாநாட்டு அமர்வில் சிங்கள மொழியில் பேச அந்த உரையை அஸ்வர் எம்.பி. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

பிரதிச் சபாநாயகர் சந்திம வீரக்கொடி மாநாட்டின் ஆரம்ப அமர்வில் உரையாற்றினார். (அ-2)

# பாடநெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆசிரியர் வலுவூட்டல் திணைக்களத்தினால் நடத்தப்படும் மேலதிக கற்கைநெறி (ALIC) சிங்களப் பாடநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மேலதிக மொழி விருத்திக் கற்கைநெறி நிலைய இணைப்பாளர் ஏ.அரியரத்னம் அறிவித்துள்ளார்.

இக்கற்கைநெறி வார இறுதி நாட்களிலும் பாடசாலை விடுமுறைத் தினங்களிலும் மொடியூல்களின் ஊடாகவும் நேர்முக அமர்வுகளினூடாகவும் நடத்தப்படும்.

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் அமைந்துள்ள மேற்படி பயிற்சி நிலையங்களில் இணைந்து கற்க விரும்புவோர் நிலைய இணைப்பாளர்களிடம் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)

# கங்காருவில் ஆஸி. செல்ல முற்பட்ட 83 பேர் கைது

சட்டவிரோதமாக மீன்பிடி படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 83 பேரை கடற்படையினர் நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் கங்காரு என்ற மீன்பிடிக்கும் படகு மூலம் அவுஸ்திரேலியா சென்று கொண்டிருந்த வேளை மிரிஸ்ஸ கடல்பகுதியில் இருந்து 15 மைல் தூரத்தில் கடற்படையினரால் துரத்திப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 48 தமிழர்களும் 32 சிங்களவர்களும் 3 முஸ்லிம்களும் அடங்குகின்றனர். இவர்களில் 78 பேர் ஆண்கள் எனவும் 5 பேர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வவுனியா, கிளிநொச்சி, சிலாபம், மட்டக்களப்பு, நுவரெலியா, வத்தளை, வென்னப்புவ ,மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் எனவும் மேலதிக விசாரணைகளுக்காக காலி துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரவு செலவுத்திட்டம்-2013

## ஒரே பார்வையில்

01

அறிமுகம்


1.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது அரசாங்கத்தின் எட்டாவது வரவு செலவுத்திட்ட உரையினை இப்பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதனையிட்டு உண்மையில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். தொடராக ஏழு வருடாந்த வரவு செலவுத்திட்டங்களை இச்சபைக்கு சமர்ப்பித்ததன் மூலம் நம்பிக்கையினை பெற்றுள்ளதுடன் மஹிந்த சிந்தனை எதிர்கால தூரநோக்கினை அடிப்படையாகக் கொண்டு சமாதானம், மீள் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்தி பாதையொன்றில் இந்நாட்டினை செலுத்துவதற்கு எமது அரசாங்கத்தினால் முடியுமாக இருந்தது என்பதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.

1.2 இவ்வரவு செலவுத்திட்டம் மூன்று முக்கிய நிகழ்வுகளின் பின்னணியில் சமர்ப்பிக்கப்படுகின்றது. முதலாவது, இப்பாராளுமன்றம் 58 ஆவது பொது நலவாய பாராளுமன்ற மாநாட்டினை நடத்தி முடிப்பதற்கான அனுசரணையை வெற்றிகரமாக வழங்கியுள்ளது. வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எமது நாடு யுத்தத்திலிருந்து சமாதானம் மற்றும் மீள் கட்டமைப்பிற்கு எவ்வாறு மாறியுள்ளது என்பதை கண்டு கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை இம்மாநாடு வழங்கியது. எமது நாட்டின் நன்மதிப்பினை வெளிநாடுகளில் களங்கப்படுத்துவதற்கு எல்ரீரீஈ ஊதுகுழல்கள் மேற்கொண்ட பிரசாரங்கள் அடிப்படையற்றவை என்பவை அவர்கள் சான்றுகளுடன் உணர்ந்து கொண்டார்கள். தமது அரசியல் வேறுபாடுகளை பின்னால் தள்ளி வைத்து விட்டு இந்நிகழ்வினை வெற்றிகரமாக இடம்பெறச் செய்வதற்கு ஒன்றுபட்ட முயற்சியினை வழங்கிய கௌரவ சபாநாயகர், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர், கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

1.3 இரண்டாவது, தற்போது நாம் மூன்று வித்தியாசமான மாகாணங்களில் மாகாண சபை தேர்தல்களை நிறைவு செய்திருக்கின்றோம். இம்மூன்று மாகாணங்களும் நாட்டின் சனத்தொகையில் நான்கில் ஒரு பகுதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

அனைத்து கட்சிகளும் இத்தேர்தல்களில் பங்குபற்றியதுடன் சனநாயகத்தின் மீது நம்பிக்கையினையும் வெளிக்காட்டின். தேர்தல்கள் சமாதானமாக இடம்பெற்றன. இது அனைத்து கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் பிரச்சினைகளின் போது தமது நிலைப்பாட்டினை மேற்கொள்வதற்கான சிறந்ததொரு பரீட்சார்த்தமாகக் காணப்பட்டது. கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி உபாயங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கான சிறந்த இடைக்கால பரீட்சையாகவும் இது அமைந்தது. அனைத்து சமூகங்களையும் சேர்ந்த மக்கள் அனைவரும் வரட்சியினால் பாதிக்கப்பட்ட வாழ்க்கை நிலையிலும் பல சுமைகளையும் சமாளித்துக் கொண்டு எமது பணிகளின் மேல் அசையாத நம்பிக்கையினை தொடர்ந்தும் வைத்திருக்கின்றனர் என்பதனையிட்டு அரசாங்கம் ஊக்கமடைந்துள்ளது. கிழக்கு மாகாணத்திலுள்ள மக்கள் அம்மாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் மீள் கட்டமைப்பு பணிகளுக்காக அரசாங்கத்தில் அவர்களது நம்பிக்கையினை வைத்திருப்பதன் மூலம் நா மும் ஊக்கமடைந்துள்ளோம்.

1.4 இதேபோன்று வடமாகாணத்திற்கும் எமது அர்ப்பணிப்பினை மாற்றும் வகையில் அரசாங்கம் பல்வேறுபட்ட அபிவிருத்தி முன்னெடுப்புக்களை செயற்படுத்தியுள்ளது. மக்கள் தமது சிறுவர்களை எல்ரீரீயினரிடம் பறிகொடுக்கும் பீதியிலிருந்து விடுபட்டு சாதாரண குடும்ப வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர். மின்சாரம், கல்வி, நீர் மற்றும் சுகாதார வசதிகளின் அடைவு துரித முன்னேற்றம் கண்டுள்ளது. வங்கித்தொழில் மற்றும் நிதி நிறுவனங்கள் விரிவாக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டம் தகைமையுடைய குடும்பங்களுக்கு சமுர்த்தியின் பயன்களை வழங்கும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் தென்னிலங்கைக்கு கல்விச் சுற்றுலா மேற்கொள்வதன் மூலம் மகிழ்ச்சியடைகின்றனர். அதேபோன்று அவர்கள் அலரி மாளிகைக்கு விஜயம் செய்வதுடன் என்னுடனும் உரையாடுகின்றனர். நான் அவர்களின் முகங்களிலிருந்து புதிய நம்பிக்கைகளை காண்கின்றேன்.



1.5 பொருளாதார வளர்ச்சிக்காக புதிதாக கிடைக்கப் பெற்ற சூழலின் பால் வடக்கு மக்கள் காட்டுகின்ற ஆர்வம் மிகவும் உறுதியானதாகும். 70,000 குடும்பங்களுக்கு குடிநீர் வசதியினை வழங்குகின்ற யாழ்ப்பாணம்-கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்தினை செயற்படுத்துவதனை வடக்கிலுள்ள மக்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

அவர்கள் இரணைமடுகுளத்திற்கு நீரைக் கொண்டு வருகின்ற மொறகஹகந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் மிகவும் ஆர்வம் கொண்டுள்ளனர். இந்த வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னர் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாவட்ட மதியுரை கூட்டங்களில் பங்குபற்றிய உள்ளூர் பிரதிநிதிகளை சந்தித்ததன் மூலம் நான் ஊக்கமடைந்துள்ளேன். சமாதானம் மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கு சனநாயக பிரதிநிதித்துவத்திற்கு வசதியளிப்பதற்காக அடுத்த வருடம் மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கும் உறுதியான அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

1.6 மூன்றாவது, இப்பாராளுமன்றம் உள்ளூராட்சி சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மற்றும் உள்ளூராட்சி சபைகள் (திருத்தச்) சட்டமூலம் இரண்டினையும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. இது உள்ளூராட்சி மன்றங்களுக்கு 60 சதவீதமான பிரதிநிதிகளை வட்டார அடிப்படையில் தெரிவுசெய்வதற்கும் எஞ்சியவர்களை விகிதாசார முறையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கும் மக்களுக்கு இடமளிக்கின்றது. மேலும் மக்களை அவர்களது தொகுதி தொடர்பான விடயங்களை அவர்களது தொகுதி பிரதிநிதிகளுடன் நேரடியான தொடர்பை ஏற்படுத்திப் பெற்றுக்கொள்வதற்கு இது இயலச்செய்கின்றது. இந்த புதிய [illegible] வீனங்களையும் [illegible] தனிப்பட்ட பகைமைகளையும் இல்லாதாக்குகின்றது.

2. 2006-2010 முதல் ஐந்து வருட திட்ட உபாயத்தின் மீளாய்வு

2.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, மஹிந்த சிந்தனை புதிய இலங்கையினை நோக்கி திட்டத்தினை மையமாகக் கொண்டு 2006 முதல் 2010 வரையான முதல் ஐந்து வருட அபிவிருத்தியானது, ஏறக்குறைய மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வடக்கில் நிலவிய மோசமான பயங்கரவாத யுத்த த்திற்கு மத்தியில் செயற்பட்டது. இதில எமது பெறுமதியான பல உயிர்களையும், வளங் கள் மற்றும் வாய்ப்புக்களையும் கிரயமாக கொடுக்க வேண்டியேற்பட்டது. நாடு மக்களின் அடிப்படைச் சுதந்திரத்தினை மறுக்கும் அவசரகால சட்டங்களின் மூலம் ஆட்சி செய்யப்பட்டது. ஆற்றல் குன்றிய உட்கட்ட மைப்பினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. வறுமையினை குறைப்பதற்கும் விவசாயத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கும் வரவு செலவுத்திட்டத்திலிருந்து வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. கிராமிய பாதைகள், நீர்ப்பாசனம், மின்சாரம், நீர் என்பன கிராமியப் பொருளாதாரத்தை தரமுயர்த்துவதற்காக விரிவாக்கப்பட்டிருக்கவில்லை. அரச தொழில்முயற்சிகளின் தொழிற்பாட்டினை வினைத்திறனுடன் பேணுவதற்கு எவ்வித மூலதன உள்ளீடும் காணப்படவில்லை. அரசாங்க சேவை வழங்கல் நுட்பமுறை பலவீனமாகக் காணப்பட்டது. திட்டமிடப்படாத திறந்த பொருளாதார முன்னெடுப்புகள் உள்நாட்டு தொழில்முயற்சிகளை புறந்தள்ளின. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது உயர்வாக காணப்பட்டதுடன் படுகடன் மொ.உ. உற்பத்தியினை விட அதிகரித்துக் காணப்பட்டது. பணவீக்கம், வேலையின்மை மற்றும் வறுமை என்பன உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டன. எமது நாடு முற்றிலும் பூகோளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய ஒரு தேசமாகக் காணப்பட்டது.

2.2 இவையனைத்தையும் மிக குறுகிய காலத்திற்குள் நாம் மாற்றியமைத்தோம். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. கண்ணிவெடிகளினால் நிரம்பியிருந்த நிலங்களில் அவை அகற்றப்பட்டன. இடம்பெயர்ந்தவர்களின் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் என்பன பூர்த்தியடைந்தன. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் வாழ்வாதாரம் புத்தெழுச்சி பெற்றது. துறைமுகங்கள், விமான நிலையங்கள், பாதை மற்றும் பாலங்கள், அதிவேக பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல், நகரமயமாக்கல் மற்றும் கிராமிய வசதிகள் என்பவற்றில் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பன ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரச தொழில் முயற்சிகள் மீள் உயிரூட்டம் பெற்றன. உரமானியம் மற்றும் பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு தேவையான நலன்பு[illegible]ங்கள் என்பன விரி வாக்[illegible] நெற்சந்தைப்படுத்தல் சபை மற்றும் லக் சதொச என்பன மீளத்தாபிக்கப்பட்டதுடன் விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கான ஒத்துழைப்பு வசதிகள் விரிவாக்கப்பட்டன.

2.3 முதலாவது ஐந்து வருட திட்டக் காலப்பகுதியின் இறுதியில் பொருளாதாரமானது முன்னர் காணப்பட்ட 5 சத வீதத்திலிருந்து 8 சதவீத வளர்ச்சியினை அடைந்தது தலா வருமானம் 2005 இல் காணப்பட்ட 1,240 ஐக்கிய அமெரிக்க டொலரிலிருந்து 2,800 ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது. பணவீக்கம் 7 சதவீதமாக

4. வீழ்ச்சியடைந்ததுடன் வேலையின்மையானது முன்னர் காணப்பட்ட இரட்டை எண்களிலிருந்து 5 சதவீதமாக குறைந்தது. வறுமை 15.6 சதவீதத்திலிருந்து 8.9 சதவீதமாக குறைவடைந்தது. வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை 10 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகக் குறைக்கப்பட்டதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் 100 சதவீதத்திலிருந்து 80 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. சர்வதேச ஒதுக்குகளின் மூலம் பேணப்பட்ட வெளிநாட்டு ஸ்திரத்தன்மை ஏறக்குறைய 7 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாகப் பேணப்பட்டது. இவை அனைத்தும் உயர்ந்த எண்ணெய் விலைகளின் அதிகரிப்பு, சர்வதேச பொருளாதார அழுத்தம் , இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மோசமான கால நிலை மாற்றங்கள் என்பவற்றுக்கு மத்தியில் அடையப் பெற்றனவாகும்.

3. சட்டம் மற்றும் ஒழுங்கினை உறுதிப்படுத்தல்

3.1 கௌரவ சபாநாயகர் அவர்களே, சமாதானம் மற்றும் அபிவிருத்தியை நோக் கிய எமது நாட்டின் வெற்றிகரமான பயணம் எமது படைவீரர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் அர்ப்பணிப்பும் தியா கங்களும் இல்லாதிருந்திருந்தால் சாத்தி யமானதாக இருந்திருக்காது. நாம் அவர் களது அர்ப்பணிப்பினை தொடர்ந்தும் பாராட்டுதல் வேண்டும். 2011 வரவு செல வுத்திட்டத்தில் அவர்களது குடும்ப சூழ்நி லையினை மேம்படுத்துவதற்கு பாதுகாப்பு படையிலுள்ள எவரேனும் உறுப்பினரின் மூன்றா வது குழந்தை பிரசவத்தின் போது ரூபா 100,000 இனை நான் வழங்கி னேன். 2012 வரவு செலவுத்திட்டத்தில் இதனை பொலிஸ் படையினருக்கும் நான் விரிவாக்கினேன்.

2012 வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு படை வீரர்களின் ஒவ்வொரு பெற்றோருக்கும் ரூபா 750 மாதாந்த கொடுப்பனவொன்றாக வழங்கப் பட்டது. ரண விரு. திவிநெகும விசேட கடன் திட்டம் அங் கவீனமற்ற படைவீரர்களுக்கு மத்தியில் சுயதொழில் வாய்ப்பினை ஊக் குவிப்பதற்காக செயற்படுத்தப்பட்டுள்ளது. இக்குடும்பங்களின் பெரும்பாலானவற்றின் வீடமைப்பு நிலைமைகள் திருப்திகரமானதாக இல்லை. இதனால் பாதுகாப்பு படை வீரர்களின் குடும்பங்களின் வீடமைப்பு நிலைமைகளை மேம்படுத்துவதற்கு மூன்று வருட புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை செயற்படுத்துவதற்கு நான் முன்மொழி கி ன்றேன். மேலும் இதனை 2013 இலிருந்து செயற்படுத்தப்படுவதற்கு ரண விரு அதிகார சபைக்கு ரூபா ஆயிரம் மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொ ழிகின்றேன்.

3.2 கௌரவ சபாநாயகர் அவர்களே, யுத்தத்திற்கு பின்னரான சூழ்நிலையில், பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு துறையினரின் பொறுப்பு க்கள் நாடுமுழுவதிலும் சட்டம் ஒழுங்கிணை செயற்படுத்துவதில் நியாயமான அளவு அதிகரித்துள்ளது. எனவே பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்பு சேவையின் தொழிற்றிறன், தராதரங்கள் மற்றும் வசதிகள் என்பன உறுதிப்படுத் தப்பட வேண்டியுள்ளன. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எளிமை, ஆடம்பரம் இவற்றில் எதை விரும்புவீர்கள்?

வித்தியா சாவகச்சேரி,

பெண்களின் கூந்தலுக்கு உண்மையிலே மணம் உண்டா?

சம்போ கம்பனிக்காரர் களிடம் கேட்க வேண்டிய கேள்வி போதுமப்பா ஆள விடுங்க!

ஜெயரூபன், பருத்தித்துறை

அன்பின் வியாசரே!

எளிமை, ஆடம்பரம் இவற்றில் எதை விரும்புவீர்கள்?

எளிமைதான் உண்மையானது, அழகானது, நிலையானது. ஆடம்பரம் நம்மூர் கரன்ட் போல எப்ப வரும் எப்ப போகும் எண்டு தெரியாது.

த.அனோஜா, முல்லைத்தீவு

வியாசரே!

இன்றைய மாணவர்கள் நாயன்மார்களின் தேவாரம் பாடமாக்குகிறார்களா? சினிமாப் பாட்டு பாடமாக்குகிறார்களா?

அனோஜா இன்றைய சினிமாப்பாட்டு பாடமாக்கக் கூடிய மாதிரி இருக்கா? முடிஞ்சா ஒரு பாட்ட முழுசா பாடும் பாப்பம்.

கிசோர், நெல்லியடி

வியாசரே!

உடலை தினமும் சுத்தம் செய்யும் மனிதன் மனதின் சுத்தமும் அவசியம் என்பதை அறிய வில்லையா? அல்லது அக்கறையில்லையா?

பார்த்தால் உடல் சுத்தம் தெரியும் உள்சுத்தம் பழகினால்தான் புரியும். அக்கறையில்லை எண்டில்லை எல்லாம் சுயநலம் தான்.

ச.தவமணிதேவி, மட்டுவில்

வியாசரே!

இந்தப்பகுதி தொடருமா? தங்களை நம்பலாமா?

அம்மா தவமணிதேவி நம்பிக்கைதான் வாழ்க்கை.

தர்மிலா, நெல்லியடி

வியாசரே!

ஞாயிறு காலை பத்திரிகையை பிரித்து வியாசர் பதில்கள் பகுதியை பார்க்கும் போது என் கேள்விக்கான விடை இல்லையென்றால் என்ன செய்யலாம்?

முயற்சி திருவினையாக்கும்

அன்ரன், நாவாந்துறை

வியாசரே!

போக்குவரத்து நெரிசல் இப்படியே போனால்?

இறப்பு பதிவுகளும் கூடிக் கொண்டே போகும்

அஜிதா, கல்வியங்காடு

வியாசரே!

ஒரு ஆண் காதலிப்பதை ஒரு பெண் எவ்வாறு அறியலாம் என என் தோழி கேட்கிறாள். பதிலைச் சொல்லுங்க Please?

கண்ணையும் வாயையும் பார்க்கச் சொல்லும், காதல் அறிகுறி இருந்தால் தெரியும்.




தர்சா, கோண்டாவில்

வியா சேர்!

இன்ரநெற்றால் யாழ்ப்பாண மாணவர்களின் கல்வி பாழடைகிறதே என்ன செய்வது?



உலக நாட்டு நோய் யாழ்ப்பாணத்திற்கு வந்துவிட்டது. தடுக்க வழியே கிடையாது.

தர்மினி, கரவெட்டி

வியாசரே!

மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்?

தண்டனை வேண்டியதில்லை... தன் நெஞ்சே தன்னைச் சுடும்.

சாளினி, அல்வாய்

வியாசரே!

பெண்களை நெருப்பு என்று சொல்வதேன்?

அடுப்போடு நிற்பதால்....

மாற்றுப் பெயர் போட்டுக் கேள்வி எழுதுபவர்கள் பாடு திண்டாட்டமாகி விடும்.

குகன், அளவெட்டி

வியா!

ஆண்களை ஆடவர் என்று அழைப்பதேன்?



பெண்களின் சொல்லை கேட்டு ஆடுவதால்....

### மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பவர்களுக்கு என்ன தண்டனை வழங்கலாம்?

சாயி, கோண்டாவில்

வியாசரே!

நீர், கேள்விக்கு பதில் எழுதுவதை நிறுத்தி விட்டால்...?

அன்பு வாசகர்களே!
உங்கள் கேள்விகளை
ஆசிரியர், வியாசர் பதில்கள்,
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிரவுண் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

குறிப்பு: 10 சொற்களுக்குட்பட்டிருக்கும் கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

# எட்டிற்கு அடுத்தது என்ன?

ஒன்று, இரண்டு, மூன்று எனச் செல்லும் இலக்கங்களிலே எட்டிற்கு அடுத்த இலக்கம் என்ன? இதற்கு முதலாந் தரத்தில் கற்கும் பிள்ளையே பதிலளிக்கும் என எண்ணுவீர்கள் உண்மைதான். ஆனால், சற்று ஆழமாக சிந்தித்துப்பாருங்கள்.

ஒன்றிலிருந்து பத்திற்கு முந்தைய இலக்கம் வரை உள்ளவற்றை ஒன்றுக்கள் என கூறுகின்றோம். பத்திலிருந்து நூறுக்கு முதல்வரும் இலக்கம் வரை உள்ளவற்றை பத்துக்கள் என்கிறோம். அது போலவே நூறு தொடக்கம் ஆயிரத்திற்கு முதல்வரும் இலக்கம் வரை நூறுக்கள் என்றும் ஆயிரம் தொடக்கம் பத்தாயிரத்திற்கு முதல்வரும் இலக்கம் வரை ஆயிரங்கள் என அழைப்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறு இருக்கும் போது பத்துக்கள் வரிசையில் அறு (பது), எழு (பது), எண் (பது) எனச் சென்று நூறுக்களின் வரிசையில் வர வேண்டிய தொண் (நூறு) எனக் கூறுவது சரியா? அல்லது ஒன் (பது) எனக் கூறுவது சரியா?

இதேபோலவே அறுநூறு, எழுநூறு, எண்ணூறு எனச் செல்லும் நூறுக்களின் வரிசையில் தொண் (நூறு) எனச் சொல்வது சரியா? அல்லது ஆயிரங்களின் வரிசையில் வரும் தொளாயிரம் எனச் சொல்வது சரியா?

இதேபோலவே ஆறாயிரம், ஏழாயிரம், எட்டாயிரம் எனச் சென்று தொளாயிரம் எனச் சொல்வது சரியா? ஒன்பதாயிரம் என பத்தாயிரங்களில் வர வேண்டியதை சொல்வது சரியா? மேலும் பத்தாயிரங்களின் வரிசையில் அறுபதாயிரம், எழுபதாயிரம், எண்பதாயிரம் எனச் சென்று அடுத்ததை ஒன்பதாயிரம் எனச் சொல்வதா அல்லது நூறாயிரங்களின் வரிசையில் வரும் தொண்ணூறாயிரம் எனக் கூறுவது சரியா?

அடுத்து நூறாயிரங்களின் வரிசையில் அறுநூறாயிரம், எழுநூறாயிரம், எண்ணூறாயிரம் எனச் சென்று அடுத்து வருவதை தொண்ணூறாயிரம் எனச் சொல்வது தானே சரி.

அதாவது,

60, 70, 80, 90 இவ்விலக்கத்தை ஒன்பது என்றும்

600,700,800, 900 இவ்விலக்கத்தை தொண்ணூறு என்றும்

6000,7000,8000,9000 இவ்விலக்கத்தை தொளாயிரம் என்றும்

60,000, 70,000, 80,000, 90,000 இவ்விலக்கத்தை ஒன்பதாயிரம் என்றும்

6,00,000, 7,00,000, 8,00,000, 9,00,000 இவ்விலக்கத்தை தொண்ணூறாயிரம் எனவும் கூறுவதே சரி அவ்வாறு எனின் 9 இவ்வில கத்தின் பெயர் என்ன? இதுவே எனது வினா?

இலக்கங்களை தமிழில் கூறும் போது எட்டு என்ற இலக்கத்திற்கு அடுத்து வரவேண்டிய இலக்கத்தின் தமிழ்ப்பெயர் தவறிவிட்டது என்றே எண்ணுகிறேன். இதனால் மேலிருந்து ஒவ்வோர் படி கீழ் இறங்கி பத்துக்களின் பெயரை ஒன்றுகளுக்கும் நூறுக்களின் பெயரை பத்துக்களுக்கும் என தற்போது பயன்படுத்துகின்றோம். இது தவறல்லவா? அவ்வாறு எனின் எட்டிற்கு அடுத்த இலக்கத்தின் (தமிழ்ப்) பெயர்?.....

-விழிதரன்-

## ஐம்பது வீடுகளை அகற்ற வேண்டிய நிலை

நுவரெலியா யுனிக் விவ் பிரதேசத்திலுள்ள 50 இற்கும் மேற்பட்ட வீடுகளை முற்றாக அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய கட்ட ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

குறித்த வீடுகள் அமைந்துள்ள பிரதேச மக்கள் வாழ்வதற்கு ஏற்றதல்ல என்பது முதற்கட்ட ஆய்வுகளை அடுத்தே மேற்படி நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளதாக தேசிய கட்ட ஆய்வு நிலையத்தின் மண் சரிவு ஆய்வுப் பிரிவின் தலைமை புவியியல் நிபுணர் ஆர்.எம்.எஸ்.பண்டார குறிப்பிட்டுள்ளார்.

## சைவசமய செயற்பாடும் பரிசளிப்பு விழாவும்

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச்சங்க சைவத்திருமுறை விழாவும் சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய திருமண மண்டபத் தில் இளைப்பாறிய உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ.வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆசியுரையினை மூத்த நயினார் தேவஸ்தான குரு சிவஸ்ரீ க.கிருஸ்ணேஸ்வரக் குருக்கள் ஆற்றவுள்ளார்

(அ-9)

1717 FOLLOW US ON www.mobitel.lk
ரூ.100 இற்கு ரீலோட் செய்யும் போது
02 நிமிடங்களுக்கான IDD
நிமிடத்திற்கு 50 சதம்
மத்திய கிழக்கு உட்பட 50 நாடுகளுக்கு
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 433
Sri Lanka Telecom Mobitel We Care. Always.
(சி/1479)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீட்சா




பீட்சா டெலிவறி வாலிபர் ஒருவரின் காதலும் நம்பிக்கை துரோகமும் தான் பீட்சா படம் மொத்தமும்.

ஆடுகளம் நரேனின் பீட்சா படையில் டெலிவறி போயாக வேலைப்பார்க்கும் ஹீரோ விஜய் சேதுபதி, நாயகி ரம்யா நம்பீசனுடன் திருமணம் பண்ணாமலே ஒரே வீட்டில் குடும்பம் நடத்துகிறார். அம்மணி கர்ப்பம் ஆனதும் யாருக்கும் சொல்லாமல் கொள்ளமால் வீட்டுக்குள்ளேயே மோதிரம் மாற்றிக் கொள்கின்றனர் இருவரும். கடவுள் சாட்சியாக வந்த காதல் மனைவி என்பதால் அவரை வசதியாக வாழ வைக்க விரும்பும் விஜய் சேதிபதிக்கு எதிர்பாராமல் எக்கச்சக்க பயங்களும் பதற்றங்களும் ஏற்படுகின்றது. அவை விஜயை படுகுழியில் தள்ளினவா? இல்லை அவற்றையே விஜய் ப்ளஸ் ஆக்கி வாழ்வில் வசதியானரா...? அந்த வசதி நிலைத்ததா...? நீர் மூலமானதா...? என்பது பீட்சா படத்தின் முற்றிலும் வித்தியாசமும் விறுவிறுப்பான கதை!

சுந்தரபாண்டியன், நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம் என படிப்படியாக நடிப்புத் திறமையால் உயர்ந்து வரும் தென்மேற்கு பருவக்காற்று அறிமுக நாயகர் விஜய் சேதுபதி, பீட்சா படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் நன்றாக நடிக்கத் தெரிந்த நம்பிக்கை நட்சத்திரங்களில் ஒருவர் ஆகியிருக்கிறார் என்றால் மிகையல்ல!

முதல் இரண்டொரு காட்சிகளில் ரம்யா நம்பீசனுடன் நெருக்கமான காதல் காட்சிகளில் கிறக்கமாகவும் அடுத்தடுத்த காட்சிகளில் பேய், பிசாசுகளுக்கு பயப்படும் பயந்தாங்கொள்ளி கேரக்டரில் படு பயந்தாங்கொள்ளியாகவும் நடித்திருக்கும் விஜய் சேதுபதி அடுத்தடுத்த காட்சிகளில் திகிலை ஏற்படுத்தும் விதமாகவும் திடுக்கிட செய்யும் தில்லாலங்கடி தனமாகவும் நடிப்பில் நவரசங்களையும் காட்டி நம்மை தியேட்டர் சீட்டோடு கட்டிப் போடுகிறார்.

அதிலும் ரம்யாவுடனான ஆரம்ப ரொமான்ஸ் காட்சிகளில், நீ இப்படி கேர்லசா இருக்கியே? நான் எதுலயாவது அப்படி கேர்லசா இருந்திருக்கிறேனா... என்று கேட்க நான் இப்போ கன்சிவா இருக்கேன்... என ரம்யா அதற்கு பதிலளிக்க, சில விடயங்களில் நாம ரெண்டு பேருமே கேர்லசா இருக்கோம்... என்று வழிகின்ற இடத்தில் விஜய் சேது பதியின் நடிப்பில் தியேட்டரே சிரிப்பால் அதிர்வது குறிப் பிடத்தக்கது! இது மாதிரி படம் முழுக்க சுவாரஸ்யங்கள் நட்சத் திரங்களாய் கண் சிமிட்ட விஜய் சேதுபதியும் முக்கிய காரணமாக இருப்பது படத்தின் பெரும் பலம்!




நாயகி ரம்யா நம்பீசன் முந்தைய படங் களை காட்டிலும் நடிப்பிலும் கிளாமர் துடிப் பிலும் பீட்சாவில் சற்றே கூடுதலாக இருப் பது படத்தின் மற்றுமொரு பெரும்பலம்!

விஜய் சேதுபதி, ரம்யா நம்பீசன் மாதிரியே பீட்சா கடை முதலாளி ஆடுகளம் நரேன், ஓவியர் வீரசந்தானம் உள்ளிட்ட படத்தின் ஒன்றிரண்டு பாத்திரங்களும் படத்தின்ப்ளஸ்பாயிண்ட்டுகள்

கோபி அமர்நாத்தின் ப்ளீச் ஒளிப்பதிவும் சந்தோஷ் நாராயணனின் நச் இசை உள்ளிட்ட மற்றும் பல ப்ளஸ் பாயிண்டுகளுடன் புதியவர் கார்த்திக் சுப்பு ராஜ் புதிய களத்தில் இதுவரை தமிழ்சினிமா பார்த்திராத பட த்தை பீட்சாவாக படைத்திருப் பதற்காக பாராட்ட வேண்டும். ஆரம்ப காட்சிகளிலும் க்ளைமாக்ஸ் காட்சிகளிலும் இருக்கும் சூடும் சுவாராஸ்யமும் திகிலான நடு பகுதியிலும் இருந்திருந் தால் பீட்சாவின் பாட்சா இன்னும் பெரிதாக பலித்திருக்கும்.

மொத்தத்தில்பீட்சா தமிழ் சினிமா இதுவரை பார்த்திராதிகில் பாட்சா.

திரைவிமர்சனம்



# அடக் கொடுமையே...!



சமீபத்தில் வெளியான மாலைப் பொழுதின் மயக்கத்திலே படத்தில் நாயகியாக நடித்த 21 வயது பெங்களூரு அழகுப் பெண் சபா புட்டவா மஞ்சள் காமாலையால் சிறுநீரகங்கள் செயலிழந்து ஒக்டோபர் 22 ஆம் திகதி மரணமடைந்து விட்டார்.

# வவ்வால் பசங்க

வீட்டுக்கு உதவாத பிள்ளை என புறக்கணிக்கப்படும் ஒருவன் அந்த வீட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற தியாகம் செய்கிற கதை. குறும்பும் ஆக்ரோஷமும் கொண்ட இளைஞனாக ராகுல் அறிமுகமாகியிருக்கிறார். தனது கதாபாத்திரத்தை உணர்ந்து செய்திருக்கிறார். கதாநாயகி உத்ரா உண்ணிக்கு முக்கியத்துவம் இல்லை.

விறுவிறுப்பாக எழுதி இயக்கியிருக்கிறார் சுரேஷ்! எந்த நேரமும் மகளை திட்டிக் கொண்டிருக்கும் அப்பா காட்சிகள் போர்! வில்லன் முருகானந்தம் தன் எதிரி ராகுலுக்கு ஆதரவாக ட்விஸ்ட்டாகும் இடம் நச்!

# செல்லம் போட்ட குத்தாட்டம்



துள்ளி விளையாடு படத்தை வின்செண்ட் செல்வா இயக்க ஆர். பி ஸ்டுடியோஸ் தயாரிக்க யுவராஜ்-தீப்தி, ஜெய பிரகாஷ் ஆகியோர் நடிக்க உருவாகி வருகிறது. முக்கிய கதாபாத்திரத்தில் வரும் பிரகாஷ்ராஜ் ஒரு பாட்டு முழுக்க மும்பை மாடல் அங்கீதாவுடன் செம ஆட்டம் ஆடியுள்ளார்.

முழுக்க முழுக்க இந்தப் பாடல் ராஜஸ்தானில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் படமாக்கப்பட்டது. சண்டிக் குதிரசண்டிக் குதிர வண்டிக் குள்ள சிக்காத ஒண்டிக் குதிர என்ற மிக வேகமான பாடலுக்கு பிரகாஷ் ராஜ்ஆடியுள்ளார். அதுவும் விதவிதமான, கலர்ஃபுல்லான ஆடைகளுடன்... தனக்கு சாதகமான தகவல் வந்தால் மகிழ்ச்சியடையும் பிரகாஷ் ராஜ் அதை தன் குழுவுடன் ஆடிக்களிப்பதுபோல் காட்சிகள் படமாக்கப் பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலாலாவுக்கு பெருகுகிறது ஆதரவு; நோபல்பரிசு வழங்கவும் பரிந்துரை

பாகிஸ்தான் தலிபான்களுக்கு எதிராக போராடிய சிறுமிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க பரிந்துரைக்க வேண்டும் என பிரிட்டன் மக்கள் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் ஸ்வாட் பள்ளத்தாக்கை சேர்ந்த சிறுமி மலாலா யூசுப் சாய் தனது 11 வயது முதலே தலிபான் தீவிரவாதிகளுக்கு எதிராக போராடினார்.

இதனால் கடந்த ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி பாடசாலைக்கு செல்லும் மலாலா மீது தலிபான்கள் சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர். இந்நிலையில் காயமடைந்த அவள் பர்மிங்காம் வைத்திய சாலையில் தீவிர சிகிச்சை பெற்று வருகிறாள்.

தீவிரவாத எதிர்ப்பு கல்விக்காக போராடி வரும் சிறுமிக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளனர்.

மேலும் பாகிஸ்தான் வம்சாவளியை சேர்ந்த பெண் ஷாகிதா சவுத்ரி தலைமையில் ஏராளமானோர் மலாலாவுக்கு நோபல் பரிசு வழங்க பரிந்துரைக்க வேண்டும் என்று பிரதமர் டேவிட் கமரூனை வலியுறுத்தி பிரசாரம் செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக 30 ஆயிரம் பேர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றும் இங்கிலாந்து பிரதமரிடம்



அளிக்கப்படவுள்ளது.

இதற்கிடையில் மலாலாவுக்கு நோபல் பரிசு வழங்க கனடா, பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளிலும் ஆதரவு பெருகி வருகிறது.

இதேவேளை, மலாலாவை கௌரவிக்கும் வகையில் நவம்பர் 10 ஆம் திகதியை மலாலா நாளாக ஐ.நா. கொண்டாடுவதற்கு பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் மலாலாவை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி மலாலா நாளாக கொண்டாடப்படும் என ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனின் உலக கல்விக்கான சிறப்பு தூதரும் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமருமான கார்டன் பிரவுன் அறிவித்துள்ளார்.

மலாலா குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் கூறுகையில், மலாலா உலகில் உள்ள பெண் கல்வி உரிமைக்கான உலக அடையாளச்சின்னம்.

கல்வி ஒரு அடிப்படை உரிமை என்றும் அது தனி சமூகத்தின் வளர்ச்சி, சகிப்புத்தன்மை, குடியுரிமை ஆகியவற்றுக்கான பாதையாகவுள்ளது எனவும் கூறியுள்ளார். (அ-2)

## சுமத்திரா தீவில் நேற்று நிலநடுக்கம்

(யகார்த்தா)

இந்தோனேசியாவில் வடக்கு சுமத்திரா தீவில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

ரிக்டர் அளவில் 5.3 ஆக பதிவான நிலநடுக்கத்தால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

வீடுகளில் அயர்ந்து தூங்கிகொண்டி ருந்த மக்கள் அதிர்ச்சி அடைந் தனர். வீடுகளை விட்டு வெளியேறி விடியும் வரை தெருக்களில் தஞ்சம் புகுந்தனர்.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேத விபரம் இன்னும் வெளியிடப்படவில்லை. (அ)

## துருக்கியில் ஹெலிகொப்டர் விபத்து 17 இராணுவ வீரர்கள் உயிரிழப்பு

துருக்கி நாட்டின் தென் கிழக்கில் உள்ள சீர்ட் பகுதியில் குர்திஷ் தீவிரவாதிகளுக்கு எதிராக இராணுவத்தினர் சண்டையிட்டு வருகின்றனர். மலைப் பகுதியான இங்கு துருக்கியின் சிறப்பு படையை சேர்ந்த 17 பேர் ஹெலிகொப்டரில் இராணுவ முகாமிற்கு சென்றனர்.

அப்போது வானம் மிகவும் மேகமூட்டத்துடன் காணப்பட்டதால் ஹெலிகொப்டர் நிலை தடுமாறி விபத்துக்குள்ளானது. அதில் பயணித்த அனைத்து இராணுவ வீரர்களும் இறந்து விட்டனர்.

இந்த விபத்தின் பின்னணியில் குர்திஷ் தீவிரவாதிகள் உள்ளனரா என்ற கோணத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (அ)

## சீ.ஐ.ஏவின் பணிப்பாளர் பதவி விலகினார்

(வோஷிங்டன்)

அமெரிக்க உளவுப்பிரிவான சீ.ஐ.ஏவின் பணிப்பாளர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அமெரிக்க உளவுப் பிரிவான சீ.ஐ.ஏவின் பணிப்பாளராக டேவிட் பெட்ராஸ் கடமையாற்றி வந்தார்.

திருமண பந்தத்திற்கு புறம்பாக தொடர்பு ஒன்றை பேணியதாக டேவிட் ஒப்புக் கொண்டுள்ளார்.

அதாவது பவுலா போரட்வில் என்ற முன்னாள் பெண் இராணுவ அதிகாரியுடன் டேவிட் தகாத உறவு கொண்டிருந்தமை அம்பலமாகியுள்ளது. அவரது மின்னஞ்சல்கள் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தொழில் விதிகளுக்கு முரணாக செயற்பட்டமை அம்பலமாகியள்ளது. டேவிட்டின் இராஜினாமாவை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஏற்றுக் கொண்டுள்ளார்.

இவர் மிகவும் சொற்ப காலமே சீ.ஐ.ஏவின் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளார்.

சீ.ஐ.ஏவின் பணிப்பாளரின் நடவடிக்கைகள் குறித்து எப்.பி.ஐ உளவுப்பிரிவு விசாரணைகளை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இன்டர் போலின் தலைவராக பிரான்ஸ் பெண் நியமனம்



இன்டர் போல் அமைப்பின் தலைவராக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த அமைப்பின் கமிஷனராக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மிரியி பாலஸ்டிராசி (வயது 58) நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ் அமைப்பில் 184 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இவர் கடந்த 1975 ஆம் ஆண்டு முதல் இன்டர்போலில் பல்வேறு பதவிகளை வகித்தவர் என்பதும் பல முக்கியமான வழக்குகளை திறந்த முறையில் கையாண்ட நபர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

## ஆடம்பர பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஈரான் தடை விதித்தது

ஆடம்பர பொருட்களை இறக்குமதி செய்ய ஈரான் தடை விதித்துள்ளது.

ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரிப்பதாக சந்தேகம் கொண்ட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்துள்ளன.

ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் பெறுவதற்கும் ஏனைய நாடுகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இதனால் ஈரானின் பொருளாதார நிலை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

கச்சா எண்ணெய் விற்பனை மூலம் கிடைத்த வெளிநாட்டு நாணயத்துக்கு தற்போது ஈரானில் பற்றாக்குறை ஏற்பட்டுவிட்டது. எனவே ஆடம்பர பொருட்களை இறக்குமதி செய்ய அந்நாட்டு அரசு தடை விதித்துள்ளது.

இதன் மூலம் வெளிநாட்டு நாணயங்களை மிச்சப்படுத்த ஈரான் முடிவு செய்துள்ளது. துணிகள், இனிப்பு வகை, தின்பண்டங்கள், அழகுசாதனப் பொருட்கள் என 2 ஆயிரம் பொருட்கள் இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளன.

இந்த தடை மூலம் ஈரானுக்கு ஓராண்டுக்கு 20 ஆயிரம் கோடி ரூபாய் வரை வெளிநாட்டு நாணயங்கள் மிச்சமாகும்.

இது குறித்து ஈரான் வர்த்தகத் துறை அமைச்சர் ஹமீத் சப்தெல் குறிப்பிடுகையில், ஆடம்பர பொருள் இறக்குமதி 'தடை பட்டியலில் கணனி மற்றும் கைப்பேசிகளும் இடம்பெற்றுள்ளன.

தற்போதைய நிலையில் இந்த இரண்டு பொருட்களை மக்களுக்கு கிடைக்கச் செய்ய எங்களால் முடியவில்லை. எனவே, விரைவில் இந்த இரண்டு பொருட்களை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றார். (அ-2)

## உலக தரிசனம்

## தொழிற்சாலையில் தீ விபத்து! 2 பேர் மரணம்; 19 பேர் படுகாயம்



கனடாவின் கியூபெக்கில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு பேர் உடல் கருகி பலியாகியுள்ளதுடன் 19 பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

கியூபெக்கில் உள்ள ஷேபுரூகி எனும் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 19 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்கள் அனைவரும் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களின் முகம் மற்றும் மூச்சுக்குழல் தீ விபத்தில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## ஈரான் இராணுவத்தை விமர்சித்த நபர் கொலை விளக்கம் கேட்கிறது பிரான்ஸ்

தனது இராணுவத்தைப் பற்றி விமர்சித்த பிரெஞ்சு நபரை ஈரான் அரசு கைது செய்து சிறையில் அடைத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெஹக்ட்டி என்பவர் தனது வலைப்பதிவில் ஈரான் இராணுவத்தைப் பற்றி விமர்சித்து இருந்தார்.

இதனை கண்டித்து கடந்த மாதம் 28 ஆம் திகதி ஈரான் அரசு அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

இதன் பின்பு சில நாட்கள் சென்ற பின் அவரது உடலை பெற்றுக் கொள்ளுமாறு உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதை கேட்ட உறவினர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில் பெஹக்ட்டியின் மரணம் குறித்து தங்களுக்கு விளக்கமளிக்க வேண்டும் என பிரான்ஸ் அரசு ஈரானை வலியுறுத்தி கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் சிறையில் ஏன் மரணம் நிகழ்கிறது. சிறையில் நடக்கும் சித்திரவதைகள் குறித்து ஈரான் அறிய வேண்டும் என்பதே எங்கள் நோக்கம் என்றும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைகளை பாராட்டி விருது வழங்கி கௌரவம்

75 வயதிற்கு மேற்பட்ட மூத்த பிரஜைகள் 20 பேரை (10 ஆண்கள், 10 பெண்கள்) கௌரவிக்கும் முகமாக வயது முதிர்ந்தோருக்கான அரச சார்பற்ற ஆய்வு நிறுவகம் செயற்றிட்டம் ஒன்றை இலங்கையில் முதற்தடவையாக ஏற்பாடு செய்திருந்தது. இதன்படி கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப கேட்போர் கூடத்தில் தேச மானிய பிரட்மன் வீரக்கோன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த நிகழ்வின் போது 50 வருடங்களுக்கு மேலாக நாட்டிற்கு சேவையாற்றிய நபர்களை முன்னணி நடுவர் களை கொண்ட சபையொன்றால் அங்கீகரிக்கப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபரும் (போக்குவரத்து) வீதிப் போக்குவரத்து கல்வி நிறுவகப் பணிப்பாளருமான த. பேரின்பநாயகம் அவரது முன் மாதிரியான செயற்பாடுகள் மற்றும் நாட்டிற்கும் பொலிஸ் திணைக்களத்திற்கும் அவர் ஆற்றியுள்ள அர்ப்பணிப்புமிக்கதும் தனித்துவமான துமான சேவைகள் கருத்திற் கொள்ளப்பட்டு மேற்குறிப்பிட்ட ஆய்வு நிறுவத்தால் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இவர் கடந்த 28 வருடகாலமாக வீதிப் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய மற்றும் மாகாண ரீதியிலான பேரவைகள் அத்துடன் வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் தேசிய குழுக்கள் பலவற்றிலும் இணைந்து செயற்பட்டு வருகிறார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் , பாதுகாப்பு சேவை சார்ந்த உத்தியோகத்தர்கள், மோட்டார் வாகன பரீட்சகர்கள் அடங்கலாக பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய துறைகள் சார்ந்தோருக்கும் நாட்டின் 9 மாகாணங்களிலும் உள்ள நகரங்களில் கருத்தரங்குகளையும் செயலமர்வுகளையும் நடத்தி வருகிறார். மேலும் போக்குவரத்து நிர்வாகம், போக்குவரத்து கடமைகள் தொடர்பில் பெருந்தொகையான சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வருகிறார்.

வெளிநாடுகள் பலவற்றில் நடத்தப்பட்ட போக்குவரத்து நிர்வாகம், வீதி பாதுகாப்பு விபத்து தடுப்பு மற்றும் காயங்களைக் கட்டுப்படுத்தல் தொடர்பிலான பல சர்வதேச மாநாடுகள், தேசிய மாநாடுகள் மற்றும் பயிற்சி நெறிகள் பலவற்றில் பங்கு பற்றியுள்ளார்.

மோட்டார் வாகன சங்கத்தின் தலைவர் தம்மிக்க ஆட்டிக் கலவும் இவரது அதியுன்னத பங்களிப்பு , தலைமைத்துவம் மற்றும் பாதுகாப்பான சாரத்தியம் தொடர்பாக அச்சங்க உறுப்பினர்களுக்கு 25 வருடங்களாக தொடர்ச்சியான சேவைகளை வழங்கியமைக்காகவும் விசேட விருது வழங்கிக் கௌரவித்தார்.






**இவர் வழங்கிய சேவைகள் வருமாறு,**

2009 நவம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற இ.மோ.வா.சங்கத்தின் 105 ஆவது ஆண்டு நிறைவு கொண்டாட்டத்தின் போது இ.மோ.வா. சவின் ஆரம்பம் தொடக்கம் இன்று வரை அதனது வரலாறு தொடர்பான நன்கு அறிவூட்டும் தகவல்கள் மிக்க விடயங்களை விளக்கினார்.

2011 மார்ச் 10 ஆம் திகதியன்று ஐடியல் மோட்டர்ஸ் லிமிட்டெட்டுடன் இணைந்தவறான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டபோது இ.மோ.வா.ச. உறுப்பினராக வீதிப் பாதுகாப்புக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. அந் நிகழ்வின் போது போக்குவரத்து சட்டங்களும் அவற்றின் அமுலாக்கமும் தொடர்பில் உறுப்பினர்களுக்கு த.பேரின்பநாயகம் அவர்களால் விளக்கவுரை வழங்கப்பட்டது.

2011 மே 11 ஆம் திகதியன்று இ.மோ.வா. சங்கம் கொழும்பு மாநகர எல்லைக்குள் வரும் பாடசாலைப் பிள்ளைகள் மத்தியில் வீதிப் பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கருத்தரங்கினையும் செயலமர்வினையும் ஏற்பாடு செய்தது. இந்நிகழ்வில் த. பேரின்பநாயகம் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக பாடசாலைப் பிள்ளைகளுக்கு விளக்கங்கள் கூடியவாறு அறிவூட்டினார்.

2011 நவம்பர் 5 ஆம் திகதியன்று இ.மோ.வா. சங்க உறுப்பினர்கள் பொருட்டு இ. மோ. வா.ச. கேட்போர் கூடத்தில் தெற்கு அதி வேகப் பாதை வழியாக பாது காப் பான சாரத்தியம் எனும் விடயமாக கருத்தரங்கொன்றினை பேரின் பநாயகம் வெற்றி கரமாக நிகழ்த்தினார்.

# தி.மு.கவுக்கு ஆதரவாகவே செய்தி வெளியிட்டுள்ளேன்

## பல்டி அடித்தார் நாராயணசாமி



தி.மு.க.வுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே பிரச்சினையை உருவாக்கும் வகையில் எனது கருத்து திரித்துக் கூறப்பட்டுவிட்டது என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

இது தொடர்பாக சில நாட்களுக்கு முன்னர் பேட்டியளித்த நாராயணசாமி கூடங்குளம் அணு உலைக்கு முன்பு ஆதரவளித்து வந்த தி.மு.க. தற்போது பின்வாங்கி விட்டதாகவும் தற்போதும் அ.தி.மு.கவே ஆதரவளித்து வருவதாகவும் கூறியிருந்தார்.

இதற்கு பதிலளித்து தி.மு.க. தலைவர் கருணாநிதி வெளியிட்ட அறிக்கையில், கூடங்குளம் அணுமின் நிலையத்தை தி.மு.க. எதிர்ப்பதைப் போலவும் ஜெயலலிதா ஆதரிப்பதைப் போலவும் பேட்டி கொடுத்திருக்கிறார் நாராயணசாமி.

ஆனால் கூடங்குளம் அணு மின் நிலையத்தின் பணிகளையெல்லாம் ஒத்திவைத்துவிட்டு அந்தப் பகுதி மக்களுக்கெல்லாம் தெளிவு படுத்திய பின்னர்தான் பணிகளைத் தொடர வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் அமைச்சரவையைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி பிரதமருக்கு இத்தகவலை அனுப்பி வைத்தவர் ஜெயலலிதா.


கூடங்குளத்தில் போராட்டம் நடத்தியவர்களையெல்லாம் தலைமைச் செயலகத்திலேயே சந்தித்து அவர்களுக்கு ஆதரவு கரம் நீட்டியவர் ஜெயலலிதா.

இவையெல்லாம் மத்திய இணை அமைச்சர் நாராயணசாமிக்கு தெரியாமலே போய்விட்டதா?

இந்நிலையில் நேற்று மீண்டும் சென்னையில் செய்தியாளர்களை சந்தித்த நாராயணசாமி தி.மு.க.வுக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் இடையே பிரச்சினையை உருவாக்கும் வகையில் எனது கருத்து திரித்துக் கூறப்பட்டு விட்டது.

கூடங்குளம் அணு உலைக்கு தி.மு.க. எப்போதுமே ஆதரவு அளித்து வருவதாகவே நான் பேட்டியில் கூறியிருந்தேன் என்று அந்தர் பல்டி அடித்துள்ளார். (அ-2)

# மாவோ தீவிரவாதிகள் தாக்குதல்;நால்வர் பலி



ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாவோ தீவிரவாதிகள் நடத்திய அதிரடி தாக்குதலில் 3 பொலிசார் உட்பட 4 பேர் பலியாகினர்.

ஜார்க்கண்ட் மாநிலம் கிரிதித் மாவட்டத்தில் 40 இற்கும் மேற்பட்ட விசாரணை கைதிகளை ஏற்றிக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துவதற்காக பொலிஸ் வாகனம் சென்று கொண்டிருந்தது.

இந்த வாகனம் மீது மாவோயிஸ்டுகள் திடீர் தாக்குதல் நடத்தினர்.

தொடர்ந்து எதிர்த்தாக்குதல் நடத்திய 3 பொலிசார் மற்றும் ஒரு கைதி உட்பட 4 பேர் பலியாகினர்.

இந்தச் சண்டையில் வாகனத்தில் இருந்த சில கைதிகள் தப்பியோடியுள்ளதாக அஞ்சப்படுகிறது. (அ-2)

# கைதி முருகனிடமிருந்து கைபேசி பறிமுதல்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலை வழக்கில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகனிடம் இருந்த கையடக்கத்தொலைபேசி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

வேலூர் மத்திய சிறையில் உள்ள கைதிகள் சிறையில் இருந்து கொண்டே கையடக்கத் தொலைபேசிகளில் பேசுவதாகவும் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதாகவும் சிறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து சிறைத்துறை அதிகாரிகள் தலைமையிலான இலஞ்ச ஒழிப்பு பொலிஸார் நேற்று முன்தினம் வேலூர் சிறையில் அதிரடி சோதனை நடத்தினர்.

அப்போது முருகனிடம் இருந்து ஒரு கையடக்கத் தொலைபேசி, சிம் கார்டு மற்றும் மெமரிக்கார்டு ஒரு இறுவெட்டு என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அந்த கையடக்கத் தொலை பேசி மூலமாக முருகன் யார் யாரிடம் பேசியுள்ளார். சி.டியில் என்ன உள்ளது? என்பது குறித்த விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. (அ-2)

# ராஜேஷிற்கு பத்மவிருது வழங்குமாறு பரிந்துரை



மறைந்த பாலிவுட் சூப்பர் ஸ்டா ராக விளங்கிய ராஜேஷ்கண்ணாவுக்கு பத்மவிருது வழங்கப்பட வேண்டும் என தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது.

இந்தியாவில் பத்மவிருதுகள் என்பது இந்திய அரசால் வழங்கப்படும் நாட்டின் நான்காவது உயரிய குடியியல் விருதாகும்.

இதற்கமைய கலைத்துறையில் ஆற்றியபணிக்காக ராஜேஷ்கண்ணா, பாடகர் கைலாஸ்கேர் இயக்குநர் ரமேஸ்சிப்பி ஆகியோரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

நாட்டில் கலை, கல்வி, தொழில், இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சமூக சேவை மற்றும் பொது வாழ்வில் சிறப்பாக பங்களித்த குடிமக்களுக்கு பதக்கம் ஒன்றும் பாராட்டிதழ் ஒன்றும் கொடுக்கப்படுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால், உன்னுடைய பலவீனங்களைத் தெரிந்துகொள்.
- ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வெலிக்கடை உயிர்ப்பலிகள் எதனை உணர்த்துகின்றன?

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடந்த சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்துள்ள செய்தி இலங்கையில் சமகால சூழமைவை எடுத்துக் காட்டியுள்ளது.

பாதுகாப்பு செலவினங்களுக்காக ஏகப்பட்ட நிதியை அரசு ஒதுக்கிவருகின்ற நிலையில், வெலிக்கடைச் சிறைச்சாலையில் கைதிகளுக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கி சண்டையில் 27 பேர் பலியாகி யுள்ளனர்.

நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் வகையில், குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களை அடைத்து வைத்திருக்கக்கூடிய சிறைச்சாலையில் மிக மோசமான மோதல் சம்பவம் இடம்பெற்று, அதில் 27 பேர் பலியாகியுள்ளமை இலங்கை அரசின் பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பில் ஐயுறவை ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் இலங்கையின் அரசின் பாதுகாப்பு பந்தோபஸ்து நடவடிக்கை என்பது தமிழ் மக்கள் மீண்டும் ஒரு விடுதலைப் போராட்டத்திற்கு வித்திடக் கூடாது என்பதற்கானதேயன்றி, நாட்டில் அமைதி நிலையை ஏற்படுத்துவதற்கானதல்ல என்பதையே வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் நடந்த சம்பவம் நிரூபித்துள்ளது.

பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம். விடுதலைப் புலிகளை அழித்து விட்டோம் என்று கூறக்கூடிய அரசு,

27 பேரைக் கொல்லக்கூடிய மிக மோசமான துப்பாக்கி சமர் சிறைச்சாலையில் இடம்பெறுவதைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமை, பல்வேறு எதிர்வுகூறல்களுக்கு வழிவகுத்துள்ளது.

அதாவது 27 பேரைக் கொல்லக்கூடிய வகையில் சிறைச்சாலையில் ஒரு சமர் நடப்பதென்பது,

♦ இலங்கை அரசு சிங்கள இனம் சார்ந்த பாதுகாப்பு அச்சுறுத்தலைப் பற்றி அசமந்தமாக –அக்கறையற்று இருந்துள்ளது.

♦ இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தமிழ்க் கைதிகளுக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம். அதற்கான ஒருவகையான காட்டாப்பாகவும், பின்னாளில் தமிழ்க் கைதிகளுக்கு நடக்கவிருக்கும் ஆபத்துக்களுக்கான நியாயப்படுத்தலாகவும் இந்நிகழ்வு அமையலாம்.

♦ படைத்தரப்பின் முழுக் கவனமும் விடுதலைப்புலிகள் உயிர்ப்புப் பெறக்கூடாது என்பதே அன்றி, மற்று எதுவும் அல்ல என்றவாறும் வெலிக்கடைச் சம்பவத்தை நோக்கமுடியும்.

எதுவாயினும்; நாடு, அரசு, ஆட்சி, பாதுகாப்பு, அமைதி, சமாதானம் என்ற சொற்பதங்கள் இனம், மதம் என்ற பாகுபாட்டோடு அணுகப்படுமாயின், விளைவுகள் மிக மோசமாக அமையும் என்பதை எடுத்துக் காட்டுகின்ற ஒரு பூர்வாங்க உதாரணமே வெலிக்கடைச் சம்பவம் ஆகும்.

நீண்டகாலப் போக்கில் தமிழர்கள் நல்லவர் என்று தென்பகுதி மக்கள் கூறும் அளவிற்கும் நிலைமை உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# சமுர்த்தித் திட்டங்களை எதிர்ப்பது சரியானதல்ல!

## சில்வேஸ்திரி அலென்ரின் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி முத்திரையினை 54 ஆயிரம் குடும்பங்கள் பெறுவதோடு 80 ஆயிரம் மக்கள் பயனடைகின்றனர் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் தெரிவித்தார்.

யாழ்.வேம்படி உயர்தர பாடசாலையில் நேற்று நடைபெற்ற வாழ்வின் எழுச்சிக்கு சமுர்த்தி சக்தி எனும் கண்காட்சியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் சமுர்த்தித் திட்டத்தின் கீழ் பல வேலைத் திட்டங்களை நாம் செய்து வருகிறோம்.

இதில் மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கில் நடைமுறைப்படுத்தப் பட்ட திட்டமே வாழ்வின் எழுச்சியாகும்.

அரசுடன் இணைந்து நாம் மக்களின் நலன் பொருட்டு சேர்ந்து செயற்படுகின்றோம்.

மக்கள் வயிற்றில் அடிக்கும் முயற்சியே இத்திட்டத்தினை எதிர்ப்பவர்களுடைய நோக்கமாகும்.

இந்தப் பிரதேசத்தினை செழிப்பான பிரதேசமாக மாற்றுவதற்கு சமுர்த்தி உத்தியோகத்தர்கள் செயலாற்றுகின்றனர்.

இதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தினை எதிர்த்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுற்ற மக்களினை மீண்டும் துன்பத்திற்கு உள்ளாக்காமல் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படல் வேண்டும் என அவர் தெரிவித்தார். (ந-4)

## இந்தியக் கைதிகளுக்கு பாதிப்பில்லை

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 33 இந்தியக் கைதிகளும் பாதுகாப்பாக இருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகரகம் அறிவித்துள்ளது.

வெலிக்கடைச் சிறையில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதல் காரணமாக 27 கைதிகள் கொல்லப்பட்டு பலர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் சம்பவத்தின்போது இந்தியக் கைதிகளுக்கு பாதிப்புகள் எவையும் ஏற்படவில்லை என்று இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் மாலை முதல் வெலிக்கடை சிறைக் கைதிகளுக்கு எவ்வித உணவும் வழங்கப்படவில்லை.

நேற்று அதிகாலை இராணுவக் கொமாண்டோக்களின் உதவியுடன் சிறைச்சாலை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டமையை அடுத்தே உணவுகள் பரிமாறப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-11)

# தளபதி பரிதி உயிரிழக்கவில்லையாம்!

## சிங்களப் பத்திரிகை தகவல்

தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் கேணல் பரிதி எனப்படும் நடராசா மதிதரன் என்பவர் உயிரிழக்கவில்லை என கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலி ஆதரவாளரான பரிதி என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்துஉயிருக்குப் போராடிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சர்வதேச ஊடகங்கள் பரிதி உயிரிழந்துள்ளதாக அறிவித்துள்ளதாகவும் லங்கா தீப பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (ந-11)

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யா/வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பாடசாலையின் கலையரங்கில் கல்லூரி அதிபர்.கி.இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரும், கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளைத் தலைவருமான ஆர்.எஸ்.சிவசுப்பிரமணியம், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிறிஇராமச்சந்திரன், ஓய்வுபெற்ற பிரதேச செயலர் வ.வேலும்மயிலும் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ந-9)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### தெய்வமிதுதானே



பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்ற நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனாய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
வெறிகமழுஞ் சோலைசூ ழிலங்கைவாழ் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே

# முகமலர்ச்சியைப் பெற்றுத்தரும் தானதர்மங்களைச் செய்வோம்

அன்னை தெரேசா ஒருமுறை சொன்னார்; Give till it hurts கொடுங்கள். உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் வகையில் கொடுங்கள். இதனை எண்ணும்போது நம் தமிழர் பாரம்பரியத்தில் பேசப்படும் சிபி சக்கரவர்த்தி நினைவுக்கு வருகிறார். தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவைக் காப்பாற்ற, தன் உடலின் சதையை அறுத்துக் கொடுத்த அந்த மன்னர் அன்னை தெரேசா சொன்னது போல் உடலை வருத்தித் தந்தவர்.

தன்னை வருத்தி தன்னைப் பாதிக்கும் அளவுக்கு தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் காணிக்கையாக செலுத்திய ஏழைக்கைம்பெண்ணின் செயலை இன்று நற்செய்தி கூறுகின்றது. இதனை உற்றுநோக்கிய இயேசு பாராட்டுகின்றார். அந்தக் கைம்பெண் தன்னிடம் இருந்ததைப் போட்டார். பிழைப்புக்காக வைத்திருந்ததைப் போட்டார். நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் காணிக்கைப் பெட்டியில் போடுகிறார். அப்படி ஓர் ஆழ்ந்த நம்பிக்கை கடவுள்மேல்.

கடவுளே நான் இவ்வளவு தருகிறேன் அல்லது செய்கின்றேன். நீ இவ்வளவு தாரும் என்று பேரம் பேசுகின்றோம். ஆனால் இயேசு புகழ்ந்த கைம்பெண் வியாபார பேரங்களைக் கடந்தவர். கடவுளுக்குத் தன்னிடம் இருந்தவை எல்லாவற்றையும் மகிழ்வாகக் கொடுத்தவர். எனவேதான் இயேசுவின் இந்த மனமார்ந்த பாராட்டுக்களை அவள் பெறுகிறார். அந்தப் பெண் இந்தப் புகழுரையைக் கேட்டிருப்பாரா? காணிக்கை செலுத்திய திருப்தியுடன் காணாமல் போய்விட்டார். அந்தப் பெண்ணுக்கு பெயர் கூட இல்லை.

கடவுளுக்கு காணிக்கை என்று கூறிவிட்டு ஏழைகளைச் சுரண்டுகின்ற செயல் நடந்தால் அது கொடுமைதான். இதனை இயேசு கண்டிக்கிறார். இயேசு பாராட்டும் அக்கைம்பெண்ணைப் பொறுத்தமட்டில் அவருடைய உள்ளத்திலிருந்து எழுகின்ற அன்பு நம்மைக் கவர்ந்திழுக்கிறது. உன் முழு உள்ளத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக என்னும் அன்புக்கட்டளையை அக்கைம்பெண் நடைமுறையில் செயற்படுத்துகிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

கைம்பெண்ணின் ஒரு வெள்ளிக்காக மறைவான தியாகத்தின் உச்ச நிலை. தியாகச்செயல் ஆண்டவருக்கே செய்யப்பட்ட போதிலும் அது மறைவாக இருக்கவேண்டும். தன்னை வருத்துவதாய் இருக்கவேண்டும்.

இயேசு கொடுக்கும் முக்கியத்துவம் எப்பொழுதுமே பொன்னுக்கோ பொருளுக்கோ அல்ல. மனிதனுக்கே முத[illegible] முக்கியத்துவம். ஓய்வுநாள் மனிதருக்காக உண்டாக்கப்பட்டது. மனிதர் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை. பலியை அல்ல. இரக்கத்தையே விரும்புகிறேன். பாவத்தை அல்ல. பாவியையே பெரிதாகக் கருதுபவர். இவ்வாறு மனிதனையும் அவனது மன நிலையையும் முதன்மைப்படுத்துவதால் அவர்களிடமிருந்து வெளிப்படும் செயல்களின் எதார்த்தமும் வெளிப்படுகிறது.



### ம.பிரான்சிஸ்க்
### கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

ஏழைக்கைம்பெண் தன் வறுமையில் இருந்த அனைத்தையும் போட்டாள். இது தியாகம். பணக்காரன் பல கோடி யில் பல இலட்சத்தில் பலரும் பாராட்டும் மண்டபம் கட்டுவதில் என்ன தியாகம் இருக்கிறது என்பது இயேசுவின் பாராட்டில் புதைந்திருக்கும் பூதாகரமான கேள்வி. இந்தக் கேள்வியின் பதிலே சமதர்ம சமூகத்தின் வாழ்வாதாரம். இதுவே இயேசு விரும்பும் காணிக்கை, தியாகம்.

ஏழைக்கைம் பெண்ணிடம் விளங்கிய மனநிலையோடு தானதர்மங்களைச் செய்வோம். அது நமக்கு முகவரியைப் பெற்றுத் தரும். முகமலர்ச்சியைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விசேட அணிகளுக்கு இடையில் உதைபந்தாட்டம்; நாவாந்துறை சென். நீக்கில்ஸ், பாடும் மீன் வெற்றி

நாவாந்துறை சென்.நீக்கில்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற முதலாவது காற்பந்தாட்ட போட்டியில் நாவாந்துறை சென்.நீக்கில்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் காற்பந்தாட்ட லீக் தமது அங்கத்துவ விசேட எட்டு அணிகளுக்கிடையில் காற்பந்தாட்ட சுற்றுப்போட்டியை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தியது.

நாவாந்துறை சென்.நீக்கில்ஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் மயிலங்காடு ஞானமுருகன் அணிக்கும் இடையிலான போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல் எதனையும் போடவில்லை. இரண்டாவது பாதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கில்ஸ் அணி ஒரு கோலினை போட்டது. பதில் கோல் எதனையும் ஞானமுருகன் அணி அடிக்காததினால் சென்.நீக்கில்ஸ் அணி வெற்றி பெற்றது.

இரண்டாவது போட்டியில் அச்செழு வளர்மதி விளையாட்டுக்கழகமும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகமும் மோதியது. இதில் பாடும் மீன் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வென்றது.

# கொல்மஸ் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான டபிள்யூ. ஆர். கொல்மஸ் ஞாபகார்த்த கூடைந்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தனது கூடைப்பந்தாட்டத்திடலில் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் கடந்த வியாழக்கிழமை கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற கூடைப்பந்தாட்டப் போட்டியில் 50:15 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வென்றது.

சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி 27:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் மானிப்பாய் ஏஞ்சல் இன்ரநஷனல் பாடசாலைக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 48:07 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 34:07 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதேவேளை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் வியாழக்கிழமை 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான அரையிறுதி கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடைபெற்றது.

முதலாவது அரையிறுதியில் யாழ். திருக் குடும்பக் கன்னியர் மடமும் உடுவில் மகளிர் கல்லூரியும் மோதின.

அடுத்தடுத்து புள்ளிகளை பெற்று ஆட்டத்தில் யாருக்கு வெற்றி என்ற நிலை தெரியாமல் ஆடினர். போட்டி முடிவடையும் தருணத்தில் யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் 31:30 என்ற ஒரு புள்ளி வித்தியாசத்தினால் உடுவில் மகளிர் கல்லூரியை வெற்றி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் மருதனார் இராமநாதன் மகளிர் கல்லூரியை எதிர்த்து பண்டத்தரிப்பு மகளிர் உயர்தரப் பாடசாலை மோதியது. இதில் தொடக்கம் முதல் இராமநாதன் மகளிர் கல்லூரியின் ஆதிக்கம் காணப்பட்டது. இறுதியில் இராமநாதன் மகளிர் கல்லூரி 34:14 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

# உடுவில் கோட்ட காற்பந்து போட்டி; ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தி. சம்பியன்

சிறிமுருகன் வித்தியாலயம்



ஸ்கந்தவரோதயக் கல்லூரி




உடுவில் கோட்டப் பாடலைகளுக்கிடையிலான காற்பந்தாட்ட போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் வெற்றி பெற்றுள்ளது. உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்ட போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரியும் மோதிக்கொண்டன. இப்போட்டியில் முதல் பாதி ஆட்டத்தில் ஸ்ரீ முருகன் அணி ஒரு கோலினைப் போட்டது. தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத்திலும் மேலும் ஒரு கோலினை போட்டது.

இரண்டாவது பாதி இறுதி நேரத்தில் ஸ்கந்தவரோதய கல்லூரி அணி பதில் கோலை போட்டது. அந்தக் கோலுடன் ஆட்டம் முடிவுக்கு வரவே 2:1 என்ற கோல் கணக்கில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் வெற்றி பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையிடம் பணிந்தது நியூசிலாந்து



போட்டியின் ஆட்ட நாயகனாக இலங்கை அணியின் ஜீவன் மெண்டிஸ் தெரிவானார்.

இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான ஒரு நாள் போட்டியில் இலங்கை அணி டக்வேத் லூயிஸ் முறையில் 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நேற்று அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு அரங்கில் இடம்பெற்ற போட்டியில் நியூசிலாந்து -இலங்கை அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன முதலில் களத் தடுப்பை தீர்மானித்தார்.

போட்டி தொடங்க முன் மழை குறுக்கிட்டதால் போட்டி 32 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 32 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 131 ஓட்டத்தினை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அவ் அணியில் அதிகபட்சமாக மக்கலம் 30 ஓட்டத்தினை பெற்றார்.

பந்துவீச்சில் ஜீவன் மெண்டிஸ் 3 விக்கெட்டினையும் குலசேகர 2 விக்கெட்டினையும் ஹேரத் பெரேராதலா ஒருவிக்கெட்டினையும் கைப்பற்றினர்.

இலங்கை அணிக்கு வெற்றி இலக்கு டக்வேத் லூயிஸ் முறைப்படி 32 ஓவர்களில் 131 ஓட்டமாக நிர்ணையிக்கப்பட்டது. அவ் இலக்கினை இலங்கை அணி 26.2 ஓவர்களில் 3 விக்கெட்டினை இழந்து பெற்றுக் கொண்டது.

சண்டிமல் 43 ஓட்டத்தினையும் சங்கக்கார ஆட்டமிழக்காமல் 42 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டார்.

## கிரிக்கெட் இறுதியாட்டம்

[illegible]வடமராட்சி உபய கதிர்காம யூ.கே விளையாட்டு[illegible]கழகம் நடத்தும் கிரிக்கெட் இறுதி ஆட்டம் இன்று 1.30 மணியளவில் புத்தளை மகாவித்தியாலய மைதானத்தில் கழகத் தலைவர் எஸ்.மகிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தளை மகாவித்தியாலய அதிபர் கே.வி.என். சிவலிங்கம் கலந்துகொள்ளவுள்ளார்.

5 ஓவர்கள் கொண்ட இறுதி ஆட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் அணியை எதிர்த்து மாலு சந்தி [illegible]க்கல் அணி மோதவுள்ளது.

10 ஓவர்கள் கொண்ட இறுதி ஆட்டத்தில் நெற்[illegible]ழு கழுகு அணியை எதிர்த்து திருநாவலூர் அணி மோதவுள்ளது. (ந-24)

## து.வண்டி - மோ.சைக்கிள் விபத்து:இருவர் படுகாயம்

துவிச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் ஆவரங்கால் 10ம் கட்டை பருத்தித்துறை வீதியில் இடம்பெற்றுள்ளது.

துவிச்சக்கர வண்டியில் பயணித்த அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.பொன்னம்பலம் (வயது 60), மோட்டார் சைக்கிளில் பயணித்த அச்சுவேலி நாவற்காட்டைச் சேர்ந்த விஜயரட்ணம் அகிலன் (வயது 25) ஆகியோரே இதில் படுகாயமடைந்தவர்களாவர்.

படுகாயமடைந்த இவ் இருவரும் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-134)


# Youth Hot & Cool BAR with PIZZA

இதோ உங்களுக்காக வெகு விரைவில் புதிய சேவைகள் சகல வர்க்கத்தினருக்கும் ஒரே நேரத்தில் 300 பேர் வரை அமர்ந்து சுவைக்கக் கூடிய முறையிலும், பாரம்பரிய, இயற்கை விறகு கொண்டு வெதுப்பக்கூடிய வெதுப்பகம் உருவாக்கப்பட்டதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் Pizza தயாரிக்கத் தேவையான சகல பொருட்களும் (பால்கட்டி உட்பட (Cheese) அனைத்தும் இத்தாலி நாட்டிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்படுகின்றது என்பதையும் பெருமையுடன் தெரிவிக்கின்றோம்.

இளைஞர்களுக்கென்று அமைக்கப்படும் Hot & Cool Barல் சகல வித பானங்களுடன் உணவு வகைகளும் Pizza வையும் புதிய முறையில் ருசிபார்க்க பலவசதிகளுடன் உருவாக்கப்படுகின்றது என்பதையும், நமது நீச்சல் தடாகத்திலும் Hot & Cool Bar லும் அங்கத்துவம் பெறுகின்றவர்களுக்கு அனைத்து சேவைகளிலும் விலைக்கழிவு வழங்கப்படுவதோடு அங்கத்துவம் அற்றவர்களுக்கு நிபந்தனையின் கீழ் சேவைகள் வழங்கப்படும் என்பதையும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதன் ஆரம்பத் திகதியும், விலை விபரங்களும் சகல நாளிதழ்களிலும் வெகுவிரைவில் வெளியிடப்படும்.

குறிப்பு

விசேட சேவையாக நமது நீச்சல் தடாகத்தையும், Hot & Cool பாறையும் அனுபவிக்க வருவோருக்கு எம்மிடம் உள்ள பானத்திலொன்றும் அதனுடன் ஒரு பீசாவும் நியாயமான விலையில் தற்காலிக விளம்பரத்தையொட்டியும், அறிமுகத்தையொட்டியும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

Actif Hotels & Tourism

★★★ LUX Etoiles

No. 34, Chetty Street Lane, Nallur, Jaffna. Tel : 021 222 3966

www.luxetoiles.com (C-1485) Fax : 021 222 0606


## துவிச்சக்கர வண்டி....

உள்ள தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் பணிபுரிபவர்.

பணி நிமித்தம் நேற்று காலை துவிச்சக்கர வண்டியில் வேலைக்குச் சென்ற இவர், வீதியினை கடக்க முற்பட்டுள்ளார்.

இதேவேளை தாளையடியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த தனியார் பேருந்து துவிச்சக்கர வண்டியை வேகமாக மோதியது.

விபத்தில் சிக்கிய பிரஸ்தாபு பெண் குறிப்பிட்ட தூரம் வாகனத்தின் பின்னால் இழுக்கப்பட்டு சென்றுள்ளார்.

படுகாயமடைந்த இவர் உடனடியாக பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பாக தனியார் பேருந்து சாரதியை கைது செய்த கிளிநொச்சி பொலிசார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றார்கள்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ந-85)

## தனியார் பேருந்து....

காவல்துறையினருடனான பேச்சுவார்த்தைகளின் சாதக நிலைமையினாலும் மேற்படி பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், சேவையாளர்களுக்கு இடையில் இடம்பெற்ற முறுகல் நிலைமையின்போது காவல் துறையினர் தலையிட்டதை எதிர்த்தே இப்பணிப்புறக் கணிப்பை மேற்கொண்டோம்.

காவல் துறையினருடன் நடந்த பேச்சுவார்த்தையின்போது காவல்துறையினரால் கைது செய்யப்பட்ட சேவையாளர் இருவரை விடுதலை செய்தமையாலும் இப்பணிப்புறக் கணிப்பை கைவிட்டுள்ளோம் என குறிப்பிட்டார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்குமான தனியார் பேருந்து சேவை உரிமையாளர்களின் பணிப்புறக் கணிப்பு போராட்டமும் நேற்று மாலையுடன் கைவிடப்பட்டதாக தெரியவருகிறது. (ந)

## புதிய தூது....

நியமனம் பெற்று வந்துள்ளனர்.

இந்த இராஜதந்திரிகள் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் தங்களின் கடிதங்களை நேற்று கையளித்துள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ந-11)

## உதுல் பிரேமரட்ண....

ஜேவிபி உறுப்பினர்களுக்கிடையில் பெபிலியானவில் இடம்பெற்ற மோதலினைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜேவிபி ஆதரவாளர் ஒருவரும் இச்சம்பவத்தில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக கட்சியின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (ந-11)

## இலங்கை-தெ....

தென்கொரிய தூதுவர் ஜொன் கொங் சொய் தெரிவித்தார்.

1984ஆம்ஆண்டில் இடை நிறுத்தப்பட்ட குறித்த விமான சேவை இலங்கைக்கும் தென் கொரியாவிற்கும் இடையிலான ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ந)

## நல்லிணக்க செயற்பாடு...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் தோன்றியுள்ள பல பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் விரைந்து தீர்க்கப்படுவதையே சர்வதேச சமூகம் பெரிதும் விரும்புகிறது.

எனவே அங்கு தோன்றியுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசு மனித உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் விடயங்களில் அக்கறை காட்ட வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபஷ்விற்கு இரண்டாவது தடவையாவும் மக்கள் ஆணையை வழங்கியுள்ளனர். எனவே அவரால் தன் நாட்டிற்கு சிறந்த அரசியல் தலைமைத்துவத்தை வழங்கமுடியும் என நாங்கள் நம்புகின்றோம்.

நாட்டில் வாழும் சகல மக்களின் மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக சிறுபான்மை தமிழ் மக்களின் முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் சிறுபான்மை மக்களின் குறிப்பாக தமிழ் மக்களின் மனித உரிமைகள் உறுதிப்படுத்தபடாது இலங்கையில் சுபீட்சம் ஏற்படுத்தப்பட்டதாக கருத முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை என்பது அகில உரிமையாகும் எனவும் இலங்கையை மட்டும் இலக்கு வைத்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் உலகின் அனைத்து நாடுகளிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதுடன் அனைவரும் கௌரவமாக நடத்தப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு என பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார். (ந-11)

## சர்வாதிகார...

பல்வேறு வகையான போர்க்குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் நடத்தி சர்வதேச அரங்கின் கண்டனத்திற்கு ஆளாகியிருக்கின்றது.

ராஜபக்ஷ அரசு தொடர்ந்தும் சர்வாதிகார திசையை நோக்கி வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு பல்வேறு நிகழ்வுகளைச் சுட்டிக்காட்ட முடியும் என்றாலும், அண்மையில் நடைபெற்ற இரண்டு நிகழ்வுகளை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

பல வழக்குகளில் ராஜபக்ஷ அரசுக்கு எதிராகத் தீர்ப்பளித்த இலங்கை உச்ச நீதிமன்ற நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்க மீது நாடாளுமன்றத்திலேயே குற்றத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கான முயற்சிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்டதற்காக சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் பிரெடரிக்கா ஜேன்ஸ் என்பவரின் பதவி பறிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளுமே ராஜபக்ஷ அரசின் சர்வாதிகார அடையாளங்களாகும் என அவர் அறிக்கையில் தெரிவித்திருந்தார். (ந-11)

## 13 குறித்து...

போது 13ஆவது அரசியல் அமைப்பு திருத்தம் குறித்து இரண்டு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளனர்.

நாடாளுமன்ற கட்டிடத்தில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் 13ஆவது திருத்தம் ரத்துச்செய்யப்பட வேண்டும் என்பதில் விமல் வீரவன்ச தீவிரமான போக்கை வெளிப்படுத்தியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்யும்போது அதற்கான மாற்று தீர்வுகள் குறித்த கருத்துக்கள் ஆராயப்பட வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான குழுவினர் குறிப்பிட்டனர்.

இந்த நிலையில் தமது கட்சியின் பொதுச் சபையில் இது பற்றி இறுதி முடிபை எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (ந-11)

## இராணுவத்தை...

கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும், பாதுகாப்புப் பிரிவினர் தாக்குதல் குணத்துடனேயே சிறைக் கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

சிறைச்சாலைகளை சிறை அதிகாரிகளே சோதனையிடவேண்டும். ஆனால் அரசாங்கம் அனைத்துத் துறையிலும் இராணுவத்தை வைத்தே செயற்படுகிறது.

சிறைச்சாலையில் பதற்ற நிலை ஏற்பட்டால் அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வராமல், கைதிகளை தாக்கியமை அரசாங்கத்தின் பழிவாங்கல் தன்மையை உணர்த்துகிறது.

சிறை கைதிகளும் மனிதர்கள் என்று சுவர்களில் எழுதினால் மாத்திரம் போதாது: அவர்கள் அனைவரின் உயிருக்கும் அரசாங்கமே உத்தரவாதம் அளிக்க வேண்டும். ஆனால் தொடர்ச்சியாக அரசு அதனை செய்ய மறுத்துள்ளது.

இவ்வாறு முன்னணி சோஷலிசக் கட்சி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொமாண்டோ' நடவடிக்...

11 கைதிகள் இந்த இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டனர். மேலும் 20 பேர் காயங்களுக்குள்ளாகினர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரம் தொடர்பில் ஊடகங்களுக்கு முழுமையான விளக்கத்தை அளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் கூறுகையில், வெலிக்கடைச் சிறைக் கைதிகள் சட்டவிரோதமாக தொலை பேசிகளை உபயோகித்து குற்றச்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும், போதைப் பொருள் விற்பனை மேற்கொள்ளதாகவும் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையைச்சேர்ந்த 500 பேர் கொண்ட குழுவினர், சிறைச்சாலைக்குள் சோதனை நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

சிறைச்சாலைகள் திணைக்களம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே இந்த சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், இதற்குஎதிர்ப்புத் தெரிவித்த சிறைக்கைதிகள் அதிரடிப்படையினருக்கு எதிராக செயற்பட முற்பட்டனர்.

சிறைச்சாலைக்குள் சோதனை மேற்கொள்ளப்படுவதென்பது சாதாரண விடயமே. இதற்கமைய நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணியளவில் இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

முதலில், மகசின் சிறைச்சாலையில் இந்த சோதனை முன்னெடுக்கப்பட்டதை யடுத்து நண்பகல் 12 மணியளவில் வெலிக்கடை பிரதான சிறைச்சாலையில் சோதனைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருப்பினும், வெலிக்கடை பிரதான சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகள் இந்த சோதனை நடவடிக்கையை விரும்பவில்லை. அதனால், அவர்கள் அனைவரும் இணைந்துஒருகுழுவாகசெயற்பட ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் படையினரின் சோதனை நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க முற்பட்டனர். இதனடிப்படையில், சோதனைக்குச் சென்ற அதிரடிப்படையினரை இடையூறு செய்ய ஆரம்பித்தனர்.

இதற்கமைய அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட அதிரடி நடவடிக்கையை அடுத்து சிறைச்சாலையின் பிரதான வாயிலுக்கு அருகில் வந்தகைதிகள், குழு அடிப்படையில் படையினருக்கு எதிராக தீவிரமாக செயற்பட ஆரம்பித்தனர்.

அத்துடன் சிறைச்சாலைக்குள் இருந்த ஆயுதக் களஞ்சிய சாலையையும் உடைத்து அங்கிருந்த 70ற்கும் மேற்பட்ட துப்பாக்கிகளை கொள்ளையிட்டனர்.

இதனையடுத்து அதிரடிப்படையினர் அனைவரும் சிறைச்சாலையிலிருந்து வெளியேறினர். இதன் போது சிறைச்சாலைக்குள் எவ்விதமான ஒழுக்க நடவடிக்கையும் பேணப்படவில்லை. கைதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடிய சூழ்நிலையும் காணப்படவில்லை.

காரணம் ஆயுதக்களஞ்சியசாலையிலிருந்து கொள்ளையிடப்பட்ட 70இற்கும் மேற்பட்ட ஆயுதங்களை ஏந்தியவாறு அவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையிலும் படையினருக்கு எதிராக தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் மாலை 6 மணிக்கு பிறகு பாதுகாப்பு அதிரடிப்படையினர் மீது கைதிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளத் தொடங்கினர். இதற்கிடையில் பொலிஸார் அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து சிறைச்சாலைப் பகுதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையில் மாலை 6.30 மணியளவில் சிறைச்சாலைக் குள்ளிருந்து பிரதான வீதியை நோக்கி முச்சக்கரவண்டியொன்று வந்தது. அதில் சிறைக்கைதிகள் பலர் காணப்பட்டனர். அத்துடன் அவ்வண்டிக்கு பின்னால் மேலுமொரு தொகுதி கைதிகள் வந்துகொண்டிருந்தனர்.

இதன்போது முச்சக்கரவண்டியை வழிமறிக்க பாதுகாப்பு தரப்பினர் முற்பட்டதை அடுத்து அதிலிருந்த கைதிகள் சிலர் பாதுகாப்பு தரப்பினர் மீது துப்பாக்கி பிரயோகம் நடத்தினர்.

இதனையடுத்து அதிரடிப்படையினரும் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதை அடுத்து கைதிகளில் 11 பேர் அவ்விடத்திலேயே உயிரிழந்ததுடன் மேலும் 20 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். இச்சம்பவத்தை அடுத்து சிறைச்சாலைக்குள்ளிருந்த கைதிகள் தாங்கள் வைத்திருந்த ஆயுதங்களுடன் மிகவும் அமைதியற்ற விதத்தில் செயற்பட ஆரம்பித்தனர்.

அதன்போது அவர்களுக்குள் எந்தவொரு கட்டுப்பாடும் இருக்கவில்லை. சிறைச்சாலை

## வெலிக்கடை...

இடம் பெற்ற மோதலில் இதுவரை 27 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஆறு சடலங்கள் வைத்தியசாலையில் வைக்கப்பட்டதுடன் 11 சடலங்கள் நேற்றுச் சனிக்கிழமை காலையில் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து ஆராய்வதற்காக மூன்று உறுப்பினர்கள் அடங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

தேடுதல் நடவடிக்கையினைத் தொடர்ந்து 6 கைதிகளின் சடலங்களை இன்று (நேற்று) மீட்டுள்ளோம் ஏற்கெனவே 16 சடலங்கள் நேற்று முன்தினமிரவு வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளன என இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

இதேவேளை, சிறைச்சாலைக்குள் மேலும் தேடுதல் நடவடிக்கைகளை பொலிஸாரும் சிறைக் காவலர்களும் இணைந்து முன்னெடுத்துள்ளதுடன் சடலங்களின் எண்ணிக்கை உயர்வடையலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

கலவரத்தின் போது தான் இயங்கித் துப்பாக்கிகள் உட்பட 82 துப்பாக்கிகள் கைதிகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் குறைந்தது ஒரு சிறைக் காவலர் உள்ளடங்குவதாகவும் 13 பொலிஸார், 4 சிப்பாய்கள் உள் அடங்கலாக 43 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-11)

யின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாடு சிறைச்சாலை அதிகாரிகளுக்கே உள்ளது. இருப்பினும் அவர்களால்கூட சிறைச்சாலைக்குள் செல்ல முடியாத நிலைமை அப்போது ஏற்பட்டிருந்தது. இருப்பினும் நாம் இந்த பிரச்சினையை பேசித் தீர்க்க முற்பட்டோம்.

சிறைச்சாலைகள் அமைச்சர் கஜதீர சிறைச்சாலைகள் ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் அனைவரும் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். எவ்வாறாயினும் கைதிகளை சமாதானப்படுத்தி அவர்கள் வசமுள்ள துப்பாக்கிகளை மீளப் பெற்றுக்கொள்வதே எமது நோக்கமாக இருந்தது.

இருப்பினும் நள்ளிரவு 12.30 மணியாகியும் எமது முயற்சி பயனளிக்கவில்லை. இதனையடுத்து இராணுவத்தின் விசேட கொமாண்டோ படைப்பிரிவினர் மற்றும் இராணுவத்தின் உயரதிகாரிகள் இவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

காரணம் இங்கிருந்த எந்தவொரு பாதுகாப்பு அதிகாரிக்கும் சிறைச்சாலைக்குள் அப்போதைக்கு எவ்வாறானதொரு சூழ்நிலை காணப்படுகின்றது என்பது தெரிந்திருக்கவில்லை. 70இற்கு மேற்பட்ட துப்பாக்கிகளை ஏந்தியுள்ள கைதிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று திட்டமிட முடியாமல் இருந்தது.

அதனால் அவர்களை எதிர்கொள்ள பயிற்சிபெற்ற எதிர்கொள்ளக் கூடியவர்கள் தேவைப்பட்டார்கள். அதனாலேயே கொமாண்டோ படைப்பிரிவினர் இவ்விடத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

இதன்போது சிறைச்சாலைக்குள் இருக்கும் மற்றுமொரு ஆயுத களஞ்சியசாலையை உடைத்து அங்கிருக்கும் ஆயுதங்களையும் கொள்ளையிடும் முயற்சியில் கைதிகள் ஈடுபட்டுவருவதாக எமக்கு ஒரு தகவல் கிடைத்தது.

அத்துடன் தாக்குதல்களுக்கு மத்தியில் இந்த பிரதான வாயிலினூடாக தப்பிச் செல்லும் முயற்சியிலும் 200இக்கும் அதிகமான கைதிகள் குழுவொன்று ஈடுபட்டு வருவதாகவும் தெரியவந்தது.

அவர்களின் திட்டப்படி அக்குழுவினர் வெளியில் வந்திருந்தால் பாரியதொரு அழிவு ஏற்பட்டிருக்கும். இப்பகுதி இரத்த ஆறாக ஓடியிருக்கும். இதனைத் தடுப்பதற்கு முற்பட்ட இராணுவ கொமாண்டோ படையினர் சிறைச்சாலைக்குள் அதிரடியாக உட்புகுந்து விசேட இராணுவ நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்துக்குள் சிறைச்சாலையில் நிலவிய அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்தி சிறைச்சாலையை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். கொமாண்டோ படைப்பிரிவினர் சிறைச்சாலைக்குள் நுழைந்து தங்களது விசேட இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்த போதும் ஆயுதங்களுடன் இருந்த கைதிகள் பின்வாங்கவில்லை.

அவர்களும் இராணுவத்தினரை எதிர்த்து துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டவாறு முன்னேறவே முயற்சித்தனர். இருப்பினும். சிறைச்சாலையின் அனைத்துப் பகுதிகளுக்கும் வியாபித்த கொமாண்டோப் படையினர் தீவிர நடவடிக்கை நிலைமையை கட்டுப்படுத்தியது.

இதன்போது கொமாண்டோப் படையைச் சேர்ந்த ஆறு வீரர்கள் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அத்துடன் படையினருடன் பரஸ்பர மோதலில் ஈடுபட்ட கைதிகளில் 11 பேர் உயிரிழந்தனர். இந்த 11 பேருமே இந்த கலவரத்துக்கு தலைமை தாங்கியவர்களாவர். இவர்களே ஆயுதகளஞ்சிய சாலை உடைப்பு படையினர் மீது தாக்குதல் மற்றும் தப்பிச்செல்ல முற்பட்ட குழுவினராவர்.

இந்த 11 பேர் கொண்ட குழுவில் மரண தண்டனைக் கைதிகள் மூவர் அடங்குகின்றனர். இவர்களில் படுகொலைகள் பலவற்றுக்கு காரணகர்த்தாக்களான மரணதண்டனைக் கைதிகளான அசுவப்புலிகே ஜோதிபாலா (குபில), கங்கானம்மல்லாகே மலிந்த நிலேந்திர பொல்பொல (மாலன்) மற்றும் சில்வா ஆகிய மூவருமாவர்.

ஆயுள் தண்டனைக் கைதிகளான மஞ்சு ஸ்ரீ ஹர்ஷ (கோட்டை பௌத்த மதத் தேரரின் படுகொலையுடன் தொடர்புடையவர்) நிர்மல் அத்தபத்து துஷார சந்திர என்ற களு துஷார (இவர் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக்கோஷ்டி நபர்) திஸ்ஸ குமார (பாலியல் துஸ்பிரயோகங்களுடன் தொடர்புடையவர்) அஸ்வதீன் மலிக் சமீர பெரேரா (கொண்டமில) ஆகியோரும் உள்ளடங்குகின்றனர் என்றார். (ந-11)


## வேலைவாய்ப்பு

D.M.I அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு Trainee Managers, Assistant Managers, Supervisiors, Distributors தேவை.

அனுபவம், அனுபவமில்லாதவர்களும் விரும்பத்தக்கது.
தகுதி : O/L or A/L, Age : 18 - 35.
பயிற்சியளிக்கப்பட்டு நிரந்தர தொழில்வாய்ப்பும், வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.

- பயிற்சியின் போது ரூ. 12000 - 15000 வரை.
- பயிற்சியின் பின் ரூ. 50,000 க்கு மேல்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா.... முக்கியத்துவம் அளிக்கப்படும்.

தங்குமிட வசதியுண்டு.

(900) தொடர்புகளுக்கு : 0775566224, 0771906728, 0217200867

## பகுதி நேர வேலைவாய்ப்பு

அரச உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், திறமைகேற்ப ஊழியம் வழங்கப்படாத உத்தியோகத்தர்கள், மும்மொழி பாண்டித்தியமுள்ளவர்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்

**தேசிய தொழில் வங்கி**

# 72 பலாலிவீதி, இலுப்பயடி சந்தி யாழ்ப்பாணம்

(சி-1484) www.nationjobbank.com

## L.L. NO. 2490 DOHA QATAR நாட்டில் உடனடி வேலைவாய்ப்பு

உங்கள் வாழ்வுக்கு ஒளியூட்டுமுகமாக இலங்கை அரசாங்கத்தினாலும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்ட Air Trust வெளிநாட்டு முகவர் நிறுவனத்தினால் இம்மாதம் 17ஆம் திகதி Green Grass Hotel யாழ்ப்பாணத்திலும், 18 ஆம் திகதி Star Rest கிளிநொச்சி பரந்தனிலும் காலை 09.00 மணியிலிருந்து 05.00 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணும் தகுதியுடையவர்கள் உடன் நேரில் வரவும். (C1478)

குறிப்பு: டிக்கட், பியீரோ உட்பட விஸா கிடைத்தவுடன் மொத்தக் கட்டணமாக ரூபா 60 ஆயிரம் மட்டுமே அறவிடப்படும். House Maid (வீட்டுப் பணிப்பெண்களுக்கு 06 மாத சம்பளம் முற்பணமாகவும் மற்றும் அனைத்து செலவுகளும் முற்றிலும் இலவசமாக செய்து அனுப்பிவைக்கப்படும்.

| JOB | QTY | SALARY (Q.R) |
|---|---|---|
| மேஷன் (Mason) | 75 | 1,200-1,500 |
| இலக்ரிஷியன் (Electrician) | 20 | 1,200-2,000 |
| கார்பெண்டர் (Carpenter) | 28 | 1,200-1,500 |
| பெயின்டர் (Painter) | 18 | 1,000-1,200 |
| கம்பிக் கூடு கட்டுபவர்கள் (Steel Fixer) | 32 | 900-1,000 |
| உதவியாளர்கள் (Helpers) | 112 | 900-1,000 |
| சுத்திகரிப்பாளர்கள் (Cleaners) | 96 | 800-900 |
| சமையல்செய்பவர்கள் (Cook) | 05 | 1,000-1,200 |
| கணக்காளர் (Accountant) | 08 | 1,200-2,000 |
| சாரதிமார்கள் (Drivers) | 55 | 1,200-1,600 |
| A/C Technician | 16 | 1,200-2,000 |
| Welders | 12 | 1,200-2,000 |
| Marketing | 12 | 1,200-,4,000 |

1 QR = Rs. 36.75

சலுகைகளும் விதிமுறைகளும்
இலவசம் தங்குமிடம் போக்குவரத்து மருத்துவ வசதி
மேலதிக நேரம் உண்டு.
நாளாந்த வேலை நேரம் 8 மணித்தியாலங்கள்

17ம் திகதி Green Grass Hotel #33, Aasirwatham Lane, Hospital Road, Jaffna.
18ம் திகதி Star Rest Kandy Road, (Paranthan) Kilinochchi.

பதிவுகளுக்கு விரையுங்கள்
**AIR TRUST**
OVERSEAS MAN POWER CONSULTANT
#985, 1ST FLOOR MARADANA RD, BORELLA, COLOMBO-08
011 - 2676777, 075 0650084

மாபெரும் விசேட விலைக்கழிவு

## Jet D Express Courier Service




உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய (சி-1289)

| | | |
|---|---|---|
| Sweeden | Over 5 kg 1100/= | |
| Canada | Over 5 kg 1200/= | |
| Norway | Over 5 kg 1100/= | |
| Italy | Over 5 kg 1100/= | |
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1000/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1000/= | Over 11lg 850/= |
| Netharland | Over 5kg 1000/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1100/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1100/= | Over 11kg 850/= |

தீபாவளியை முன்னிட்டு



Note: 25kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

உலகின் முன்னணி சேவையின் ஊடாக உங்கள் உறவுகளுக்கு பொருட்களை அனுப்பிக் கொள்ளலாம்.

Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி, நவீன் சந்தை. (தனம்ரெக்ஸ் மேல்) யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place, Wellawatta, Colombo 06, T.P:- 0112363873 0776509909


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.